# இந்துத் திருமணச் சட்டம்

புலமை வேங்கடாசலம்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.



# இந்துத் திருமணச் சட்டம் *

## (The Hindu Marriage Act)

**புலமை வேங்கடாசலம்**, எம்.ஏ., பி.எல்.,
சிறப்பு ஆய்வாளர்,
மொழிபெயர்ப்புத் துறை, வளர்தமிழ்ப் புலம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு : 65

திருவள்ளுவர் ஆண்டு 2017 ஆடி, ஆகட்டு 1986

நூல் : **இந்துத் திருமணச் சட்டம்**

ஆசிரியர் : **புலமை. வேங்கடாசலம்**

விலை : உரு. **48 - 00**

பதிப்பு : முதற்பதிப்பு

அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக
மறுதோன்றி அச்சகம்,
தஞ்சாவூர்

# முன்னுரை

தமிழை நீதிமன்ற மொழியாகத் தமிழக அரசு அறிமுகப் படுத்தி ஆண்டுகள் பலவாகிவிட்டன. எனினும், நீதிமன்ற நடை முறைகள் முழுமையும் தமிழில் நடைபெறுகின்றனவாவெனில், இல்லை. காரணம், தமிழில் போதிய அளவுக்குச் சட்ட நூல்கள் இல்லாமையேயாகும். இக்குறையைக் களைந்து தமிழை முழுக்க முழுக்க நீதிமன்ற மொழியாக ஆக்கும் விதத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்வேறு சட்ட நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதற் கான பணியை மேற்கொண்டுள்ளது. இப்பணியின் முதல் முயற்சி யாகத் தற்போது '**இந்துத் திருமணச் சட்டம்**' வெளிவருகிறது.

இந்நூல், ஆங்கிலச் சட்டவிளக்க நூல்களைப்போன்று சட்டப் பிரிவுகள், விளக்கங்கள், வழக்குத் தீர்வுகள் ஆகியவற்றைக் கொண்டதாகும். தமிழில் இந்த அமைப்பு முறையில் எந்தச் சட்ட நூலும் இதுநாள் வரை வெளிவந்ததில்லை. இது தமிழில் ஒரு முதல் முயற்சியாகும். இதில் இயன்ற அளவுக்கு முயன்றிருக் கிறேன். தவறுகள் ஏதேனும் இருந்தால் சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டினால் திருத்திக்கொள்வேன்.

இந்நூலின் மொழிநடையைப் பொறுத்தவரை எவ்விடத்தும் புரியாமல் வியர்க்கக் காரணமில்லை. அப்படி எங்கேனும் புரியாமல் வியர்த்தால் அது இந்நூலைப் படைத்தவனின் குறையாக இருக்க முடியுமே அன்றித் தமிழின் குறையாக இருக்க முடியாது.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வெளியீடு ஒவ்வொன்றும் தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதற்காக இந்நூலை மிகவும் முயன்று முடித்திருக்கிறேன். இம்முயற்சிக்குப் பெரிதும் ஊக்கமும், ஆக்கமும் அளித்தவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியனார். அக்கெழுதகையாளருக்கும், மொழிபெயர்ப்புத்துறைத் தலைவர்

பேராசிரியர் கா. செ. செல்லமுத்து அவர்களுக்கும், இந் நூல் மேலும் செப்பமுறத் துணை வேந்தர் அவர்களுடன் வழி காட்டிய நீதிபதி திரு தே. பெ. சு. பழநிசாமி (மாவட்ட நீதிபதி தலைமைப் பதிப்பாசிரியர், தீர்ப்புத்திரட்டு, சென்னை), வழக் கறிஞர் திரு. அ. ச. நடராசன் (சென்னை உயர்நீதி மன்றம், சென்னை), வழக்கறிஞர் அறந்தை திரு மா. அண்ணாதுரை (சென்னை உயர்நீதி மன்றம், சென்னை), வழிக்கறிஞர் திரு. டி. என். இராமச்சந்திரன் (தஞ்சை) ஆகியோர்க்கும், இந்நூலைச் செவ்விய முறையில் பதிப்பித்து உதவிய தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறைத் துணை இயக்குநர் கவிஞர் கோ. வை. இளஞ் சேரனார் அவர்களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் உரித்தாக்குகிறேன்.

இப்படிக்கு.
அன்பன்.
தஞ்சாவூர் 7—5—86
**புலமை வேங்கடாசலம்.**

# இந்துத் திருமணச் சட்டம், 1955

(The Hindu Marriage Act, 1955)
No. 25 of 1985.

எண்: 25/1955

## பொருளடக்கம்

## பிரிவுகளின் அமைப்புமுறை

### இயல் 1

### தோற்றுவாய்


| பிரிவுகள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பும் பரவெல்லையும் | 3 |
| 2. | சட்டப்பொருந்துகை | 9 |
| 3. | சொற்பொருள் விளக்கங்கள் | 19 |
| 4. | சட்ட விளைவு | 37 |


### இயல் 2

### இந்துத் திருமணங்கள்


| | | |
|---|---|---|
| 5. | இந்துத் திருமணம் ஒன்றிற்கான நிபந்தனைகள் | 41 |
| 6. | (நீக்கப்பட்டது) | 44 |
| 7. | இந்துத் திருமணம் ஒன்றிற்கான சடங்குகள் | 44 |
| 7(அ). | சுயமரியாதை, சீர்திருத்தத் திருமணம் | 45 |
| 8. | இந்துத் திருமணப்பதிவு | 48 |


### இயல் 3

### மணவாழ்வுரிமை மீட்டளிப்பும் நீதிவழிப் பிரிந்துறைதலும்


| | | |
|---|---|---|
| 9. | மண வாழ்வுரிமை மீட்டளிப்பு | 53 |
| 10. | நீதிவழிப் பிரிந்துறைதல் | 56 |

பக்கம்

## இயல் 4

### இல்லாநிலைத் திருமணமும் மணமுறிவும்


| | | |
|---|---|---|
| 11. | இல்லாநிலைத் திருமணங்கள் | 61 |
| 12. | தவிர்தகுநிலைத் திருமணங்கள் | 62 |
| 13. | மணமுறிவு | 66 |
| 13(அ). | மணமுறிவுக்கு மாற்று | 78 |
| 13(ஆ). | ஒத்திசைவால் மணமுறிவு | 78 |
| 14. | திருமணம் முடிந்த ஓராண்டிற்குள்ளாக மணமுறிவு பெற மனுச் செய்ய முடியாது | 80 |
| 15. | மணமுறிவு செய்துகொண்டவர்கள் மறுமணம் பெறுவதெப்போது ? | 81 |
| 16. | இல்லாநிலை மற்றும் தவிர்தகுநிலைத் திருமணங்கள் வழித் தோன்றிய குழந்தைகளின் சட்டங்குறித்த நிலை | 82 |
| 17. | இருதார மணத்திற்குத் தண்டனை | 83 |
| 18. | இந்துத் திருமணமொன்றில் வேறு சில நிபந்தனைகளை மீறுவதற்கான தண்டனை | 83 |


## இயல் 5

### ஆள்வரையும் நடைமுறையும்


| | | |
|---|---|---|
| 19. | மனு தாக்கல் செய்யப்படுவதற்குரிய நீதிமன்றம் | 87 |
| 20. | மனுவில் காணப்படவேண்டிய பொருள்களும் உறுதிமொழியும் | 88 |
| 21. | சட்டம் V/1908- பொருந்துகை | 89 |
| 21(அ). | மனுக்கள் சிலவற்றை மாற்றுவதற்கான அதிகாரம் | 89 |
| 21(ஆ). | இச்சட்டத்தின்கீழ் வழக்குத் தீர்விற்கும் விசாரணைக்கும் தொடர்புடைய சிறப்பு வகையம் | 90 |

பக்கம்

21(இ). ஆவணச் சான்று 90

22. நடைமுறைகள் உள்ளார்ந்தனவாக நடத்தப் பெறுவதோடு அவை அச்சிடப்படவோ வெளியிடப் படவோ கூடா 91

23. நடைமுறைகளில் தீர்ப்பாணை 92

23(அ). மணமுறிவு மற்றும் இதர நடைமுறை களில் எதிர்மனுதாரருக்கான நிவாரணம் 94

24. வழக்கிடை வாழ்க்கைப் பொருளுதவியும், வழக்குச் செலவினங்களும் 95

25. நிலையான வாழ்க்கைப் பொருளுதவியும் பராமரிப்பும் 97

26. குழந்தைகளின் பாதுகாப்பு 98

27. உடைமைப் பகிர்மானம் 99

28. தீர்ப்பாணைகள் மற்றும் கட்டளைகளினின்று மேல் முறையீடுகள் 100

28(அ). தீர்ப்பாணைகள் மற்றும் கட்டளைகளின் செயற்பாடுகள் 102

## இயல் 6

### விலக்கங்களும் நீக்கங்களும்

29. விலக்கங்கள் 105

30. (நீக்கப்பட்டது) 106

மேற்கோள் பட்டியல் 107

கலைச்சொற்கள் பட்டியல் தமிழ் — ஆங்கிலம் 119

கலைச்சொற்கள் பட்டியல் ஆங்கிலம் — தமிழ் 127

பயன்படுத்திய நூற்பட்டியல் 135

சுருக்கக் குறியீடுகள் 137

குறுந்தலைப்பு அட்டவணை 139

# இயல் 1

# தோற்றுவாய்

1. 1) இச்சட்டம் இந்துத் திருமணச் சட்டம், 1955 என்று அழைக்கப்படும்.

**குறுந்தலைப்பும் பரவெல்லையும்**

2) இஃது ஜம்மு - காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமையையும் அளாவும், இந்தியாவிற்கு வெளியிலிருக்கும் இந்தியர்களுக்கும் இச்சட்டம் பொருந்தும்.

## இந்துத் திருமணச் சட்டம், 1955

இச்சட்டம் 1955-ஆம் ஆண்டு, மே திங்கள் 18-ஆம் நாள் முதல் அமலுக்கு வந்தது.

இச்சட்டம் பன்னெடுங்காலமாக நம் இந்து மூதாதையர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த இந்துத் திருமண முறைகளில் இருந்த குறைபாடுகளைக் களைந்து, சமயம் விதித்த சில நிபந்தனைகளைத் தளர்த்தி, அறிவியல் நிலைக்கும் மனிதஇன முன்னேற்றத்திற்கும் ஏற்ப இந்துத் திருமணங்களைச் செப்பம் செய்தது.

இது திருமணங்கள் கலைக்கப்பட முடியாதவை என்று சாத்திரங்கள் விதித்த கோட்பாட்டைப் புறந்தள்ளி, கணவன், மனைவி விரும்பினால் மணமுறிவு செய்துகொள்ள அனுமதி யளித்தது. இதனால் பெண் ஆணுக்கு அடிமையாகிறாள் என்ற நிலைமை அகன்றது.[1]

## திருமண வகைகள்

பண்டு நம்நாட்டில் இந்துக்களிடையே எட்டுவகைத் திருமணங் கள் நிலவி வந்தன. அவை :

1. பிரமம்
2. பிரசாபத்தியம்
3. ஆரிடம்
4. தெய்வம்
5. காந்தர்வம்
6. அசுரம்
7. இராக்கதம்
8. பைசாசம்–என்பன.

இவற்றில்,

**பிரமம் என்பது** — பெண்ணைப் பெற்றவர்கள் தம்மால் தேர்ந் தெடுக்கப்படும் மணமகனுக்கு ஆடை அணிகலன்களோடு வைதீக முறைப்படி மணஞ்செய்து கொடுப்பது.

'**பிரசாபத்தியம் என்பது** — மைத்துனக் கோத்திரத்தான் மகள் வேண்டிச் செல்லும்போது மறாது கொடுப்பது'.[2]

**ஆரிடம் என்பது** — மணமகனிடமிருந்து ஓரிணைப் பசுக்கள் அல்லது எருதுகளைப் பெற்றுக் கொண்டு அவற்றுக்கு ஈடாகப் பெண்ணை மணமுடித்துக் கொடுப்பது.

**தெய்வம் என்பது** — இறைவனுடைய பணியில் ஈடுபட்டிருக் கும் வேதியருக்குப் பெண்ணைத் திருமணம் முடிப்பது.

**காந்தர்வம் என்பது** — பெற்றோருக்குத் தெரியாமல் காதல் கொண்டு கடிமணம் புரிந்து கொள்வது.

**அசுரம் என்பது** — மணமகன் மணமகளுக்கும் அவளுடைய பெற்றோர்கட்கும் பொருள் கொடுத்து அவளை மணம் செய்து கொள்வது.[3]

**இராக்கதம் என்பது** — போரில் பெண்ணொருத்தியை வன்முறையாகத் தூக்கிச் சென்று மணம் செய்து கொள்வது.

**பைசாசம் என்பது** — குடிபோதையிலிருக்கும் அல்லது தூங்கிக் கொண்டிருக்கும் பெண்ணை ஏமாற்றி அல்லது கள்ளத்தனமாகக் கடத்திச் சென்று மணப்பது.[4]

இவ்வெண்வகைத் திருமணங்களில் இன்று நடைமுறையில் இருப்பவை பிரம்ம வகைத் திருமணமும், அசுரவகைத் திருமணமும் மட்டுமே; இவற்றுள்ளும் இன்று சாத்திர சம்பிரதாயம் பெற்றுத் திகழ்வது பிரம்ம வகைத் திருமணம் மட்டுமே.

## உட்பிரிவு (2): ஜம்மு - காஷ்மீர் மாநிலம் நீங்கலாக (Except the State of Jammu and Kashmir)

இந்துத் திருமணச் சட்டத்தை ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு இருந்தவாறே ஏற்கவோ திருத்தியமைத்தேற்கவோ அதை முழுமையாகப் புறக்கணித்துவிட்டுப் புதிதாக வேறொரு சட்டத்தை இயற்றிக்கொள்ளவோ செய்யலாம்.

இந்துத் திருமணச் சட்டம் இயற்றப்பட்டபோது ஜம்மு - காஷ்மீர் மாநில அரசு அதை 1955-ஆம் ஆண்டு ஜம்மு-காஷ்மீர் சட்டம் 8/1955 (J and K Act 8 of 1955) இன் கீழ்ச் சில திருத்தங்களுடன் ஏற்று, பிறகு 1980-ஆம் ஆண்டு ஜம்மு-காஷ்மீர் சட்டம் 4/1980 (J and K Act 4 of 1980) மூலம் நீக்கியது.[5]

## வாழ்வகம் (Domicile)

திருமணத் தரப்பினர்கள் (Marriage parties) இந்தியாவை வாழ்வகமாகக் கொண்டில்லாதபோதும் அல்லது அவர்களிப்

ஒருவர் இந்தியாவையும் மற்றொருவர் அயல்நாடொன்றையும் தங்களது வாழ்வகங்களாகக் கொண்டிருக்கும்போதும் இச்சட்டத்தின் கீழ் நிவாரணம் பெறமுடியாது;[6] ஆனால், நேப்பாளம் போன்ற இந்திய நிலவரைக்கு உட்பட்ட பகுதிகளில் வாழ்வோர் இச்சட்டத்தின் கீழ் நிவாரணம் எதையும் பெறலாம்.[7]

## வாழ்வகம் என்றால் என்ன ?

'வாழ்வகம்' என்பதற்கு இதுதான் சரியான பொருள் என்று ஒன்றைச் சட்டவல்லுநர்கள் எவரும் இதுநாள்வரை கொடுத்திலர்.

வாழ்வகம் என்பதற்கு ஆல்ஸ்பரியின் 6-ஆவது புத்தகம் தரும் விளக்கம்: எந்நாட்டில் ஒருவர் தம்முடைய நிரந்தரக் குடியிருப்பைத் தம் இச்சையாகவோ சட்டத்தின் வாயிலாகவோ பெற்றிருக்கின்றாரோ அதுவே அவரது வாழ்வகமாகும்.

## வாழ்வகம் பற்றி நீதிபதி மகாசன்

வாழ்வகம் இல்லாது எந்த மனிதனும் இருக்கமுடியாது. காரணம், ஒருவனது சொத்தை எந்த நாட்டுச் சட்டப்படி அவன் வாரிசுகளுக்கு அளிப்பதென்பதற்கு இவ்வாழ்வகம் இன்றியமையாததாகிறது.

ஆங்கில நாட்டுச் சட்டப்படி வாழ்வகத்திற்கு இருமூலக் கூறுகள் தேவை. அவை :

1) ஒரு குறிப்பிட்ட வகையான குடியிருப்பு

2) ஒரு குறிப்பிட்ட வகையான எண்ணம்

ஒருவன் ஓரிடத்தை வாழ்வகமாகக் கொள்ளும்போது அவன் அங்கு நிரந்தரமாக வாழ்வதற்குரிய எண்ணத்தைக் கொண்டவனாக இருத்தல் வேண்டும். ஈண்டு நிரந்தரமாக வாழ்வதென்பது இடைவிடாததாய் இருக்கவேண்டும் என்பதில்லை; தற்காலிகமாக இல்லாதிருக்கவேண்டும்; அவ்வளவே. அப்போது மட்டுமே அது அவனது வாழ்வகமாகக் கருதப்படும்.

நபர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட வாழ்வகங்களைக் கொண்டிருக்கும்போது, எது அவரது உண்மையான வாழ்வகமாக

இருக்கமுடியுமெனின் அவரது மனைவியும், மக்களும் எந்த வாழ்வகத்தில் நிரந்தரமாக வசித்து வருகின்றார்களோ அதுவே அவரது உண்மையான வாழ்வகமாக இருக்கும்.

## வாழ்வக வகைகள்

வாழ்வகத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை:

1) முதல்நிலை வாழ்வகம் (Domicile of Origin)
2) தேர்ந்தெடுத்த வாழ்வகம் (Domicile of Choice)
3) சட்டத்தின் வாயிலாகப்பெற்ற வாழ்வகம் (Domicile by the operation of Law) என்பன.

## முதல்நிலை வாழ்வகம் (Domicile of Origin)

முதல்நிலை வாழ்வகம் என்பது சட்டவாயிலாக, சுயமுயற்சி இன்றி ஒருவரை வந்தடைவது. நபர் ஒருவர் தேர்ந்தெடுத்த வாழ்வகத்தை (Domicile of Choice) முற்றிலுமாகச் சார்கின்ற வரை இது அவரைத் தொற்றிக்கொண்டே இருக்கும்.

## தேர்ந்தெடுத்த வாழ்வகம் (Domicile of Choice)

ஒருவர் தமது முதல்நிலை வாழ்வக நாட்டை நிரந்தரமாகக் கைவிட்டு, அந்நியநாடொன்றைத் தமது வாழ்வகமாகத் தேர்ந் தெடுத்துக் கொண்டு வாழ்வது தேர்ந்தெடுத்த வாழ்வகமாகும்.

## சட்டத்தின் வாயிலாகப்பெற்ற வாழ்வகம் (Domicile by the operation of Law)

மனைவி கணவனின் வாழ்வகத்தினைப் பெறுவதே சட்டத் தின் வாயிலாகப்பெற்ற வாழ்வகமாகும். கணவனுடனிருந்து வாழவேண்டுமென்ற மனைவியின் கடமையைச் சார்ந்ததே இத் தத்துவம்.

திருமணத்தின் மூலம் கணவனின் வாழ்வகத்தினைப்பெற்ற ஒரு பெண், விதவையானவுடன் அதனை இழந்து தனது முந்திய வாழ்வகத்தினைப் பெறுவதில்லை. அதாவது, விதவையான

பிறகும் கணவனின் வாழ்வகமே மனைவியின் வாழ்வகமாகும். ஆனால், அவள் அதனை விடுத்துப் புதியதொரு வாழ்வகத்தினை விரும்பித் தேர்ந்தெடுக்கலாம்.

திருமண முறிவு ஏற்படாத நிலையில் கணவன் எத்தனை முறை தன்னுடைய வாழ்வகத்தை மாற்றினாலும் அத்தனை முறையும் மனைவியின் வாழ்வகமும் மாறும். சுருங்கக்கூறின், கணவனின் வாழ்வகமே மனைவியின் வாழ்வகம் என்பது இயல்பு. கணவன், மனைவி இருவரும் மனமிசைந்து ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து வாழ்ந்தாலும் அல்லது உறவின் சூழ்நிலையின் காரணமாகப் பிரிந்திருந்தாலும் மேற்சொன்ன இயல்பு மாறாது. ஏனெனில், எண்ணியபோது அவர்கள் கூடிவாழ விரும்பி, ஒன்று சேர்வதற்கு எந்தவிதத் தடையும் கிடையாது. நீதி வழிப் பிரிந்துறைதல் (Judicial separation) தவிர, ஏனைய காரணத்துடன் பிரிந்து வாழ்தலில் கணவனின் வாழ்வகம் மாறும்போது மனைவியின் வாழ்வகமும் மாறும். இவ்விதிக்கு விலக்கு யாதெனில் 1) நீதிமன்றத்தால் கணவனும் மனைவியும் பிரிந்து வாழும்படி தீர்ப்பளிக்கப்பட்டபின் மனைவியின் வாழ்வகம் கணவனின் வாழ்வகத்தைச் சாராது. திருமண முறிவினால் கணவனும் மனைவியும் பிரிக்கப்படுகிறார்கள். அதன்பின் அப்பெண் மணமாகாத ஒரு பெண்ணைப்போல எந்தவிதக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டவள் அல்லள். பிரிந்து வாழும்படி தீர்ப்பளிக்கப்பட்டபின் கணவன், மனைவியர்க்கிடையேயான உரிமைகள் முடிவடைகின்றன. அதன்பின் தன் விருப்பப்படி கணவனின் வாழ்வகத்தைவிட்டு வேறு வாழ்வகத்தைப் பெறவியலாது என்னும் வாதத்தினை ஏற்றுக்கொள்ளவியலாது. தகுந்த காரணமின்றி மனைவியைப் புறக்கணித்துக் (Desertion) கணவன் வாழும்போது வாழ்வகத்தினை மாற்றினால் மனைவியின் வாழ்வகமும் மாறும் என்று கூறுவது சரியன்று.

கணவன் தீர்ப்புத் தண்டனையின்படி நாடு கடத்தப்பட்டிருந்தால் மனைவியின் வாழ்வகம் கணவனின் வாழ்வகத்தைச் சாராது. அப்படித் தண்டிக்கப்படும்போது சமூகத்தில் தன்னுடைய தகுதியைக் கணவன் இழக்கிறான். அதனுடன் கணவனின் வாழ்வகத்தை மனைவி சாரும் நிலை முடிவடைகிறது.

## புத்தி சுவாதீனமற்றவர் வாழ்வகம்

புத்தி சுவாதீனமற்ற (Insane) ஒருவரின் வாழ்வகம் வேறு ஒருவரின் வாழ்வகத்தைச் சார்ந்து செல்லுமேயன்றி, எவ்வழியிலும் அவர் புதிய வாழ்வகத்தினையடைய முடியாது. ஏனெனில், அவராகவே தம் வாழ்வகத்தினை மாற்றவியலாது. அவரது காப்பாளராக இருப்பவரின் வாழ்வகத்தோடு அவரது வாழ்வகமும் மாறும். புத்தி சுவாதீனமற்றவர், ஒருவரின் பொறுப்பில்தான் இருக்க வேண்டுமென்பது வெள்ளிடை மலை. அக்காப்பாளர் யாரென அறிதல் நலம். புத்தி சுவாதீனமற்றவர் வயதுவராதவரானால், அவரது வாழ்வகம் பெற்றோரின் வாழ்வகமே; வயது வந்தபின், புத்திசுவாதீனம் இழப்பதற்கு முன்பிருந்த வாழ்வகமே புத்தி சுவாதீனம் இழந்தபின்னும் நீடிக்கும். புத்தி சுவாதீனமற்றவர் திருமணமான பெண்ணாக இருந்தால் கணவனின் வாழ்வகமே அவள் வாழ்வகமாகும்.[8]

## வயது வராதவர் வாழ்வகம்

வயது வராத குழந்தைகள், முறைமணப்பிறப்புக் குழந்தைகளாக இருக்கும்போது தந்தையின் வாழ்வகத்தையும், முறையற்ற மணப்பிறப்புக் குழந்தைகளாக இருக்கும்போது தாயின் வாழ்வகத்தையும் தமது முதனிலை வாழ்வகங்களாகக் கொள்வர்.

2\. 1) இச்சட்டம்

**சட்டப் பொருந்துகை**

அ) வீரசைவர்கள், இலிங்காயத்துக்கள், பிரும்ம சமாசத்தினர், பிரார்த்தனர்கள் அல்லது ஆரிய சமாசத்தினர் உள்ளிட்ட இந்து சமயத்தின் அமைப்புகளையும், வளர்ச்சிகளையும் பின்பற்றுகிறவர்கள்;

ஆ) பௌத்த, சமண, சீக்கிய மதத்தைச் சார்ந்தவர்கள்;

இ) இந்திய நிலவரைக்குள் வாழ்கின்ற முகம்மதிய, கிறித்துவ, பார்சி, யூத மதத்தினரல்லாதவர்கள்; இச்சட்டம் ஏற்படாவிட்டால், இதன்கண் கூறப்பட்டவைகளைப் பொறுத்து

இந்துச் சட்டமோ அதன் ஒரு பகுதியாகக் கருதப்படும் வழக்கமோ வழ்க்காறோ தங்களுக்குத் தொடர்புடைய தன்றென்று மெய்ப்பிக்காத நிலையிலுள்ள நபர்கள் ஆகி யோர்க்குப் பொருந்தும்.

**விளக்கம்**

பின்வரும் நபர்கள் சூழ்நிலைக்கேற்ப மதத்தால் இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள், சீக்கியர்கள் ஆவர்.

அ) மதத்தால் இந்துக்களாகவோ பௌத்தர்களாகவோ சமணர் களாகவோ பெற்றோர்கள் இருந்து, முறை மணப்பிறப்பிலோ முறையற்ற மணப்பிறப்பிலோ பிறக்கும் குழந்தை.

ஆ) மதத்தால் இந்து, பௌத்தர், சமணர் அல்லது சீக்கியராகப் பெற்றோர்களில் ஒருவர் இருந்து, அவர்களுக்கு முறை மணப் பிறப்பிலோ முறையற்ற மணப்பிறப்பிலோ பிறந்து அப் பெற்றோர் தம் மரபு, இனம், பிரிவு அல்லது குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினராக வளர்க்கப்பட்ட குழந்தை

இ) இந்து, பௌத்த, சமண, சீக்கிய மதத்திற்கு மாறியவர்கள் அல்லது அம்மதத்தையே திரும்பவும் தழுவியவர்கள்.

2) மத்திய அரசு, அரசாங்கப் பதிவிதழில் அறிவிப்பு மூலமாக அல்லது வேறு கட்டளைகள் மூலமாக அறிவித்திருந்தாலன்றி, உட்கூறு (1)இல் கூறப்பட்டவைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 366, உட்கூறு (25)இன்படி மலைவாழ் பழங் குடியினருக்குப் பொருந்தாது.

3) இச்சட்டத்தில், 'இந்து' என்ற சொல் இச்சட்டம் எவரெ வருக்குப் பொருந்துமென்று இப்பிரிவின் வகையங்களில் குறிப்பிட்டுள்ளதோ அவர்கள் மதத்தால் இந்துக்கள் இல்லை யெனினும் அவர்களையும் குறிக்கும்.

## உட்பிரிவு (1) (அ): இந்து (Hindu)

'இந்து' என்ற சொல்லுக்கான விளக்கம் பழைய சாத்திரங் களிலோ இலக்கியங்களிலோ யாண்டும் காணக்கிடைத்திலது;

சிந்துநதிக் கரையில் வாழ்ந்த மக்களைப் பாரசீகர் அந்நதியின் பெயரை வைத்துச் சிந்துக்கள் என்றழைக்க, அதுவே நாளடைவில் இந்து - இந்துக்கள் என்றாயிற்று என்றும்; '**இந்து**' என்ற சொல் ஆதியில் இருந்தது கிடையாது; சிதறுண்டு கிடந்த இந்தியாவை ஆங்கிலேயர் ஒரு குடைக்கீழ் ஆண்டபோது, இந் நாட்டை '**இந்தியா**' என்றும், இம்மக்களை '**இந்துக்கள்**' என்றும், இம்மக்கள் பின்பற்றிய மதத்தை '**இந்துமதம்**' என்றும் பெயரிட்டு அழைக்க, அதன்பிறகு ஏற்பட்டதே '**இந்து**' என்ற சொல் என்றும் அறிஞர் பெருமக்கள் உரைப்பர்.[9] ஆனால், இன்று இந்திய நிலப்பகுதியில் உள்ளவர்கள் அனைவரும் இந்துக்களாக மாட்டார்கள். இன்றுள்ள சட்டப்படி இந்து மதத்தில் பிறந்தவர் கள் மட்டுமல்ல, பிற மதத்தினரும் இந்து மதத்தை ஏற்றுக் கொண்டால் அவர்களும் இந்துக்களே.[10]

## வீரசைவம் (Virashaivam)

'**வீரசைவம்**' கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கருநாடகத்து அரசன் ஒருவனிடம் தலைமையமைச்சராக இருந்த பசவண்ணர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. சமண சமயமும் வைணவ சமயமும் எழுச்சியுற்ற, சைவம் தாழ்ச்சியுற்ற காலத்து இதை அவர் தோற்றுவித்துப் புரட்சி செய்தார்.

## 'வீரசைவம்' பெயர்க்காரணம்

சைவசமயக் கருத்துக்களையும், **வீரசைவக் கருத்துக்களையும்** வேறுபடுத்திக் காட்ட '**சைவம்**' என்ற சொல்லோடு '**வீர**' என்ற அடைமொழியைச் சேர்த்திட '**வீரசைவம்**' என்றாயிற்று.[11]

'**வி — விகற்பம்: ர — ரகிதம்**; வீரசைவம் என்பது **விகற்ப** ரகிதமான சைவம்; மாறுபாடுகளை நீக்கிய சைவம்; மாறுபட்ட வேத வாக்கியங்களை இணைத்துக் காட்டி ஏற்றுக்கொண்ட சைவம் (சர்வ சுருதி சமன் வயம்) வீரசைவம் நெறியாலும், சென்றடையக்கூடிய முடிவிடத்தாலும் வீரத்தோடு இயைபுடையது (சாதன சாத்யம்); ஆதலின், வீரசைவம் என வழங்கப்படுவ தாயிற்று' என வீரசைவத்திற்கான பெயர்க்காரணத்தை அறிஞர் பெருமக்கள் பலபட மொழிவர்.[12]

## வீரசைவர் யார்?

பொதுவாக வீரசைவத்தைப் பின்பற்றுவோர் வீரசைவரெனி னும் வேறுசில விளக்கங்களையும் அறிஞர் பெருமக்கள் தருவா ரா யினார். 'ஆரியர்தம் கருத்துக்களை மறுத்தவர் வீரசைவர் எனப் பட்டனர்' என்று தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிக ளார் அவர்களும்[13] 'சூதகம் முதலான எத்தடைகளாலும் தடுத்து நிறுத்தப்பெறாமல் இட்டலிங்கம் என்ற ஞானவாளோடு திரிப வன் வீரசைவன் எனப்பட்டான்' என்று அறிஞர் வை. இரத்தின சபாபதி அவர்களும் உரைப்பர்.[14]

## வீரசைவக் கொள்கைகள்

1) அசுடாவரணம் 2) பஞ்சாசாரம் 3) இலிங்காசாரம் 4) சதா சாரம் 5) சிவாசாரம் 6) பிருத்தியாசாரம் 7) கருணாசாரம் என்பன வீரசைவக் கொள்கைகளாகும். இவற்றில்,

**அட்டாவரணம் என்பது** — ஆன்மாவை அவித்தையின் தாக்கு தலினின்றும் காத்து, மோட்சத்துக்கு நடத்திச் செல்லும் எட்டுக் கேடயங்களாகும். அவையாவன குரு, இலிங்கம், சங்கமம், பாதோதகம், பிரசாதம், விபூதி, உருத்திராட்சம், மந்திரம்.

**பஞ்சாசாரம் என்பது** — இலிங்காயதர் அனைவரும் ஒரே குடும்பத்தினர்போல் நடப்பதற்கான நெறிகளைக் காட்டும் ஐந்து நெறிகளாகும். அவை இலிங்காசாரம், சதாசாரம், சிவாசாரம், பிருத்தியாசாரம், கருணாசாரம் என்பன.

**இலிங்காசாரம் என்பது** — இலிங்கத்தைத் தரித்துக்கொண்டு நாள்தோறும் ஒரு காலமோ இரண்டு காலமோ மூன்று காலமோ அதைத் தொழுதல்.

**சதாசாரம் என்பது** — ஏதேனும் ஒரு தொழிலைச் செய்து கொண்டு அறநெறியில் நிற்றல்.

**சிவாசாரம் என்பது** — இலிங்காயத்தர்களுக்குள் வேறு பாடின்றி உடன் உண்ணலும், மணம் நிகழ்த்துதலும்.

**பிருத்தியாசாரம் என்பது** — கடவுளிடத்திலும் அடியார்களிடத்திலும் பணிவுடையனாயிருத்தல்

**கருணாசாரம் என்பது** — நியாய நிருபணத் தத்துவமாகும்.

வீரசைவர்களுடைய தலைசிறந்த குறிக்கோள் இலிங்காங்க சாமரசியம் என்பது. அதை அடையும் முறையைச் **'சடுத்தலம்'** என்று கூறுவார்கள். சாதகர்கள் ஆறு மனோதத்துவ நிலைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கடந்து சென்றால் மோட்சநிலை எய்துவர். இந்த ஆறு நிலைகளாகிய பத்தித் தலத்தில் உணர்ச்சியும், மகேசத் தலத்தில் முயற்சியும், பிராசாதித்தலத்தில் அறிவும், பிராணலிங்கத் தலத்தில் இயற்கை உணர்வும், சரணத் தலத்தில் செயலும், ஐக்கியத் தலத்தில் ஒன்றுபடுத்தலும் தனியமிசமாகும்.[15]

## இலிங்காயதம் (Lingayat)

**'இலிங்கம்'** என்ற சொல்லுக்கு **'இலிங்கமாக ஆதல்'** அல்லது ஆக முயலுதல் என்பது பொருளாகும். இந்நெறியைப் பின்பற்றுகின்றவர்கள் உடம்பிலுள்ள மாசுகள் அனைத்தும் இலிங்கத்தைத் தரித்துக்கொள்வதால் எரிக்கப்படுகின்றன என்ற நம்பிக்கையின் பேரில் இலிங்கத்தை உடம்பில் அணிந்துகொள்கிறார்கள். இவர்கள் இவ்வாறு இலிங்கத்தை உடம்பில் அணிந்து கொள்வதால் இலிங்காயத்துக்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளவும் செய்கின்றனர்.

இவர்களைப்போல் ஆந்திரப் பிரதேசத்தில் வாழும் ஆராத்யர்கள் இலிங்கத்தைப் பூணூலில் கோத்து உடம்பில் அணிந்திருந்த போதிலும், அவர்கள் தங்களை இலிங்காயத்துக்கள் என்று கூறிக் கொள்வதில்லை; வீரசைவர்கள் என்றே கூறிக்கொள்கிறார்கள்.[16]

## பிரம்ம சமாஜம் (Brahmosamaj)

இராஜா ராம்மோகன் ராய் அவர்கள் இந்து சமயத்திலிருக்கும் உருவ வழிபாடு, ஆரவார வழிபாடு, அவதாரக்கொள்கை, பலியிடுதல், வருணாசிரம முறைகள், மறுபிறப்பு, கருமவிதி

முதலியவைகளை மறுத்து ஒன்றே கடவுள் என்பதை வலியுறுத்தி, **'ஆத்மீக சபை'** எனுமொரு அமைப்பை 1814-இல் ஏற்படுத்த அது நாளடைவில் (கி. பி. 1818-இல்) பிரம்ம சமாஜமாக மலர்ந்தது.

**'பிரம்ம சமாஜம்'** என்ற சொல்லுக்குப் **'பரம்பொருள் வழிபாட்டுச் சங்கம்'** என்பது பொருளாகும். உபநிடதங்களில் அதிக அளவு ஈடுபாடு கொண்ட இராஜா ராம்மோகன் ராய் அவர்கள் தம்மால் ஏற்படுத்தப்பட்ட இம்மதத்திற்குப் பரம்பொருளைக் குறிக்கும் **'பிரம்மம்'** என்ற சொல்லையே தேர்ந்தெடுத்தார்.[17]

பிரம்ம சமாஜத்தின் அடிப்படைத் தத்துவம் தூய உள்ளமும், தூய வாழ்வுமே உய்யும் வழி என்பதாகும்.

## பிரம்ம சமாஜத்தின் கிளைகள்

இராஜா ராம்மோகன் ராய் மறைவிற்குப் பின் பிரம்மசமாஜம் மூன்று கிளைகளாகப் பிரிந்தது. அவை :

1) தேவேந்திரநாத் தலைமையில், **'ஆதி பிரம்ம சமாஜம்'** என்ற ஓர் அமைப்பும்

2) கேசவசந்திரசென் தலைமையில், **'இந்திய பிரம்ம சமாஜம்'** என்ற ஓர் அமைப்பும்

3) பண்டித சிவநாத சாத்திரி தலைமையில், **'சாதாரண பிரம்ம சமாஜம்'** என்ற ஓர் அமைப்பும் ஆகும்.

பிரம்ம சமாஜம் இவ்வாறு மூன்று கிளைப்பிரிவுகளாகப் பிரிந்தாலும் கொள்கையளவில் ஒன்றாகவே திகழ்கிறது.

## பிரார்த்தன சமாஜம் அல்லது ஆரிய சமாஜம் (Prarthana or Arya Samaj)

பிரார்த்தன சமாஜம் அல்லது ஆரிய சமாஜம், 1875-ஆம் ஆண்டு சாமி தயானந்தரால் தோற்றுவிக்கப்பட்டது. இது வேதங்கள், சாத்திரங்கள், ஆரிய சமயக் கருத்துக்கள் ஆகியவற்றைப் புறக்கணித்துத் தோன்றிய பிரம்ம சமாஜத்திற்கு எதிர்ப்பாகத் தோற்றுவிக்கப்பட்டது.

பிராமணங்கள், ஆறு வேதங்கள், ஆறு உபங்கள், நான்கு உபவேதங்கள், 1127 சமிதாக்கள் ஆகியவற்றின் கருத்துக்களும் கோட்பாடுகளும் ஆரிய சமாஜத்தின் கருவூலங்களாகும்.[18]

ஆரிய சமாஜத்தின் கொள்கைகள் 'சத்தியார்த்தப் பிரகாசம்' என்ற நூலில், ஐம்பத்தோரு அதிகாரங்களில் விரித்துரைக்கப் பட்டுள்ளன.

பிரம்ம சமாஜம் மறுக்கும் கருமவிதி, மறுபிறப்பு முதலிய வற்றை ஆரிய சமாஜம் தமது அடிப்படைக் கொள்கைகளாகக் கொள்கிறது.

தயானந்தர், வேதங்களைக் கடவுள் வாக்காகக் கொண்டு இதிகாசங்கள், புராணங்கள் முதலானவற்றைப் புறக்கணித்தார்.

## ஆரிய சமாஜத்தினர் யார் ?

கி.பி. 1877-இல், இலாகூரில் ஆரிய சமாஜத்தின் சட்ட - திட்டங்களை வரையறுப்பதற்காகக் கூடிய கூட்டம், பத்துக் கட்டளைகளை விதித்து, அவற்றை எவரெவரெல்லாம் பின்பற்று கின்றனரோ அவரவரெல்லாம் ஆரிய சமாஜத்தினர் ஆவர் என்று முடிவு செய்தது.

## பத்துக் கட்டளைகள்

ஆரிய சமாஜத்தின் பத்துக் கட்டளைகளாவன :

1) உண்மை அறிவின் காரணகர்த்தா கடவுள்; அதன் பெயரில் ஒவ்வொன்றும் அறியப்படும்.

2) உண்மையே கடவுள்; ஞானவடிவம்; அழகின் இருப்பிடம்; உருவமற்றது; ஆற்றல் நிறைந்தது; நேர்மை, கருணை யுடையது; எல்லையற்றது; மாறுதலற்றது; தோற்ற மில்லாதது; ஒப்பிடவியலாதது; அனைத்திற்கும் ஆதர வானது; தலைமையானது; எங்கும் நிறைந்தது; எங்கும் உள்ளது; அழிவற்றது; என்றுமுளது; அச்சமற்றது;

பிரபஞ்சப் படைப்பிற்குக் காரணமானது; புண்ணிய மானது; அது ஒன்றிற்கே வழிபாடு உரியது.

3) உண்மை அறிவின் நூல்கள், வேதங்களேயாகும். ஒவ் வொரு ஆரியரும் வேதங்களைக் கற்றும், கேட்டும், போதித்தும், பிரசாரம் செய்தும் கடமைகளை ஆற்ற வேண்டும்.

4) பொய்மையைத் துறந்து மெய்மையை ஏற்க வேண்டும்.

5) அனைத்துச் செயல்களும் அறவழிப்பட்டனவாய் இருக்க வேண்டும்.

6) மனித சமூகத்தின் பௌதிக, ஆன்மீக, சமூக நிலைமை களை உயர்த்துவதற்காக உலகத்தில் நற்பணிகளை ஆற்ற வேண்டும் என்பதே ஆரிய சமாஜத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும்.

7) அவரவர் தகுதிகளைப் போற்றி அன்புடனும் நீதியுடனும் ஒழுகுதல் வேண்டும்.

8) அறியாமையை அகற்றி, அறிவைச் சேர்க்கவேண்டும்.

9) தமது நலன்களை மட்டும் ஒருவர் கருதலாகாது; தமது வாழ்வும் வளர்ச்சியும் பிறரோடு இணைந்துள்ளன என்பதை மதிக்க வேண்டும்.

10) பொதுவான சமூக நலன்களுக்காக எல்லா வேற்றுமை களையும் களையவேண்டும்-என்பனவாகும்.[19]

## உட்பிரிவு (1) (ஆ):

இச்சட்டம் மதத்தால் இந்துக்களுக்கு மட்டுமல்லாது பௌத்த, சமண மற்றும் சீக்கிய மதத்தினருக்கும் பொருந்துவதாகும்.

## பௌத்தர், சமணர், சீக்கியர் விளக்கம்

### பௌத்தர் (Buddhists):

கௌதம புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்த மதத்தில் இருப்போரும், அவரது மறைவுக்குப்பின் தோன்றிய பௌத்த மதக்கிளைப் பிரிவுகளில் இருப்போரும் பௌத்தராவார்.

## சமணர் (Jains) :

மகாவீரரால் தோற்றுவிக்கப்பட்ட சமண மதத்தில் இருப்போரும், அவரது மறைவுக்குப்பின் தோன்றிய சமண மதத்தின் கிளைப்பிரிவுகளில் இருப்போரும் சமணராவார்.

## சீக்கியர் (Sikhs) :

குருநானக், கபீர் ஆகியோரது போதனைவழித் தோன்றிய சீக்கிய மதத்தில் இருப்போர் சீக்கியராவார்.

## முறைமணப் பிறப்புக் குழந்தைகளும் முறையற்ற மணப் பிறப்புக் குழந்தைகளும் (Legitimate children and Illegitimate children)

இந்துப் பெற்றோர்களின் முறையான திருமணத்தில் பிறந்த குழந்தைகளுக்கு இச்சட்டமே உரியது. இது உரியதல்ல என்போர் தாங்கள் அம் மதத்தை விட்டுவிட்டோம் என்பதை மெய்ப்பிக்கவேண்டும். சில சடங்குகளைப் பின்பற்றாமல் இருப்பதோ இந்து தர்மத் தத்துவத்தில் நம்பிக்கை இல்லாமல் இருப்பதோ இந்து மதத்தை விட்டுவிட்டோம் என்பதற்குப் போதிய சான்றாகா.

இந்து மதத்தில் இருவேறு பிரிவினர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் இந்துக்களே. இந்து ஒருவனுக்கும் சமணப் பெண்ணொருத்திக்கும் பிறக்கும் குழந்தைகளுக்கும் இச்சட்டம் பொருந்தும்.

முறையற்ற மணப்பிறப்பிலும் பெற்றோர்கள் இந்துக்களாக இருந்தால் இச்சட்டமே பொருந்தும்.

பெற்றோர்களில் ஒருவர் இந்துவாகவும், மற்றொருவர் வேறு மதத்தினராகவும் இருந்து குழந்தை இந்துக்களுக்குள்ள வழக்கப்படி இந்துச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டு வந்தால், அப்போதும் இச்சட்டமே அமலாகும்.[20]

வழக்கொன்றில் இந்துத் தந்தைக்கும், கிறித்துவத் தாய்க்கும் பிறந்து இந்துமத நெறிப்படி வளர்க்கப்பட்ட சிறுவன் இந்துவாகக் கருதப்பட்டான்.[21]

## மதம் மாறியவர்களும், மதம் மாறி மீண்டவர்களும் (Converts and Re-Converts)

'**இந்து என்பவன் பிறக்கிறான்**' என்ற கொள்கை இச்சட்டத்தால் மாற்றப்பட்டுவிட்டது. இதனால், வேறு மதத்தைச் சார்ந்த ஒருவரும் அம்மதத்தை விட்டுவிட்டு இந்துமதத்தைத் தழுவிக் கொள்ளலாம்.

வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவர் இந்து மதத்தைத் தழுவும் போதும், இந்து ஒருவன் வேறு மதம் புகுந்து மீண்டும் இந்து மதத்தைத் தழுவும்போதும் இந்து மதத்தில் சடங்குகள் எதுவும் அனுசரிக்கப்படுவதில்லை. நபர் ஒருவர் இந்து மதத்தைத் தழுவுகின்றபோது அவர் அதுவரை சார்ந்திருந்த மதத்தை முற்ற முழுமையாகக் கைவிட்டுவிட இந்து சமூகம் அவரை இந்துவாக அங்கீகரிக்கும்.[22]

### மதமாற்றத்தின் விளைவுகள்

இந்து ஒருவன் பிற மதத்திற்கு மாறுவதன் மூலம் அவன் பிறந்த குடும்பத்திலுள்ள சகல பந்தங்களும் அறுந்துபோகின்றன. இந்து தர்மங்கள் வற்புறுத்தும் கடமைகளும் அவனைக் கட்டுப் படுத்தாது போகின்றன.[23]

இந்து ஒருவன் இந்து தர்மக் கடமைகளினின்றுவிடுபட்டாலும் அவன் இந்துத் திருமணச் சட்டப்படி அவனது தாய், தந்தை, மனைவி, மக்கள் முதலியோரைப் பராமரிக்கும் கடப்பாட்டிற்கு உட்பட்டவனேயாவான். ஆகையால் இந்துவாகப் பிறந்த ஒருவன் இக்கடப்பாட்டினின்று தப்பிப்பதற்காக மதம்மாறுவதைச் சட்டம் தடைசெய்கிறது.[24]

## உட்பிரிவு (2): மலைவாழ் பழங்குடியினர் (Scheduled Tribe)

இச்சட்டம், மலைவாழ் பழங்குடியினருக்குப் பொருந்தாது. பழங்குடி மக்களுக்கு அவர்கள் மேற்கொண்டு வரும் வழக்கமே உரியதாகும். அம்மக்களை இச்சட்டத்திற்கு உட்படுத்துவது

அவசியமென்று மத்திய அரசு கருதினால், அரசுப் பதிவிதழில் (Official Gazette) அறிவித்துக் கட்டளையிடுவதன் மூலம் அவர் களையும் இச்சட்டத்திற்கு உட்படுத்தலாம்.

## மலைவாழ் பழங்குடியினர் யாவர்?

இந்தியாவில் மலைவாழ் பழங்குடியினர் பெருமளவில் நீலகிரி, ஒரிசா, அசாம், நாகலாந்து, மிசோ முதலிய இடங்களில் வாழ்ந்து வந்தபோதிலும், இந்திய அரசியலமைப்பைப் பொறுத்தவரை எவரெவரெலாம் மலைவாழ் பழங்குடியினர் என்பதற்கு ஒரு திட்ட மான வரையறையை ஏற்படுத்தவில்லை. தேவைப்படும்போது இந்தியக் குடியரசுத் தலைவர் மாநில ஆளுநர்களைக் கலந்தாலோ சித்து, அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 366 (24), உடன் பிரிவுகள் 341, 342இன் கீழ், எவரெவரை மலைவாழ் பழங்குடியினர் எனக் கருதுகின்றாரோ அத்தகையவர்களடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரித்து வெளியிடுவார். அவர்களே பின்னர் மலைவாழ் பழங் குடியினர் என வழங்கப்பெறுவர். குடியரசுத் தலைவர் மலைவாழ் பழங்குடியினர் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரித்து வெளி யிட்ட பிறகு அப்பட்டியலில் புதிதாக எவரையும் சேர்க்கவும் நீக்கவும் முடியாது. நாடாளுமன்றம் நினைத்தால் புதிதாக எவரையும் சேர்க்கவும் நீக்கவும் செய்யலாம்.

3. இச்சட்டத்தில் வேறுவிதமாகப் பொருள் காண வேண்டி யிருந்தாலன்றி,

**சொற்பொருள் விளக்கங்கள்**

அ) 'வழக்கம்', 'வழக்காறு' என்ற சொற்கள் நீண்ட காலமாகவும் தொடர்ந்தும் ஒரே சீராகவும் ஒரு குறிப்பிட்ட பகுதி, இனம், சாதி, பிரிவு அல்லது குடும்பத்தைச் சார்ந்த இந்துக்களிடையே புழக்கத்தில் இருந்து சட்டத்தால் வலியுறுத்தப்பட்ட விதிமுறைகளைக் குறிக்கும்.

ஆனால், விதிமுறைகள் உறுதியானவையாகவும், தக்க காரணம் உடையனவாகவும், பொது நன்மைக்கு முரண்பாடில்லாதனவாக வும் இருத்தல் வேண்டும்.

மேலும், விதிமுறையொன்று ஒரு குடும்பத்திற்கு மட்டும் உரியதாக இருந்தால், அதை அக்குடும்பத்தார் தொடர்ந்து கடைப்பிடித்து வந்திருத்தல் வேண்டும்.

ஆ) **'மாவட்ட நீதிமன்றம்'** என்பதில் நகர உரிமையியல் நீதிமன்றம், முதலேற்பு உரிமையியல் ஆள்வரை நீதிமன்றம், மேலும் இச்சட்டத்தில் குறித்த நடைமுறைகளை விசாரிப்பதற் கென்று மாநில அரசால் அரசுப் பதிவிதழில் அறிவிப்பு செய்யப் பட்ட இதர உரிமையியல் நீதிமன்றங்கள் ஆகியவை அடங் கும்.

இ) **'முழுநிலை உறவு', 'ஓர்வழி உறவு' :**

பொது மூதாதை ஒருவருக்கு ஒரே மனைவியின் மூலம் தோன்றிய நபர்களிருவர், ஒருவர்க்கொருவர் முழுநிலை உறவின ராவார். பொது மூதாதை ஒருவருக்கு வெவ்வேறு மனைவியின் மூலம் தோன்றிய நபர்களிருவர், ஒருவர்க்கொருவர் ஓர்வழி உறவினராவார்.

'தாய்வழி உறவு'

பொது மூதாதை ஒருத்திக்கு வெவ்வேறு கணவர்கள் மூலம் தோன்றிய நபர்களிருவர் ஒருவர்க்கொருவர் தாய்வழி உறவினராவார்.

**விளக்கம்:**

கூறுகள் (இ), (ஈ) ஆகியவற்றில் 'மூதாதை ஒருவர்' என்பது தந்தையையும், 'மூதாதை ஒருத்தி' என்பது தாயையும் குறிக்கும்.

(உ) **விதிமுறை செய்யப்பட்ட** என்பது, இச்சட்டத்தின் கீழ் வகுத்தமைக்கப்பட்ட விதிகளைக் குறிக்கும்.

(ஊ) (i) **'சபிண்ட உறவுமுறை'** தாய்வழியில் மூன்றாவது தலைமுறை வரையிலும், தந்தை வழியில் ஐந்தாவது தலைமுறை வரையிலும் நீடிக்கிறது. தலைமுறைகளின் எண்ணிக்கைகளைக் கணக்கிடுகையில், எவரது உறவுமுறையைக் கண்டுபிடிக்க

வேண்டுமோ அவரை முதல் தலைமுறையாக வைத்து எண்ணுதல் வேண்டும்.

ii) நேர் மரபுவழியைச் சார்ந்த நபர்களிருவரில் ஒருவர் மற்றொருவருக்குச் **'சபிண்டர்'** ஆவதோடு அவர் அத்தலைமுறையில் பொது மூதாதையர் ஒருவரைப் பெற்றிருந்தால், அவரும் **'சபிண்ட'** உறவுடையவராவார்.

**எ) 'தடுக்கப்பட்ட உறவுமுறை'**

கீழ்வரும் நிலையிலுள்ள நபர்களிருவர் **'தடுக்கப்பட்ட உறவு முறை'**யினைச் சார்ந்தவரென்று சொல்லப்பெறுவர்.

i) ஒருவர் மற்றொருவரின் நேர்வழி இறங்கு உறவு மூதாதையராக இருக்கும்போது; அல்லது

ii) ஒருவர் மற்றொருவருடைய மூதாதையின் மனைவி அல்லது நேர்வழி ஏறுமுறை உறவினராக இருக்கும்போது; அல்லது

iii) ஒருவர் மற்றொருவருடைய உடன்பிறந்தான், தகப்பன் அல்லது தாயின் உடன்பிறந்தான், பாட்டன் அல்லது பாட்டியின் உடன்பிறந்தார்களின் மனைவியாக இருக்கும்போது; அல்லது

iv) அவ்விருவரும் உடன்பிறந்தானும் உடன்பிறந்தாளும், மாமனும் மருமகளும், அத்தையும் மருமகனும் அல்லது உடன்பிறந்தான் உடன்பிறந்தாள் மக்கள் அல்லது இரு உடன்பிறந்தாரின் மக்கள் அல்லது இரு உடன்பிறந்தாள்களின் மக்களுமாக இருக்கும்போது.

**விளக்கம். —**

கூறுகள் (ஊ), (எ) ஆகியவற்றில் சொல்லப்பட்ட உறவு முறையில் அடங்குபவர்கள்: —

i) முழுநிலை உறவு, ஓர்வழி உறவு, தாய்வழி உறவு உடையவர்கள்;

ii) முறைமணப் பிறப்பு அல்லது முறையற்ற மணப்பிறப்பு வழித்தோன்றி, குருதித் தொடர்பு உடையவர்கள்.

iii) குருதித் தொடர்பால் ஏற்பட்டதுபோன்று மகவேற்பால் ஏற்பட்ட உறவுநிலையில் உள்ளவர்கள்.

## வேறுவிதமாகப் பொருள்காண வேண்டியிருந்தாலன்றி

இப்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்கள், வாசகங்கள் முதலானவற்றைக் குறித்து வேறுவிதமாகப் பொருள்காண வேண்டியிருந்தாலன்றி, மற்றவிதத்தில் அவை முரண்படுகின்ற வகையில் பொருள் காணுதல் கூடாது. சந்தர்ப்ப நிலையில் பிரிவுகளின் வாசகங்கள் பொருந்தாது போகின்றபோது நீதிமன்றங்கள் தலையிட்டுப் பொருத்தமான விளக்கத்தைத் தரும்.

## கூறு (அ): 'வழக்கம்', வழக்காறு'

வழக்கம் என்பது என்ன? ஒரு குடும்பத்திலோ ஊரிலோ இனத்திலோ சாதியிலோ குறிப்பிட்ட நிலப்பரப்பிலோ தொன்று தொட்டுப் பின்பற்றப்பட்டு வரும் விதிகளே வழக்கமாகும். ஒவ்வொரு நாட்டிலும் நிலவி வருவது இனமுறைச் சட்டத்தின் (Personal Law) தந்தை வழக்கம்தான். பன்னெடுங்காலமாகச் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்டுப் பின்பற்றப்படும் வழக்கம் எழுதப் படாச் சட்டமாகும். இந்துச் சட்டத்தில் ஒரு முக்கியப் பாத்திரத்தை வழக்கம் வகிக்கிறது. தொட்டிலிலே மனிதனைச் சந்திக்கும் வழக்கம் சுடுகாட்டிலே தீ மூட்டப்படும் வரை அவனைத் தொடர்கிறது. மனுசுமிருதியும் வழக்கத்தில் இருப்பதுதான் உயர்ந்த தருமம் என்று சொல்கிறது. ஆதார பூர்வமாக வழக்கம் மெய்ப்பிக்கப்படும்போது பழைய சாத்திரங்கள் தள்ளி வைக்கப்பட்டு, வழக்கமே நீதி மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சுமிருதியிலிருந்து வழக்கம் முரண்படும்போது வழக்கத்தையே சரியானதாகக் கருதவேண்டும் என்று 'பிரிவி கவுன்சில்' தீர்ப்பளித்தது.[25] ஆனால், வழக்கம் ஒழுங்கீனமானதாகவும் பொதுநலனுக்கு விரோதமானதாகவும் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு எதிரானதாகவும் இருந்தால் அது செல்லுபடியாகாது.

வழக்கத்தில் மூன்று முக்கியப் பிரிவுகள் உண்டு. அவை:

1) வட்டார வழக்கம் (Local custom)
2) சாதி அல்லது வகுப்பு வழக்கம் (Class custom)
3) குடும்ப வழக்கம் (Family custom).

வட்டார வழக்கம் என்பது குறிப்பிட்ட மாவட்டத்திலோ மாநிலத்திலோ நிலவி வருவதாகும். அங்குள்ள அத்தனைபேரும் அதற்குக் கட்டுப்பட்டவர்கள்.

குடும்ப வழக்கம் இதற்கு மாறானது. இவ்வழக்கம் குடும்பத்தில் உள்ளவர்களை மட்டுமே கட்டுப்படுத்தும்.

சாதி அல்லது வகுப்பு வழக்கம் அந்தச் சாதியினரை மட்டும் அவர்கள் எங்கு இருந்தாலும் கட்டுப்படுத்தும்.

வழக்கத்தைத் தங்களுக்குச் சாதகமாகக் காட்டுகிறவர்கள் அதை உறுதிப்பட மெய்ப்பிக்க வேண்டும்.

வழக்கம் என்று சொன்னதும் அதை அப்படியே நீதிமன்றம் அங்கீகரித்துவிடாது. நீதிமன்றம் வழக்கத்தை உண்மையானது என்று ஏற்றுக்கொள்ளக் கீழ்க்காணும் கூறுகள் வழக்கத்திற்கு இருத்தல் வேண்டும்.

1) வழக்கம் தொன்மையானதாக இருக்கவேண்டும்
2) தொடர்ந்து அமலில் இருக்கவேண்டும்
3) நியாயமானதாக இருக்கவேண்டும். ஒழுக்கக் குறைவானதாகவோ பொது நலத்திற்கு விரோதமானதாகவோ இருக்கக் கூடாது
4) வழக்கம் குழப்பம் இல்லாது தெளிவானதாக இருக்க வேண்டும்
5) வழக்கம் நிச்சயமானதாக இருக்க வேண்டும்
6) அரசு இயற்றியுள்ள சட்டங்களால் தடை செய்யப்படாததாக இருக்க வேண்டும்.

ஒரு வழக்கம் எவ்வளவு தொன்மையானது என்று தீர்மானிப்பது அவ்வளவு எளிதன்று. இத்தனை ஆண்டு என்று யாரும் திட்டவட்டமாகக் கால வரையறை செய்ய முடியாது. அது நீண்ட காலமாகப் பொதுமக்களின் ஒப்புதலுடன் நடைமுறையில் இருக்கிறதா என்பதைத்தான் கவனிக்க வேண்டும். ஒரு சாதியின் முக்கியப் பிரமுகர்கள் பலரிடமிருந்து உறுதிமொழி ஆவணம் (Affidavit) வாங்கி, இதைத்தான் வழக்கமாகக் கருதவேண்டும்

என்றோ இதுவே வழக்கமாக உள்ளது என்றோ கூறினால் அது வழக்கத்தை மெய்ப்பித்ததாகக் கருதப்பட மாட்டாது. அந்த வகுப்பிலுள்ள அனைவரின் ஒருமனதான ஒப்புதலும் அந்த வழக்கத்திற்கு உண்டு என்பதை அடுக்கடுக்கான ஒப்புதல்களையும், நிகழ்ச்சிகளையும், அவை மாறாமல் தொடர்ந்து வந்திருப்பதையும் மெய்ப்பிக்க வேண்டும்.

## 'வழக்கம்' 'வழக்காறு' (Custom and Usage) வேறுபாடு

வழக்கம் வேறு, வழக்காறு வேறு. இரண்டும் ஏறக்குறைய ஒரே பொருளில் பேசப்பட்டு வந்தாலும் இரண்டிற்கும் சற்று வேறுபாடு உண்டு என்பதைச் சட்டங்கள் தெளிவாக்கி இருக்கின்றன. வழக்காறு எங்கே முடிகிறதோ அங்கே வழக்கம் ஆரம்பமாவதாகக் கொள்ளலாம். ஒரே மாதிரியாக இருத்தல், நெடுங்காலமாக இருத்தல் முதலிய அமிசங்கள் வழக்கத்திற்கு அவசியம். வழக்காற்றிற்கு இவை தேவையில்லை. வழக்காறு வளர்ந்து கொண்டிருக்கலாம். வழக்காடுவோர் அவற்றை ஒத்துக் கொண்டிருக்கலாம்; புரிந்து கொண்டும் இருக்கலாம். அவையே போதுமானவையாகும்'.[27]

## கூறு (ஆ) : 'மாவட்ட நீதிமன்றம்' (District Court)

'மாவட்ட நீதிமன்றம்' என்பதில் முதலேற்பு உரிமையியல் ஆள்வரை நீதிமன்றம், நகர உரிமையியல் நீதி மன்றம் இல்லாத இடத்தில் உயர்நீதிமன்றம் (High Court),[28] நகர உரிமையியல் நீதிமன்றம் (City Civil Court), கூடுதல்மாவட்ட நீதிமன்றம் (Additional District Court).திருமணத் தொடர்புடைய வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென்று அரசாங்கத்தால் அரசுப் பதிவிதழில் சிறப்பாக அறிவிப்புச் செய்யப்பட்ட சிறப்பு நிலை மாவட்ட நீதிமன்றம் முதலியவை அடங்கும். ஆனால், ஒரு கோட்ட உரிமையியல் நீதிமன்றம் (Munsif Court) அடங்காது.'[29]

## கூறு (இ): 'முழுநிலை உறவு' (Full Blood), 'ஓர்வழி உறவு' (Half Blood):—

பொது மூதாதை ஒருவரின் ஒரே தாரத்திற்குப் பிறந்தவர்கள் முழுநிலை உறவுச் (Full Blood) சகோதரர்கள் ஆவார்கள். அதே

பொது மூதாதையின் இரண்டாவது தாரத்திற்குப் பிறந்தவர்கள் முதல் தாரத்துச் சகோதரர்களுக்கு ஓர்வழி உறவுச் (Half Blood) சகோதரர்கள் ஆவார்கள். இந்த முழுநிலை உறவு, ஓர்வழி உறவு என்பவை முறைப்படி நடைபெற்ற திருமணங்கள் மூலம் பிறந்த குழந்தைகளுக்கு மட்டுமே உரியனவாகும். ஒருவனின் வைப்பாட்டி பிள்ளை, முறையான திருமணத்தில் பிறந்த பிள்ளைகளோடு இந்த உறவுகளைக் கொண்டாட முடியாது.[30]

## கூறு (ஈ): 'தாய்வழி உறவு' (Uterine Blood)

மூதாதை ஒருத்தி முதலில் ஒருவனை மணந்துகொண்டு பெற்ற குழந்தைகளுக்கும், பிறகு இன்னொருவனை மணந்து கொண்டு பெற்ற குழந்தைகளுக்கும் இடையே உள்ள உறவு **'தாய்வழி உறவாகும்'**.[31]

## கூறு (உ): 'விதிமுறை செய்யப்பட்ட' (Prescribed)

இந்துத் திருமணச் சட்டம், பிரிவு 8-இன்படி மாநில அரசாங்கமொன்று திருமணப் பதிவுத் தொடர்புடைய விதிகளை இயற்றலாம். பிரிவுகள் 14, 21 உயர்நீதி மன்றம் சில விதிகளைச் செய்வதற்கான அதிகாரத்தை அளிக்கிறது.[32]

## கூறு (ஊ): 'சபிண்ட உறவுமுறை' (Sapinda Relationship):—

இந்துத் திருமணச் சட்டம், பிரிவு 3, கூறு (ஊ) இன்படி, சபிண்ட உறவுமுறையில் உள்ளவர்கள் திருமணம் செய்துகொள்ள முடியாது. இவ்வாறு சபிண்ட உறவுமுறையில் உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் மணக்கக்கூடாது என்று தடைவிதித்ததற்குக் காரணம், அன்று கூட்டுக்குடும்பமாக வாழ்ந்த இந்துக்களில் பருவம் வந்த ஆடவரும், பெண்டிரும் பருவ உணர்ச்சித் தூண்டுதலால் தவறிழைத்துவிடக் கூடாதென்பதற்கேயாம்.

சபிண்ட உறவு முறையினர் மணந்துகொள்ளக்கூடாது எனும் விதி எல்லா வருணத்தவருக்கும் பொருந்தும். இந்தத் தடை செய்யப்பட்ட உறவு நிலைகளை மீறியும் ஒரே கோத்திரத்தில் மணந்து

கொள்ளக் கூடாது என்ற விதியை மீறியும் மணந்துகொண்டால், அத்திருமணத்தால் பெண்ணுக்கு 'மனைவி' என்ற தகுதி கிடைக்காது; அவள் மீண்டும் மணந்து கொள்ளவும் முடியாது. ஆனால், அவளைப் பராமரிக்க வேண்டியபொறுப்பு கைப்பிடித்தவனுக்கு உண்டு. இப்படிப்பட்ட திருமணங்களை அனுமதிக்கிற வழக்கம் இருந்து மணந்துகொண்டால் அது குற்றமாகாது.[33] எடுத்துக் காட்டாகச் சகோதரியின் மகளையும், தந்தையின் சகோதரி மகளையும், தாயின் சகோதரனின் மகளையும் மணம்புரியும் வழக்கம் தென்னிந்தியாவில் உண்டு.[34]

## தர்மசாத்திரம் கூறும் சபிண்ட உறவு முறையும், சட்டம் கூறும் சபிண்ட உறவுமுறையும்

தர்ம சாத்திரங்கள் கூறும் சபிண்ட உறவுமுறையிலிருந்து சட்டம் கூறும் சபிண்ட உறவுமுறை மாறுபட்டது. தர்ம சாத்திரம் தந்தை வழியில் ஏழு தலைமுறை வரையிலும், தாய் வழியில் ஐந்து தலைமுறை வரையிலும் சபிண்ட உறவு உள்ளதாகக் கூறுகிறது. ஆனால், இச்சட்டம் தந்தை வழியில் ஐந்து தலைமுறை வரையிலும், தாய்வழியில் மூன்று தலைமுறை வரையிலும் உள்ளதாக மாற்றிவிட்டது. தர்மசாத்திரப்படி பிள்ளைக்குப் பெண்ணும், பெண்ணுக்குப் பிள்ளையும் சபிண்டாவாக இருக்க வேண்டும். பிள்ளைக்குப் பெண் சபிண்டாவாகவும் அதே சமயம் பெண்ணுக்குப் பிள்ளை சபிண்டாவாகவும் இல்லாமல் இருந்தால், சபிண்ட உறவில் மணம் புரிந்துகொள்வதற்கு உரிய தடை உறுதியானதாக இருக்காது. ஆனால், சட்டம் ஒருவன் ஒருத்திக்குச் சபிண்டாவாக இருக்கும்போது அவள் அவனுக்குச் சபிண்டாவாக இல்லாமல் இருக்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறுகிறது. சாத்திர முறையில் தலைமுறையைக் கணக்கிடும்போது பொது முன்னோர் வரை மேல் நோக்கியும், பின்னர் அவரிடமிருந்து மணமக்கள் வரை கீழ்நோக்கியும் கணக்கிடப்படுகிறது. ஆனால், சட்டத்தில் தலைமுறை மேல்நோக்கி மட்டுமே கணக்கிடப்படுகிறது.[35]

விளக்க வரைபடம் - 1


ததாததத
த4
ததாதத
த3
ததாத
த2
ததா
த1
த
அ
ஆ
பெ10
ஆபெம
பெ11
பெ8
பெ9
ம
மம
மமம
மமமம
பெ7
மமம1
பெ6
பெ5
பெ3
பெ4
பெ1
பெ2

இவ்விளக்க வரைபடத்தின் மூலம் தந்தை வழியில் மண மகனின் சபிண்ட உறவுமுறையை எளிதில் விளங்கிக் கொள்ள லாம்.

இவ்விளக்க வரைபடத்தில் 'அ' என்பது மணமகனையும், 'த' என்பது 'அ'-இன் தந்தையையும், 'த1' முதல் 'த 4' வரை 'அ'-இன் தந்தையின் தந்தைவழி மூதாதையரையும், 'ததா' என்பது 'அ'-இன் தந்தையின் தாயையும், 'ததாத' மற்றும் 'ததாதத', 'ததாததத' என்பவை 'அ'-இன் தந்தையின் தாயின் தந்தைவழி மூதாதையரையும், 'ம', 'மம', 'மமம1', 'மமமம'என்பவை முறையே 'த3'-இன் மகன், பேரன், கொள்ளுப் பேரன்,கொள்ளுக்கொள்ளுப்பேரனையும், 'ஆ'என்பது 'ததாதத'-இன் மற்றொரு மகனையும், 'பெ1' முதல் 'பெ11' வரை பெண் வழி உறவினர்களையும் குறிக்கும்.

அ) 'அ', 'பெ1' - ஆகியோரது பொது மூதாதையான 'த3' 'அ'-இன் தந்தையின் தந்தையின் தந்தையின் தந்தையும், 'பெ1'-இன் தாயின் தந்தையுமாவார். 'த3' 'அ'-இன் தந்தை வழியில் 'அ' இடமிருந்து ஐந்தாவது தலைமுறையையும், 'பெ2' இன் தாய்வழியில் 'பெ2'-இடமிருந்து மூன்றாவது தலைமுறையை யும் சேர்ந்தவராயிருப்பதால், 'அ'-வும், பெ2'-உம் ஒருவருக் கொருவர் சபிண்டர்கள் ஆவர்.

ஆ) 'அ', 'பெ4' - ஆகியோரது பொது மூதாதையான 'த3' 'அ'-வுக்குத் தந்தையின் தந்தையின் தந்தையும்' 'பெ4'-க்குத் தாயின் தந்தையுமாவார். 'த3' 'அ'-இன் தந்தை வழி யில் 'அ' விடமிருந்து ஐந்தாவது தலைமுறையையும் 'பெ4'-இன் தாய்வழியில், 'பெ4' - இடமிருந்து நான்காவது தலைமுறையை யும் சேர்ந்தவராயிருப்பதால், ஈண்டு 'அ'-வும் 'பெ4'-உம் சபிண்டர்கள் ஆவதில்லை. ஆனால், 'அ'-வும், 'பெ3'-உம் சபிண்டர்கள் ஆவர்.

இ) மேலே உள்ள வரைபடத்தில் 'த3' 'அ' - இடமிருந்து 'அ'-இன் தந்தைவழியில் ஐந்தாவது தலைமுறையையும் 'பெ 5' இடமிருந்து 'பெ5'-இன் தந்தை வழியில் நான்காவது தலை

முறையையும், 'பெ6'-இடமிருந்து, 'பெ6'-இன் தந்தைவழியில் ஐந்தாவது தலைமுறையையும் சேர்ந்தவராயிருப்பதால், ஈண்டு 'அ' 'பெ5' மற்றும் 'பெ6' ஆகியோருக்குச் சபிண்டராவார்; ஆனால், 'பெ7'-க்குச் சபிண்டராகார். காரணம், 'தா' 'பெ7' இடமிருந்து 'பெ 7'-இன் தந்தை வழியில் ஆறாவது தலை முறையைச் சேர்ந்தவராயிருப்பதால்.

ஈ) 'த4' 'அ' இடமிருந்து 'அ' — இன் தந்தை வழியில் ஆறாவது தலைமுறையைச் சேர்ந்தவராயிருப்பதால், 'அ' -வுக்கும் 'த4' இன் பெண் இறங்குவழி ('த3'இன் வழியிலன்றி)யினருக்கு மிடையே சபிண்ட உறவு கிடையாது.

உ) ஈண்டு 'ததாததத' — வுங்கூட 'அ' — வுக்கு 'அ' — இடமிருந்து ஆறாவது தலைமுறையைச் சார்ந்திருப்பதால், 'ததாததத' — இன் பெண் இறங்குவழி ('ததாதத' வழியிலன்றி) யினரும், 'அ' — வும் சபிண்ட உறவினராவதில்லை.

ஊ) 'அ' 'பெ 9' — ஆகியோரது பொதுமூதாதையான 'ததாதத' தந்தையின் தாயின் தந்தையின் தந்தையும் 'பெ 9'இன் தாயின் தந்தையுமாவார். 'ததாதத' 'அ' — இன் தந்தை வழியில், 'அ' இடமிருந்து ஐந்தாவது தலைமுறையையும்; 'பெ9' இன் தாய்வழியில், 'பெ9' — இடமிருந்து மூன்றாவது தலைமுறையையும் சேர்ந்தவராயிருப்பதால், ஈண்டு 'அ' — வும், 'பெ9'-வும் ஒருவர்க்கொருவர் சபிண்டர்கள் ஆகின்றார்கள்.

எ) 'அ', 'பெ11' — ஆகியோரது பொதுமூதாதையான 'ததாதத', 'அ' — இன் தந்தையின் தாயின் தந்தையும், 'பெ11'இன் தந்தையின் தாயின் தந்தையின் தந்தையுமாவார். 'ததாதத' 'அ' — இன் தந்தை வழியில் 'அ' — இடமிருந்து ஐந்தாவது தலைமுறையையும் பெ'11'இன் தந்தை வழியில், 'பெ11' — இடமிருந்து ஐந்தாவது தலைமுறையையும் சேர்ந்தவராயிருப்பதால், ஈண்டு 'அ'-வும், 'பெ11'-உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர்களாகின்றார்கள்.[36]

விளக்க வரைபடம் - 2



மேலே கண்ட விளக்க வரைபடத்தில் 'அ' என்பது மண மகனையும், 'த2' என்பது 'அ'-இன் தந்தையின் தந்தையின் தந்தையையும், 'ம', 'மம', 'மமம',' மமமம' என்பவை முறையே 'த2'-இன் மகன், பேரன், கொள்ளுப்பேரன், கொள்ளுக் கொள்ளுப் பேரர்களையும், 'பெ1' முதல் 'பெ8' வரையிலானவை பெண்வழி உறவினர்களையும் குறிக்கும்.

(அ) 'அ', 'பெ1' - ஆகியோரது பொது மூதாதையான 'த2' 'அ' -இன் தந்தை வழியில், 'அ' -இடமிருந்து நான்காவது தலைமுறையையும், 'பெ2' -இன் தாய் வழியில், 'பெ2' -இடமிருந்து மூன்றாவது தலைமுறையையும், 'பெ3' -இன் தாய்வழியில் 'பெ3' - இடமிருந்து நான்காவது தலைமுறையையும் சேர்ந்தவரா யிருப்பதால், ஈண்டு 'அ' -வும், 'பெ2' -உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர்களாவார்.

(ஆ) 'அ' -வும், 'பெ4' -உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர்கள் ஆவர். எவ்வாறெனில், 'த2' 'அ' -இன் தந்தை வழியில், 'அ'-விடமிருந்து நான்காவது தலைமுறையையும், 'பெ4' -இன் தந்தைவழியில், 'பெ4'-இடமிருந்து மூன்றாவது தலைமுறையை யும் சேர்ந்தவராயிருப்பதால். ஆனால், 'அ'-வும், 'பெ5'-உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர்கள் ஆவதில்லை. ஏனெனில், இவ் விருவருக்கும் பொது மூதாதையாகவுள்ள 'த2' 'பெ5' - இடமிருந்து நான்காவது தலைமுறையினராயிருப்பதால்.

(இ) 'அ' -வும், 'பெ6' -உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர் களாவர். எவ்வாறெனில் 'த2' இவ்விருவருக்கும் பொது மூதாதையாக விருந்து, 'அ' -இன் தந்தை வழியில் 'அ' - இடமிருந்து நான்காவது தலைமுறையையும், 'பெ6' -இன் தந்தைவழியில், 'பெ6'-இடமிருந்து நான்காவது தலைமுறையையும் சேர்ந்தவரா யிருப்பதால்.

(ஈ) 'அ' -வும் 'பெ7' -உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர்களா வர். எவ்வாறெனில், 'த2' இவ்விருவருக்கும் பொது மூதாதையராக விருந்து. 'அ' -இன் தந்தைவழியில், 'அ' - இடமிருந்து நான் காவது தலைமுறையையும் 'பெ7' - இன் தந்தைவழியில்,

விளக்க வரைபடம் - 3



'பெ7'-இடமிருந்து ஐந்தாவது தலைமுறையையும் சேர்ந்தவரா யிருப்பதால்.

(உ) 'அ' -வும், 'பெ8' -உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர்கள் ஆவதில்லை. ஏனெனில், பொது மூதாதையான 'த2' 'அ' - இன் தந்தை வழியில், 'அ' - இடமிருந்து நான்காவது தலைமுறையை யும், 'பெ8' -இன் தந்தை வழியில், 'பெ8' - இடமிருந்து ஆறாவது தலைமுறையையும் சேர்ந்தவராயிருப்பதால்.[37]

விளக்க வரைபடம் 3இல் 'அ' என்பது மணமகனையும், 'தா' என்பது அவனது தாயையும், 'தாத' என்பது அவனது தாயின் தந்தையையும், 'தாதா' என்பது அவனது தாயின் தாயை யும், 'தாதத' என்பது அவனது தாயின் தந்தையின் தந்தையை யும், 'தாதாத' என்பது அவனது தாயின் தாயின் தந்தையையும், 'தாதச' என்பது அவனது தாயின் தந்தையின் சகோதரனையும், 'தாதஉ' என்பது அவனது தாயின் தந்தையின் உடன்பிறந்தாளை யும், 'தாச' என்பது அவனது தாயின் சகோதரனையும், 'தாதாஉ' என்பது அவனது தாயின் தாயின் உடன்பிறந்தாளையும், 'தாசம' என்பது அவனது தாயின் சகோதரனின் மகளையும், 'தாசமம' என்பது அவனது தாயின் சகோதரனின் மகனின் மகனையும், 'தாஉம'என்பது அவனது தாயின் உடன்பிறந்தாளின் மகனையும், 'பெ1' முதல் 'பெ11' வரையிலானவை பெண்வழி உறவினர் களையும் குறிக்கும்.

அ) 'அ', 'பெ1', 'பெ2' — ஆகியோர்க்குத் 'தாத' பொது மூதாதை; 'பெ1', 'அ' — இன் சகோதரனின் மகள். ஈண்டு 'தாத' 'அ' — இன் தாய்வழியில். 'அ' — இடமிருந்து மூன்றா வது தலைமுறையையும், 'பெ1'இன் தந்தைவழியில் 'பெ1' — இடமிருந்து மூன்றாவது தலைமுறையையும் சார்ந்தவராயிருப்ப தால் 'அ'—வும் 'பெ1'—உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர்களாகி றார்கள். (இதனை, கூறு (எ) — இல் காணலாம். சகோதரன், சகோதரிகளது குழந்தைகளாக இருப்பின் அவர்கள் தடுக்கப்பட்ட உறவு முறையில் வருவரென்பதை) எனினும், 'அ', 'பெ2' ஆகி யோர்க்கிடையேயான உறவுமுறை வேறுபட்டதாகும். 'அ', 'பெ2' ஆகியோர்க்கான பொது மூதாதை, 'தாத' 'அ' — இன்

தந்தை வழியில், 'அ' — இடமிருந்து மூன்றாவது தலைமுறையையும் 'பெ2' — இடமிருந்து நான்காவது தலைமுறையையும் சார்ந்தவராயிருப்பதால் ஈண்டு 'அ' — வும் 'பெ2' —உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர்கள் ஆவதில்லை. ஆகையால், இவர்கள் கூறு (எ) இல் கூறப்படும் தடுக்கப்பட்ட உறவு முறைக்குள் வாரார்.

ஆ) 'அ', 'பெ3', 'பெ4' ஆகியோர்க்குத் 'தாத' பொது மூதாதை. 'பெ' 'அ' — இன் தாயின் சகோதரனின் மகனின் மகள், 'பெ4' 'அ' — இன் தாயின் சகோதரனின் மகனின் மகனின் மகள்; 'தாத' 'அ' — இன் தாய்வழியில், 'அ' — இடமிருந்து மூன்றாவது தலைமுறையையும், 'பெ3'இன் தந்தை வழியில், 'பெ3' — இடமிருந்து நான்காவது தலைமுறையையும் 'பெ4'இன் தந்தை வழியில், 'பெ4' — இடமிருந்து ஐந்தாவது தலைமுறையையும் சார்ந்தவராயிருப்பதால் ஈண்டு 'அ' — வும் 'பெ 3'—உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர்களாகிறார்கள். இவ்வாறே 'அ' — வும் பெ4'உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர்களாகிறார்கள்.

இ) 'அ' 'பெ5' ஆகியோர்க்குத் 'தாத' பொது மூதாதை; 'பெ5' 'அ' — இன் தாயின் சகோதரியின் மகனின் மகள். 'தாத' 'அ' — இன் தாய்வழியில், 'அ' — இடமிருந்து மூன்றாவது தலைமுறையையும் 'பெ5'இன் தந்தை வழியில், 'பெ5' — இடமிருந்து நான்காவது தலைமுறையையும் சார்ந்தவராயிருப்பதால், ஈண்டு 'அ' — வும் 'பெ5' — உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர்களாகிறார்கள்.

ஈ) 'அ' 'பெ6', 'பெ7' — ஆகியோர்க்குத் 'தாத' பொது மூதாதை; 'பெ5', 'அ' — இன் சகோதரியின் மகள். 'தாத' 'அ' — இன் தாய்வழியில், 'அ' — இடமிருந்து மூன்றாவது தலைமுறையையும் 'பெ6'இன் தாய்வழியில், 'பெ6' — இடமிருந்து மூன்றாவது தலைமுறையையும் சார்ந்தவராயிருப்பதால், ஈண்டு 'அ' — வும் 'பெ6' —உம் ஒருவர்க்கொருவர் சபிண்டர்களாகிறார்கள். (இதனை, கூறு (எ) — இல் காணலாம், இரு சகோதரிகளது குழந்தைகள் தடுக்கப்பட்ட உறவுமுறைக்குள் வருவர்) எனினும், 'அ', 'பெ7' ஆகியோரது உறவுமுறை வேறுபட்ட

தாகும். பொது மூதாதையான 'தாத' 'அ' — இன் தாய்வழியில் 'அ' — இடமிருந்து மூன்றாவது தலைமுறையையும், 'பெ7'இன் தாய்வழியில் 'பெ7' — இடமிருந்து நான்காவது தலைமுறையையும் சார்ந்தவராயிருப்பதால், ஈண்டு 'அ' —வும் 'பெ7' — வும் ஒருவர்க்கொருவர் சபிண்டர்களாவதில்லை; தடுக்கப்பட்ட உறவு முறைக்குள்ளும் வாரார்.

உ) 'தாதத' 'அ' — இடமிருந்து, 'அ' - இன் தாய்வழியில் நான்காவது தலைமுறையினராயிருப்பதால், ஈண்டு 'அ'—வுக்கும் 'தாதத' பெண் கொடிவழியினருக்குமிடையே சபிண்ட உறவு முறை கிடையாது; ('தாத' — வைச் சார்ந்திருக்கும் 'அ' — வழியினரைத் தவிர). விளக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள, 'அ' — இன் தாயின் தந்தையின் மகளான 'பெ8' — வும் 'அ' — இன் தாயின் தந்தையின் மகளான 'பெ9' — வும், 'தாதத' மூதாதையிடமிருந்து மூன்றாவது தலைமுறையைச் சார்ந்தவராயிருந்தபோதிலும்' 'அ' — வுக்கு அவர்கள் சபிண்டர்களாவதில்லை.

ஊ) அவ்வாறே 'தாதாத' 'அ' — இன் தாய்வழியில், 'அ' — இடமிருந்து நான்காவது தலைமுறையைச் சார்ந்தவராயிருப்பதால் 'அ' — வுக்கும் 'தாதாத' கொடிவழியினருக்குமிடையே ('அ' சார்ந்திருக்கும் 'தாதா' கொடிவழியினரைத் தவிர) சபிண்ட உறவு கிடையாது. விளக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'அ' — இன் தாயின் தாயின் சகோதரனின் மகளான 'பெ 10' — வும் 'அ' — இன் தாயின் தாயின் சகோதரியின் மகளான 'பெ11' — வும் 'தாதாத' மூதாதையிடமிருந்து மூன்றாவது தலைமுறையைச் சார்ந்தவராயிருந்தபோதிலும், 'அ' — வுக்கு அவர்கள் சபிண்டர்கள் ஆவதில்லை.[39]

## கூறு (எ): தடுக்கப்பட்ட உறவுமுறை (Prohibited Relationship)

இப்பிரிவு, திருமணத்திற்குத் தடுக்கப்பட்ட உறவுநிலையில் உள்ளவர்கள் யார் யார் என்பதைப் பற்றிக் கூறுகின்றது.

## ஆண்மகன் மணக்க முடியாதவர்கள்:—

1) ஏறுவழி உறவிலுள்ள பெண்
2) ஏறுவழி உறவிலுள்ளவரின் மனைவி அல்லது இறங்கு வழி உறவினரின் மனைவி
3) சகோதரனின் மனைவி
4) தந்தையினுடைய சகோதரர் மனைவி
5) தாயினுடைய சகோதரர் மனைவி
6) பாட்டனுடைய சகோதரர் மனைவி
7) பாட்டியினுடைய சகோதரர் மனைவி
8) சகோதரி
9) சகோதரன் மகள்
10) சகோதரி மகள்
11) தந்தையின் சகோதரி
12) தாயின் சகோதரி
13) தந்தையின் சகோதரி மகள்
14) தந்தையின் சகோதரர் மகள்
15) தாயின் சகோதரி மகள்
16) தாயின் சகோதரர் மகள்.

## பெண்கள் மணக்கமுடியாதவர்கள்:—

1) அவளுடைய நேரடியான ஏறுவழி உறவினரான தந்தை, தந்தையின் தந்தை முதலியோர்
2) நேரடியான ஏறுவழி உறவினரின் கணவன் அல்லது இறங்குவழி உறவினரின் கணவன்
3) மருமகன், பேத்தியின் கணவன் போன்ற நேரடியான இறங்குவழி உறவினரின் கணவன்
4) சகோதரன்
5) தந்தையின் சகோதரர்

6) தாயின் சகோதரர்
7) சகோதரனின் மகன்
8) சகோதரியின் மகன்
9) தந்தையின் சகோதரர் மகன்
10) தந்தையின் சகோதரி மகன்
11) தாயின் சகோதரர் மகன்
12) தாயின் சகோதரி மகன்.

இன்னார் இன்னின்னாரை மணந்துகொள்ள முடியாது என்று கூறப்பட்டிருக்கும் பட்டியலுக்குப் புறம்பாகத் தடுக்கப்பட்ட உறவுநிலையில் இருப்போர் தம்முள் மணந்துகொள்ளும் வழக்கம் சில வகுப்பாரிடையே உள்ளது. எடுத்துக்காட்டாக, சகோதரியின் பெண்ணையோ தந்தையின் சகோதரிப் பெண்ணையோ திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் தென்னிந்தியாவில் சர்வ சாதாரணம். இப்படி மணந்துகொள்ளும் வழக்கம் இருந்தால் அதைச் சட்டம் அங்கீகரிக்கிறது. அப்படித் திருமணம் புரிந்து கொள்ளும் வழக்கம் இல்லாமல் இருந்து, சபிண்ட உறவிலோ தடுக்கப்பட்ட உறவு நிலையிலோ திருமணம் செய்துகொண்டால், அத்திருமணம் இச்சட்டத்தின் பதினோராவது பிரிவின்படி செல்லாததாகும். ஆனால், திருமணம் செல்லாது என்றாலும்கூடப் பிறக்கும் குழந்தைகள் முறையான திருமணத்தில் பிறந்த குழந்தைகளாகவே கருதப்படுவர். அவர்களுக்கு முறையான திருமணத்தில் பிறந்த குழந்தைகளுக்கு உரிய உரிமைகள் உண்டு. ஆனால், பெற்றோர்களின் மற்ற உறவினர்களின் சொத்தில் அவர்கள் எந்த உரிமையும் கொண்டாட முடியாது.[40]

4. இச்சட்டத்தில் வேறு விதமாக வெளிப்படையாக எதுவும் கூறப்பட்டிருந்தாலன்றி;

**சட்ட விளைவு**

அ) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அமலிலிருக்கும் இந்துச் சட்ட மூலங்கள், விதிகள், விளக்கங்கள், சட்டத்தின் ஒரு பகுதியாக

நடைமுறையிலிருந்து வரும் வழக்கம், வழக்காறு போன்றவை இச்சட்டத்தால் நீக்கப்படுகின்றன.

ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், உடன் முன் அமலிலிருக்கும் வேறு சட்டம், இச்சட்டத்தில் கண்டுள்ள செய்திகளைப் பொறுத்து முரணுடையதாக இருந்தால், அதுவும் இச்சட்டத்தால் நீக்கம் செய்யப்படுகிறது.

இப்பிரிவு, இச்சட்டத்தால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி உரைக்கின்றது.

கூறு (அ):

இந்துத் திருமணச் சட்டம் இந்து நூல்கள், விதிகள், இந்துச் சட்டத்திற்குத் தரப்படும் விளக்கங்கள், வழக்கம், வழக்காறு போன்றவற்றை நீக்கம் செய்கிறது.[41]

கூறு (ஆ):

இந்துத் திருமணச் சட்டம் அமலுக்கு வரும்போது, உடன் அமலிலிருக்கும் வேறு சட்டங்கள், அவை இயற்றப்பட்டதாக இருப்பினும் அல்லது வழக்க நெறியை அடியொற்றியதாக இருப்பினும், இச்சட்ட வகையங்களுக்கு முரண்பாடுடையதாக இருக்கும் போது, அவற்றை இச்சட்டம் நீக்கம் செய்கிறது.

ஆனால், 'திருவாங்கூர் ஈழவர் சட்டம்', 'பரோடா இந்து நிபந்த் சட்டம்', 'சென்னை அலிய சந்தான சட்டம்', 'குற்றவியல் நடைமுறைச் சட்டம்' முதலியவற்றை இச்சட்டம் நீக்கம் செய்வதில்லை.[42]

# இயல் 2

# இந்துத் திருமணங்கள்

5. பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கும்போது, இந்துக்கள் இருவரிடையே திருமணமொன்று நிகழ்ந்ததாகக் கருதப்படும். அவையாவன:

**இந்துத் திருமணம் ஒன்றிற்கான நிபந்தனைகள்**

i) திருமணக் காலத்தில் தரப்பினர் உயிருடன் வாழ்க்கைத் துணையாக வேறு எவரையும் பெற்றிருத்தல் கூடாது.

ii) திருமணக் காலத்தில் தரப்பினர்:

அ) பித்துநிலைக் காரணமாகச் செல்லத்தக்கதொரு ஒப்புதலைத் தரவியலாதவராக இருத்தல் கூடாது; அல்லது

ஆ) திருமணத்திற்குச் செல்லத்தக்கதொரு ஒப்புதலை அளிக்கக் கூடியவராக இருந்தும், மனக்கோளாறு போன்றவற்றால் துன்புற்று, அதன் காரணமாகத் திருமணத்திற்கும், மக்கள் பேற்றிற்கும் தகுதியற்றவராக இருத்தல் கூடாது; அல்லது

இ) அடிக்கடி புத்திசுவாதீனம் இழத்தல் அல்லது காக்காய் வலிப்பு நோயால் தாக்குறுபவராக இருத்தல் கூடாது.

iii) திருமணக் காலத்தில் மணமகன் இருபத்தொரு வயது நிறைந்தவனாகவும், மணமகள் பதினெட்டு வயதாகியவளாகவும் இருக்க வேண்டும்.

iv) தரப்பினர்களுக்கிடையில் அவர்களது சமூக வழக்கப்படி அல்லது வழக்காற்றுப்படி தடுக்கப்பட்ட உறவு முறையில் திருமணம் அனுமதிக்கப்பட்டிருக்கும்போதன்றி, தரப்பினர்கள் தடுக்கப்பட்ட உறவுமுறையைச் சார்ந்தவர்களாக இருக்கக் கூடாது.

v) தரப்பினர்களுக்கிடையில் அவர்களது சமூக வழக்கப்படி அல்லது வழக்காற்றுப்படி சபிண்ட உறவுமுறையில் திருமணம் அனுமதிக்கப்பட்டிருக்கும்போதன்றி, தரப்பினர்கள் சபிண்டர் களாக இருத்தல் கூடாது.

**திருத்தம்: —**

இப்பிரிவு 1976-ஆம் ஆண்டு திருமண விதிகள் (திருத்தம்) சட்டம் (Marriage Laws (Amendment) Act 68 of 1976) மூலம் திருத்தியமைக்கப்பட்டது.

**கூறு (i): ஒருதுணை மணம் (Monogamy)**

முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது கணவன் இரண்டாவது திருமணம் செய்துகொள்வது, ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கோட்பாட்டிற்கு ஊறு விளைவிப்பதாகும். இதன் பொருட்டே கூறு (i) உம், திருமணம் செய்துகொள்ளும் ஆடவன் ஒருவனுக்கோ பெண்ணொருத்திக்கோ திருமணக் காலத்தில் உயிருடன் வேறு கணவனோ மனைவியோ இருத்தல் கூடாது என்று வலியுறுத்துகிறது. இதை மீறிச் செயல்படுவோர் இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவுகள் 494, 495-ஆகியவற்றின் கீழ் தண்டிக்கப்படுவர். அத்தகைய திருமணங்களும் இல்லா நிலையனவாகும்.

**உட்கூறு (அ); பித்துநிலை**

திருமணக் காலத்தில் மணமகனோ மணமகளோ பித்துநிலையராக இருத்தல் கூடாது.

'பித்துநிலை' என்பதற்கு யாது பொருளென்பதை இந்துத் திருமணச் சட்டம் யாண்டும் பொருளுரைத்திலது. எனினும், நல்லது எது, தீயது எது என்பதைப் பகுத்துணரும் ஆற்றலில்லா

மனநிலையைப் 'பித்துநிலை' என்றும், அத்தன்மையிலிருப்போரைப் 'பித்துநிலையர்' என்றும் குறிப்பிடலாம்.

## மெய்ப்பிக்கும் பொறுப்பு:

பித்துநிலையை மனையற வழக்குகளில் காரணங்காட்டி நிவாரணங் கோருபவர் எவரோ, அவரே அதை மெய்ப்பிக்க வேண்டும்.

மெய்ப்பிப்பைப் பொறுத்தவரை குற்றவியல் வழக்குகள் அளவுக்குக் கடுமையாக மெய்ப்பிக்கவேண்டிய அவசியமில்லை.[43] ஓரளவுக்குச் சந்தேகமற மெய்ப்பித்தலே போதுமானது.

## கூறு (iii): தரப்பினர்களது வயது (Age of the Parties)

கூறு (iii) இன்படி, திருமணக்காலத்தில் மணமகனுக்கு 21 வயதும், மணமகளுக்கு 18 வயதும் நிறைந்திருக்க வேண்டும். இந்நிபந்தனையை மீறி நடைபெறும் திருமணம் செல்லாதெனினும் தள்ளுபடியாவதில்லை. உரிய வயது அடைவதற்கு முன் திருமணம் செய்துகொண்ட கணவன், மனைவிக்கு நீதிமன்றம் அபராதம் விதித்து மீண்டும் திருமணத்தைச் செல்லுநிலையதாக்கும்.[44]

## கூறு (iv): தடுக்கப்பட்ட உறவுமுறை நிலை (Degrees of prohibited relationship)

கூறு (iv) இன்படி திருமணத் தரப்பினர்கள் (மணமகன், மணமகள்) தடுக்கப்பட்ட உறவு முறையினைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடாது. ஆனால், மணமக்கள் சார்ந்திருக்கும் சமூகத்தில் அத்தகைய உறவு நிலையில் மணந்துகொள்ள அனுமதிக்கும் வழக்கமோ, வழக்காறோ இருந்தால், அப்போது திருமணம் செய்துகொள்ளலாம்; தடையில்லை.

## கூறு (v): சபிண்ட உறவுமுறை (Sapinda relationship)

கூறு (v) இன்படி மணமக்கள் சபிண்ட உறவுமுறையினைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடாது. ஆனால், மணமக்கள் சார்ந்திருக்கும் சமூகத்தில் அத்தகைய உறவு நிலையில் மணந்து

கொள்ள அனுமதிக்கும் வழக்கமோ வழக்காறோ இருந்தால், அப்போது திருமணம் செய்து கொள்ளலாம்; தடையில்லை.

6. நீக்கப்பட்டது இப்பிரிவு, சிறார் திருமணத் தடைச் (திருத்தம்) சட்டம் (Child Marriage Restriant (Amendment) Act No. 2 of 1978) எண்: 2/1978-ஆல் நீக்கப்பட்டது.

7. 1) இந்துத் திருமணமொன்று திருமணத் தரப்பினர்களில் எவருடைய வழக்கம், சடங்கு - சம்பிரதாயங்களின்படியும் நிகழலாம்.

**இந்துத் திருமணம் ஒன்றிற்கான சடங்குகள்**

2) **சப்தபதி** (அதாவது மணமகனும் மணமகளும் ஒன்று சேர்ந்து புனிதத் தீக்குமுன் ஏழு அடி எடுத்து வைப்பது) உள்ளிட்ட சடங்குகளில் ஏழாவது அடியை எடுத்து வைக்கும் போது திருமணம் நிறைவுறும்.

## உட்பிரிவு (1):

இந்துத் திருமணமொன்று, பெண்வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் ஒரே வழக்கத்தைப் பின்பற்றுகின்றார்கள் என்றால் அவ்வழக்கப்படியோ, அவ்விருவரும் வேறு வேறு வழக்கங்களை உடையவர்கள் என்றால் பெண் வீட்டார் வழக்கப்படி அல்லது மாப்பிள்ளை வீட்டார் வழக்கப்படியோ நடைபெறலாம்.

## உட்பிரிவு (2): 'சப்தபதி' (Saptapadi)

'சப்தபதி' என்பது, திருமணத்தின்போது மணமகனும் மணமகளும் ஒன்றாக இணைந்து புனிதத்தீயைச் சுற்றி ஏழு அடி எடுத்து வைத்து (ஏழு அடிக்குமேல் எடுத்து வைப்பினும் திருமணம் செல்லாததாகி விடாது.[45]) வலம் வரும் ஒரு சடங்காகும். இச்சடங்கு நிறைவுறும்போதே இந்துத் திருமணமொன்று நிறைவுற்றதாகக் கருதப்படுகிறது.

இச் சப்தபதிச் சடங்கு இன்று ஆரிய சமாசத்தினரிடையிலும், பிராமணர்களிடையிலும் மட்டுமே பெருவாரியாகக் காணப்படுகிறது.[46]

7அ. 1) இந்துக்களிருவர் உறவினர்கள், நண்பர்கள் அல்லது வேறு நபர்கள் முன்னிலையில் நடத்திக்கொள்ளும் சுயமரியாதைத் திருமணம் அல்லது சீர்திருத்தத் திருமணம் அல்லது அதுபோன்று வேறு பெயரிட்டு அழைக்கப்படும் திருமணத்திற்கு இப்பிரிவு பொருந்தும்.

**சுயமரியாதை, சீர்திருத்தத் திருமணம்**

அத்தகைய திருமணம் —

அ) மணமக்கள் இருவரும் தாங்கள் புரிந்துகொண்ட மொழியில் ஒருவரை ஒருவர் கணவன் அல்லது மனைவியாக ஏற்றுக் கொள்வதாக அறிவித்தல்; அல்லது

ஆ) மணமக்கள் ஒருவர்க்கொருவர் மாலையிடுதல் அல்லது ஒருவர் விரலில் ஒருவர் கணையாழியை இடுதல்; அல்லது

இ) தாலிகட்டுதல் போன்ற முறைகளில் ஒன்றால் நிகழலாம்.

2) (அ) பிரிவு 7 — இல் யாது கூறப்பட்டிருப்பினும் இச் சட்டத்தின் இதர வகையங்களுக்கு உட்பட்டு, இந்துத் திருமணச் (சென்னை திருத்தம்) சட்டம் 1967 அமலுக்கு வந்ததற்குப் பின்னர் நிகழ்வெய்திய திருமணம் அனைத்திற்கும் இப்பிரிவு பொருந்திச் சட்டச் செல்லாக்கமுடையதாக இருக்கும்.

ஆ) பிரிவு 7 அல்லது இந்துச்சட்ட மூலம், விதி, விளக்கம் அல்லது இந்துத் திருமணச் (சென்னை திருத்தப்) சட்டம், 1967 அமலுக்கு வருவதற்கு முன்னர் உடன் முன் வேறு சட்டமொன்றின் பகுதி சார்ந்த வழக்கம் அல்லது வழக்காறு, தீர்ப்புரை, தீர்ப்பாணை, கட்டளை ஆகியவற்றில் யாது கண்டிருந்தபோதிலும், உட்பிரிவு (3) - க்கு உட்பட்டு அம்முறைப்படி செய்து கொண்ட அனைத்துத் திருமணத்திற்கும் இப்பிரிவு பொருந்தும். இஃது, திருமணம் நடந்த நாளிலிருந்து செயல்நிலைக்கு வந்து செல்நிலையுறும்.

3) இப்பிரிவு —

அ) உட்பிரிவு (2), கூறு (ஆ) - இல் குறிப்பிடப்பட்டுள்ள திருமணமொன்று இந்துத் திருமணச் (சென்னை திருத்தம்) சட்டம், 1967 நடைமுறைக்கு வருவதற்கு முந்தையதாக இருந் தால், அதை இச்சட்டம் செல்நிலையுடையதாகக் கொள்ளாது.

i) அத்தகைய திருமணம் வழக்கம் அல்லது சட்டப்படி கலைக்கப்பட்டிருப்பினும்; அல்லது

ii) அத்தகைய திருமணத்தில் தரப்பினரான ஒரு பெண் மறுதரப்பினர் உயிரோடிருக்கும்போது அல்லது அவரது வாழ்நாளுக்குப் பிறகு வேறொருவரைச் சட்டபூர்வமாக மணந் திருப்பினும்;

ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் திருமணம் செய்துகொண்ட இந்துக்களிருவரிடையேயான திருமண மொன்று செல்லுநிலையதாக இருக்கும்போது, அதை இச்சட்டம் செல்லாநிலையதாக்க முடியாது.

இ) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், தரப் பினர்கள் எவருடைய சடங்கு - சம்பிரதாயங்களின்படியும் திருமண மொன்று நிகழாது போனதன் காரணத்தால், செல்லாநிலைத் திருமணமாக இருக்கும்போது, அதை இச்சட்டம் செல்தகவு உடையதாக்காது.

இப்பிரிவு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் இதன்படி மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளாது விடுத்த செயலொன்றிற் காக நபரொருவர் தண்டனைக்கு உள்ளாவதில்லை.

4) உட்பிரிவு (2), கூறு (ஆ)-இல் குறிப்பிட்டுள்ள முறை யில் மணம் புரிந்துகொண்ட தரப்பினர்களுக்கிடையில் தோன்றிய குழந்தை முறைமணப்பிறப்பில் தோன்றிய குழந்தையாகக் கருதப் படும்.

ஆனால், அக்குழந்தை உட்பிரிவு (3), கூறு (அ) (i) அல்லது (ii)இன்படி மணமுறிவுக்கு முன்னதாக அல்லது உட்கூறு (ii)இல் குறிப்பிட்டுள்ளபடி இரண்டாவது திருமணம் புரிந்துகொள்வதற்கு முன்னதாகத் தோன்றியிருத்தல் வேண்டும்.

## தோற்றம்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் பகுத்தறிவுப் பிரசாரம் வேகமாக நடைபெற்றது. ''மனுவின் நீதி அறமானதோர் நாள் - அதனை மாற்றும் நாளே தமிழர் திருநாள்'' என்று இந்து மதச் சம்பிரதாயங்களையும் வருணாசிரம தருமத்தையும் எதிர்த்துச் சுயமரியாதை இயக்கத்தைப் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் ஈ.வே. இராமசாமி அவர்கள் துவக்கி வைத்தார். அதன் விளைவாக இந்துச் சமயத்தார் சிலரிடை சடங்குகள் இல்லாத பல திருமணங்கள் நடைபெற்று வந்தன.

சுயமரியாதை அல்லது சீர்திருத்தத் திருமணம் என்று சொல்லப்படும் அத் திருமணங்களுக்கென்று ஆரம்ப காலத்தில் விதிகள் எதுவும் அமைக்கப்படவில்லை. மணமக்கள் மாலைகளை மாற்றிக்கொள்வது, மோதிரங்களை மாற்றிக்கொள்வது, ஒருவர் கழுத்தில் ஒருவர் சங்கிலிகளை அணிவிப்பது, வாழ்க்கை ஒப்பந்தம் வாசிப்பது, சான்றோர்கள் வாழ்த்துரைகளை வழங்குவது போன்ற பல்வேறு முறைகளைப் பின்பற்றி இத்திருமணங்கள் நடைபெற்று வந்தன.

சம்பிரதாயத்தையும் சட்டத்தையும் மீறி நடத்தப்பட்ட இத் தகைய திருமணங்களுக்கு ஒரு சட்ட பூர்வமான அங்கீகாரம் தேவைப்பட்டது.[47] எனவே, 1967-ஆம் ஆண்டு தமிழக முதல மைச்சராக இருந்த பேரறிஞர் சி.என் அண்ணாதுரை (அண்ணா) அவர்கள் இதற்கொரு சட்ட அங்கீகாரம் அளிக்கின்ற வகையில், இந்துத் திருமணச் சட்டத்தில், பிரிவு 7அ என்பதை இணைத்து 'இந்துத் திருமணங்கள் (சென்னை திருத்தம்) சட்டம்' 1967 என்றதொரு சட்டத்தைத் தமிழ்நாடு சட்டப் பேரவையில் கொண்டு வந்தார். அது, பிறகு 1968-ஆம் ஆண்டு, சனவரி 20-ஆம் நாள் முதல் அமலுக்கு வந்தது.

## திருமண முறை

புரோகிதர் மந்திரம் ஓதுதல், மணமக்கள் புனிதத் தீயைச் சுற்றி ஏழு அடி எடுத்துவைத்து வலம் வரும் 'சப்தபதி' சடங்கு போன்றவை இல்லாது, உற்றார், உறவினர், நண்பர்கள் முன்

னிலையில் மணமக்கள் ஒருவரையொருவர் பார்த்து மற்றவர்க்குப் புரியும் மொழியில் கணவனாக அல்லது மனைவியாக மற்றவரை ஏற்றுக்கொள்வதன் மூலம் அல்லது மணமக்கள் மாலைகள் அல்லது மோதிரங்களை மாற்றிக்கொள்வதன் மூலம் அல்லது மணமகள் கழுத்தில் மணமகன் தாலி அணிவிப்பதன் மூலம் இத் திருமணம் நடைபெறுகிறது.

## சட்டக்கூறுகள்

இச்சட்டத்திலுள்ள முக்கியக்கூறுகள், இச்சட்டம் அமலாவதற்கு முன் செய்யப்பட்ட சுயமரியாதைத் திருமணங்களை இச் சட்டம் அங்கீகரிக்கிறது. இச்சட்டப்படி அல்லது வழக்கப்படி இதற்கு முன் நடந்த திருமணம் கலைக்கப்பட்டிருந்தால், அதை இச்சட்டம் செல்லுபடியாக்காது. சீர்திருத்தத் திருமணம் செய்து கொண்ட பெண் கணவன் உயிரோடு இருக்கும்போதோ இறந்த பின்னரோ வேறொருவனைச் சட்டப்படி மணந்துகொண்டிருந்தால், அதையும் இச்சட்டம் செல்லுபடியாக்காது. இச்சட்டம் வருவதற்கு முன்னால் நடந்த செல்லத்தக்க திருமணங்களைச் செல்லத்தகாதது என்றோ செல்லத்தகாத திருமணங்களைச் செல்லத்தக்கது என்றோ இச்சட்டம் செய்யாது. இச்சட்டம் வருவதற்கு முன்னால் சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டவர்களின் குழந்தைகள், முறையான மணத்தில் பிறந்த குழந்தைகளாகவே கருதப்படுவர். இச்சட்டம் வருவதற்கு முன்னால் சுயமரியாதைத் திருமணம் செய்து அது கலைக்கப்படுவதற்கு முன்னால் பிறந்த குழந்தைகளும், சுயமரியாதைத் திருமணம் செய்து பின்னர் பெண்ணானவள் வேறொருவனைச் சட்டப்படி மணந்து கொள்வதற்கு முன்னர்ப் பிறந்த குழந்தைகளும், முறையான மணத்தில் பிறந்த குழந்தைகளாகவே கருதப்படுவர்.48

**இந்துத் திருமணப் பதிவு**

8. 1) இந்துத் திருமணங்கள் பற்றிய மெய்ப்பிப்பை இலகுவாக்கும் நோக்கில் திருமணங்கள் நடைபெற்றவுடன், அத்திருமணங்கள் பற்றிய விவரங்களை இந்துத் திருமணப் பதிவேட்டில் பதிவதற்கு மாநில அரசு விதிகளை இயற்றலாம்.

2) உட்பிரிவு (1) இல் யாது கண்டிருந்தபோதிலும் மாநிலம் முழுமைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு, உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களைப் பதிவு செய்வது கட்டாய மானது அல்லது அவசியமானது என்று மாநில அரசிற்குத் தோன்றுமிடத்து, அது அவற்றைக் கட்டாயப்படுத்திக் கட்டளை யிடும். திருமணங்கள் அனைத்தையும் அல்லது குறிப்பிட்டவகைத் திருமணங்களை மட்டிலும் கட்டாயமாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று மாநில அரசாங்கம் கட்டளையிட்டிருக்கும்போது அதை மீறி எவரும் செயற்படுவாரேயாகில், அவர் இருபத்தைந்து உரூவாக்கள் வரை அபராதம் விதித்துத் தண்டிக்கப்படுவர்.

3) இப்பிரிவின்கீழ் இயற்றப்படும் விதிகளனைத்தும் இயற்றப் பட்டவுடன் மாநிலச் சட்டமன்றத்தின் முன் வைக்கப்படுதல் வேண்டும்.

4) இந்துத் திருமணப் பதிவேட்டை நியாயமாக எல்லாக் காலங்களிலும் பார்வையிடுவதற்கு உரியதாக வைத்தல் வேண்டும். இவற்றில் அடங்கியுள்ள விவரங்கள் சான்றுகளாக ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாகும். இவற்றில் அடங்கியுள்ள விவரங் களைப் பெற விரும்புவோர், திருமணப் பதிவாளரிடம் விண்ணப்பம் ஒன்றுடன் குறித்துரைக்கப்பட்டிருக்கும் கட்டணத்தைச் செலுத்து வதன் மூலம் உரிய நகலைப் பெறலாம்.

5) இப்பிரிவில் யாது கூறப்பட்டிருப்பினும் பதிவு செய்து கொள்ளாத காரணத்தால் இந்துத் திருமணமொன்று செல்லாத தாகிவிடாது.

இந்தியாவில் உள்ள இந்து சமூகத்தாரிடையே திருமணமுறை களில் பல்வேறு பழக்க, வழக்கங்கள் உள்ளதால், திருமணங்கள் நடைபெற்றதைச் சில வேளைகளில் மெய்ப்பிப்பது கடினமாக இருக்கிறது. இக்குறையைக் களையவேண்டியே இந்துத் திருமணச் சட்டத்தில் இப்பிரிவு இணைக்கப்பட்டது.

# இயல் 3

# மணவாழ்வுரிமை மீட்டளிப்பும் நீதிவழிப் பிரிந்துறைதலும்

9. கணவனோ, மனைவியோ தகுந்த காரணமின்றி மற்றவர் கூட்டுறவினின்று பிரிந்துறையும்போது பாதிக்கப்பட்ட நபர்

**மணவாழ்வுரிமை மீட்டளிப்பு** — மணவாழ்வுரிமை மீட்புக்கோரி மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம். நீதிமன்றம் அம்மனுவிலுள்ள வாக்குமூலம் உண்மையானதென்று மனநிறைவு பெற்றபின் அந்த விண்ணப்பத்தை அனுமதிக்கக் கூடாது என்பதற்குச் சட்டமுறையான காரணம் எதுவும் இல்லையென்றால் மணவாழ்வுரிமை மீட்டளிப்பிற்கான தீர்ப்பாணையை அவ்வாறே வழங்கும்.

**விளக்கம்:—**

ஒருவரது கூட்டுறவினின்று பிரிந்ததற்கு நியாயமான காரணம் இருக்கிறதெனும் வாதம் எழுமிடத்து அக்காரணம் நியாயமானது என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு அவ்வாறு பிரிந்து சென்றவரையே சாரும்.

இப்பிரிவு, 1976-ஆம் ஆண்டு, திருமண விதிகள் (திருத்தம்) சட்டம் (Marriage Laws (Amendment) Act No. 68 of 1976) மூலம் திருத்தியமைக்கப்பட்டது.

இதில், முன்பு இருந்த உட்பிரிவு (2), அகற்றப்பட்டுப் புதிதாக 'விளக்கம்' எனும் பகுதி இணைக்கப்பட்டது.

## மனுச் செய்ய உரிமை உடையவர்

இப்பிரிவுப்படி கணவன் அல்லது மனைவி மட்டுமே நிவாரணங் கோரி மனுச்செய்ய முடியும். மற்றபடி மூன்றாம் நபர் எவரும் மனுச்செய்ய முடியாது.

இப்பிரிவின்கீழ் நிவாரணங்கோருவது நல்லெண்ணத்தின் பாற்பட்டதாக இருக்கவேண்டும். எதிர் மனுதாரர் மனைவியாக இருக்கும் பட்சத்தில் அவளுக்குள்ள உரிமைகளையும், நலன்களை யும் அளிப்பதாக இருத்தல் வேண்டும்.[49]

நபர் எவரும் வஞ்சகக் கூட்டுடன் மனு எதையும் சமர்ப்பித்தல் கூடாது.

சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் தீர்ப்பாணையை வழங்குவதும், வழங்காதிருப்பதும் நீதிமன்றத்தின் உளத்தேர்வைப் பொறுத்த தாகும்.[50]

## மன்னித்தற்குரிய காரணம் ஏதுமின்றி ஒருவர் கூட்டுறவினின்று ஒருவர் பிரிதல்

இப்பிரிவினில் காணப்படும், 'மன்னித்தற்குரிய காரணம் ஏதுமின்றி ஒருவர் கூட்டுறவினின்று ஒருவர் பிரிதல்' என்னும் சொற்றொடர்களுக்குச் சரியான பொருள் யாது என்பதை இந்துத் திருமணச் சட்டம் யாண்டும் உரைத்திலது. இது காலத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் ஒவ்வொருவிதமாக அமைவதால், இதை நீதிமன்றமே அவ்வப்போது தம்மிடம் வரும் வழக்குகளைக் கொண்டு முடிவு செய்கிறது.[51]

## மன்னித்தற்குரியனவாகாப் பிரிவுகளும், மன்னித்தற்குரிய பிரிவுகளும்

கணவன் சம்பாதிப்பதில்லை;[52] தனக்குச் சரியான முறையில் ஆடை அணிகலன்களை வாங்கித் தருவதில்லை;[53] பெற்றோரை

விட்டுவிட்டுத் தன்னோடு வந்து தனிக்குடித்தனம் நடத்தவில்லை;[54] வேலையை விட்டுவிட்டு அவனோடு வந்து குடும்பம் நடத்த வேண்டுகிறான்[55] என்பன போன்ற காரணங்களைக் காட்டி மனைவியொருத்தி கணவனைவிட்டுப் பிரிந்தால், அத்தகைய பிரிவுகள் மன்னித்தற்குரிய பிரிவுகள் ஆகாது.

ஆனால், கணவன் ஆண்மையற்றவனாக இருப்பது;[56] முழுக்குருடனாக[57] அல்லது மேகநோய் அல்லது தொழுநோய் உள்ளவனாக இருப்பது;[58] வைப்பு நங்கை ஒருத்தியைத் (Concubine) தனது இல்லத்தில் வைத்துக்கொண்டு தன்னை இழிவுப்படுத்துவது; அதைக் கண்டித்தால் தன்னை அடிப்பது, துன்புறுத்துவது;[59] இரண்டாவது தாரமாக ஒருத்தியை மணம் செய்துகொண்டு வாழ்க்கை நடத்துவது[60] முதலான காரணங்களைக் காட்டி மனைவியொருத்தி கணவனிடத்திலிருந்து பிரிந்தால், அத்தகையப் பிரிவுகள் மன்னித்தற்குரிய பிரிவுகளாகும்.

## உரிய நீதிமன்றம்: அதிகாரம், கடமைகள்:

### அதிகாரம்:

இப்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்படும் மனுக்களை விசாரிக்கும் அதிகாரம் ஒரு மாவட்ட நீதிமன்றத்திற்கு மட்டுமே உண்டு. (மாவட்ட நீதிமன்றம். விளக்கம், பிரிவு 3 (ஆ)-இல் காண்க) கோட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு (Munsiff Court) இத்தகைய அதிகாரம் கிடையாது.[61] ஆனால், ஒரு துணை நீதிபதியோ (Sub-Judge) மாநில அரசுப் பதிவிதழில் அறிவிக்கப்பட்டுத் தன் பேரில் அதிகாரம் பெற்ற ஒரு கூடுதல் நீதிபதியோ இவற்றை விசாரிக்கலாம்.[62]

### கடமைகள்:

இப்பிரிவின்கீழ் எழும் வழக்குகளில் நீதிமன்றம் முடிந்த அளவுக்குக் கணவன், மனைவிக்கிடையில் சமாதானம் செய்து வைப்பதும்;[63] அதன்வழி தீர்ப்பாணையை வழங்குவதும் அவசியமாகும்.[64]

10. 1) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அல்லது பின்னர் திருமணம் முடிந்த தரப்பினர் எவரும் நீதி வழிப் பிரிந்துறைவதற்கான தீர்ப்பாணையொன்றைப் பெற வேண்டி, பிரிவு 13, உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களில் ஒன்றையோ தரப்பினர் மனைவியாக இருக்கும் பட்சத்தில் மேற்கூறிய காரணங்களில் ஒன்றைத்தவிர கூடுதலாக உட்பிரிவு (2)-இல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களில் ஒன்றையோ கொண்டு மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம்.

**நீதி வழிப் பிரிந்துறைதல்**

2) நீதிவழிப் பிரிந்துறைவதற்குத் தீர்ப்பாணை பிறப்பிக்கப் பட்டிருக்குமிடத்து மனுதாரர், எதிர்மனுதாரர் இணைந்து வாழ வேண்டிய அவசியமில்லை; ஆனால், மீண்டும் இணைந்து வாழ விரும்பினால், தரப்பினர்கள் மீண்டும் நீதிமன்றத்தில் மனுச் செய்வதன்மூலம், நீதிமன்றம் அம்மனுவில் கூறப்பட்டவை உண்மையானவை என்று உளநிறைவு அடைகின்றபோது, தாம் ஏற்கெனவே பிறப்பித்த தீர்ப்பாணையை நீதியானதும், நியாய மானதும் என்று கருதுகின்ற வகையில் நீக்கும்.

இப்பிரிவு, 1976–ஆம் ஆண்டுத் திருமண விதிகள் (திருத்தம்) சட்டம் (Marriage Laws (Amendment) Act No. 68 of 1976) மூலம் திருத்தியமைக்கப்பட்டது.

## நீதிவழிப் பிரிந்துறைதல் (Judicial Separation)

கணவனும் மனைவியும் உடலுறவோ உடனுறைவோ இன்றி நீதிமன்றக் கட்டளைக்கு ஏற்பத் தனித்தனியே பிரிந்துறைவது நீதிவழிப் பிரிந்துறைதலாகும். ஆனால் கணவன், மனைவி மணக்கலைப்பு மூலமோ (Dissolution of Marriage) மணமுறிவு (Divorce) மூலமோ பிரிந்துறைவது நீதிவழிப் பிரிந்துறைத லாகாது.

## உட்பிரிவு (1)

இச்சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்போ பின்போ திருமணம் செய்துகொண்ட தரப்பினர்களில் கணவன் அல்லது

மனைவி, இந்துத் திருமணச்சட்டம், பிரிவு 13(1)-இல் குறிப்பிடப் பட்டுள்ள,

1) அயல் புணர்ச்சி
2) கொடுமையிழைப்பு
3) கைவிடுப்பு
4) மதமாற்றம்
5) பித்துநிலை
6) தொழுநோய்
7) துறவறம்
8) ஏழாண்டுகளுக்கு மேலான பிரிவு

ஆகியவற்றில் ஒன்றையும், மனுதாரர் மனைவியாக இருக்கும் பட்சத்தில் மேற்சுட்டிய காரணங்களேயல்லாது, இந்துத் திருமணச் சட்டம் பிரிவு 13 (2)-இல் குறிப்பிடப்பட்டுள்ள,

1) கணவனது இரண்டாவது திருமணம்
2) கணவனது வன்புணர்ச்சி அல்லது ஓரினப்புணர்ச்சி அல்லது விலங்குப் புணர்ச்சி

ஆகிய காரணங்களில் ஒன்றையுங்கொண்டு நீதிவழிப் பிரிந்துறை வதற்கு மாவட்ட நீதிமன்றத்தில் மனுச்செய்யலாம்.

## உட்பிரிவு (2):

நீதிவழிப் பிரிந்துறைவதற்குத் தீர்ப்பாணை வழங்கப்பட்டிருக் கும்போது, மனுதாரரும் எதிர்மனுதாரரும் கணவனும் மனைவியு மாக இணைந்து வாழ வேண்டிய அவசியமில்லை. ஆனால், அவ்வாறு இருவரும் மீண்டும் இணைந்து வாழ விரும்பினால், நீதிமன்றத்தில் மனுச் செய்வதன் மூலம் இணைந்து வாழலாம். நீதிமன்றமும் அவர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் உண்மைத் தன்மை இருப்பதை அளவிட்டு, அவர்கள் இருவரும் தனித்தனியே பிரிந்திருக்க தாம் ஏற்கெனவே பிறப்பித்த ஆணையை நீக்கம் செய்யும்.

# இயல் 4

# இல்லாநிலைத்திருமணமும் மணமுறிவும்

**இல்லாநிலைத் திருமணங்கள்**

**11.** இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததற்குப் பின்னர் நிகழ்ந்த திருமணம் எதுவும் பிரிவு 5, உட்பிரிவுகள் (i), (iv), (v) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு முரணாக நிகழ்ந்திருக்கும்போது, அத்திருமணம் செல்லாததாகும். இதற்கான தீர்ப்பாணையைத் தரப்பினர்களில் ஒருவர் மறுதரப்பாருக்கு எதிராக மனுவொன்றைத் தாக்கல் செய்வதன் மூலம் பெறலாம்.

## இல்லாநிலைத் திருமணம்

பிரிவு 5, உட்பிரிவு (i) இன்படி திருமணக் காலத்தில் கணவனோ மனைவியோ உயிருடன் வேறு கணவனையோ மனைவியையோ பெற்றிருக்கும்போது; அல்லது

பிரிவு 5, உட்பிரிவு (iv) இன்படி சமூக வழக்கம் அனுமதித்து இருந்தாலொழிய மணமக்கள் இருவரும் தடுக்கப்பட்ட உறவு முறையினைச் (Prohibited Relationship) சார்ந்தவர்களாக இருக்கும்போது; அல்லது

பிரிவு 5, உட்பிரிவு (v) இன்படி சமூக வழக்கம் அனுமதித்து இருந்தாலொழிய மணமக்கள் இருவரும் சபிண்ட உறவு முறையினைச் சார்ந்தவர்களாக இருக்கும்போது, திருமணமொன்றைச்

செல்லாதென்று அறிவிக்கக் கோரி கணவன், மனைவி இருவரில் ஒருவர் நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம்.[65]

## மனுச்செய்ய உரிமையுடையவர்

இப்பிரிவின்கீழ் திருமணமொன்றைச் செல்லாதென்பதற்குக் கணவன் அல்லது மனைவி மட்டுமே மனுச்செய்ய முடியும்; மூன்றாவது நபர் எவரும் மனுச் செய்ய முடியாது. மூன்றாவது நபர் முதல் மனைவியாக இருந்தால்கூட அவரும் இரண்டாவது திருமணம் செல்லாதென்று அறிவிக்கக் கோரி மனுச்செய்ய உரிமையில்லை.[66]

## மலைவாழ் பழங்குடியினர்

இந்துத் திருமணச் சட்டம், பிரிவு 2 (2)இன்படி மலைவாழ் பழங்குடி மக்களுக்கு இச்சட்டம் பொருந்தாதெனினும், மலைச் சாதி ஆடவனொருவன் முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது இரண்டாவது திருமணம் செய்துகொண்டால், அது இச்சட்டப்படி செல்லாததாகும்.[67]

**தவிர்தகுநிலைத் திருமணங்கள்**

12. 1) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அல்லது பின்னர் நிகழ்ந்த திருமணங்கள் பின்வரும் காரணங்கள் ஒன்றினால் தவிர்தகுநிலையதாகும். அவையாவன:

அ) எதிர் மனுதாரர் ஆண்மையற்றவராக இருக்கும்போது; அல்லது

ஆ) திருமணம் பிரிவு 5, கூறு (ii)இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு முரணாகவிருக்கும்போது; அல்லது

இ) மனுதாரரின் ஒப்புதல் அல்லது சிறார் திருமணத்தடைச் (திருத்தம்) சட்டம், 1978 நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், பிரிவு 5இன் கீழ் மனுதாரருக்கு உரிய காப்பாளரது ஒப்புதல் திருமணத்திற்குத் தேவையானதாக இருக்கும்போது, அது வன்முறை அல்லது மோசடித் தன்மையால் பெறப்பட்டிருக்கும்போது; அல்லது

ஈ) எதிர்மனுதாரர் திருமணத்தின்போது மனுதாரரல்லாமல் அயலார் ஒருவரால் கருவுற்றிருக்கும்போது;

2) உட்பிரிவு (1) இல் யாது கண்டிருந்தபோதிலும் திருமண மொன்று செல்லாதென்பதற்குத் தாக்கல் செய்யப்படும் மனுவை—

அ) உட்பிரிவு (1), கூறு (இ)இன்படி —

(i) வன்முறைக்கு இலக்காக்கப்பட்ட நாளிலிருந்து அல்லது மோசடி செய்ததை அறிந்ததிலிருந்து ஓராண்டுக்குப் பிறகு; அல்லது

(ii) வன்முறைக்கு இலக்காக்கிய பிறகும், மோசடியானது கண்டுபிடிக்கப்பட்ட பிறகும், மனுதாரரது முழு ஒப்புதலுடன் இருவரும் கணவன், மனைவியாக வாழ்ந்தபின்னர், எந்நீதி மன்றமும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

ஆ) உட்பிரிவு (1), கூறு(ஈ)இன்படி அடியிற்காணும் நிலைகளில் உளநிறைவடைந்திருந்தாலன்றி இவ்விண்ணப்பத்தை நீதி மன்றம் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

(i) மனுதாரருக்குத் திருமணத்தின்போது அத்தகைய விவரம் எதுவும் தெரியாது

(ii) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர்த் திருமணம் நடந்திருப்பின், திருமணம் நிகழ்ந்த அன்றையிலிருந்து ஓராண்டிற்குள்ளும், இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததற்குப் பின்னர்த் திருமணம் நிகழ்ந்திருப்பின் அத் திருமணத் தேதியிலிருந்து ஓராண்டிற்குள்ளும் நடைமுறைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

(iii) மனுதாரரால் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, உடலுறவு நிகழவில்லை.

## திருத்தம்

இப்பிரிவு, 1976 மற்றும் 1978-ஆம் ஆண்டுச் சட்டத் திருத்தத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டது.

## தவிர்தகுநிலைத் திருமணம்

(1) கணவன் அல்லது மனைவி மலட்டுத் தன்மையினராக இருக்கும்போது; அல்லது

(2) திருமணம், பிரிவு 5, கூறு (2)-இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு முரணான வகையில் நிகழ்ந்திருக்கும்போது; அல்லது

(3) திருமணம், மனுதாரர் அல்லது அவரது காப்பாளர் ஒப்புதல் இல்லாமல் நிகழ்ந்திருக்கும்போது; அல்லது

(4) மனைவியொருத்தி தன் கணவனோடல்லாது அயலானொருவனோடு கலந்து காமுறு புணர்ச்சி மேற்கொண்டு கருவுற்றிருக்கும்போது, திருமணமொன்றை இல்லாநிலையதாக ஆக்கவோ தவிர்க்கவோ வேண்டி தரப்பினர் (கணவன் அல்லது மனைவி) ஒருவர் மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம்.

## கூறு (அ) : மலட்டுத் தன்மை (Impotence)

திருமணமொன்று நிறைவடைவதற்கு முக்கியமாகவுள்ள உடற்புணர்ச்சிக்குத் தரப்பினர்களில் ஒருவர் இயலாதுபோவது மலட்டுத்தன்மையாகும். இம் மலட்டுத் தன்மை ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவாக ஏற்படுவதுண்டு.

மலட்டுத் தன்மையைக் காரணங்காட்டி நிவாரணங்கோரும் வழக்கில், ஒருவருக்கு மலட்டுத் தன்மை இருக்கிறதா? இல்லையா? என்பதைச் சோதனையிட நீதிமன்றம் சம்பந்தப்பட்ட தரப்பினரை மருத்துவ ஆய்வுக்கு அனுப்பிவைக்கலாம். நீதிமன்றம் அவ்வாறு நபர் ஒருவரை மருத்துவ ஆய்வுக்கு அனுப்பும்போது, உரிய நபர் அவ்வாணைக்கு அடிபணிதல் வேண்டும். நபர் ஒருவர் அவ்வாணைக்கு அடிபணிய மறுக்கும்போது, நீதிமன்றம் மலட்டுத் தன்மை அவருக்கு இருப்பதாக ஊகம் செய்யும்.[68]

மலட்டுத்தன்மையை வழக்கிற்குக் காரணமாகக் காட்டும்போது, அதைச் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஐயத்திற்கிடனின்றி மெய்ப்பிப்பது அவசியமாகும். அதனை மருத்துவச் சான்றுகள் மூலம் மெய்ப்பிப்பது மேலும் சிறப்பு. மருத்துவச் சான்றுகளை

வெறும் மருத்துவ விளக்கவுரைகளைக் கொண்டல்லாது மருத் துவச் சாட்சிகள் மூலம் மெய்ப்பிப்பது அவசியமாகும்.[69]

## கூறு (ஆ): பித்துநிலை

பித்துநிலை என்பது யாது என்பதற்கு இந்துத் திருமணச் சட்டம் யாண்டும் பொருள் உரைத்திலது. எனினும், நல்லது எது, கெட்டது எது என்பதைப் பகுத்துணரும் ஆற்றலில்லா மன நிலையைப் பித்துநிலை என்றும், அத்தன்மையுடையோரைப் பித்துநிலையர் என்றும் குறிப்பிடலாம்.

பித்துநிலை என்பது ஒருவருக்குப் பிறவி முதற்கொண்டே இருக்க வேண்டும் என்பதில்லை; அஃது இடையிலும் வரலாம்; இடையிடையேயும்கூட வரலாம்.

பித்துநிலையை இவ்வழக்குகளுக்குக் காரணங்காட்டும்போது, சம்பந்தப்பட்ட தரப்பினர் குற்றவியல் வழக்குகள் அளவுக்கு அதை மெய்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை; சாதாரண முறை யில் மெய்ப்பித்தலே போதுமானது.[70]

## கூறு (இ): ஒப்புதல், மோசடி அல்லது வலுக்கட்டாயத்தின்பேரில் பெறுதல் (Consent obtained by force or fraud)

திருமணமொன்றிற்கு மனுதாரர் அல்லது சிறார் திருமணத் தடைச் (திருத்தம்) சட்டம், 1978 (Child Marriage Restraint (Amendment) (Act, 1978) நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், பிரிவு 5-இன் கீழ் காப்பாளர் ஒருவரது ஒப்புதல் தேவையானதாக இருக்கும்போது அதைத் தரப்பினர் எவரும் மோசடியாகவோ கட்டாயத்தின் பேரிலோ பெற்றால், அத்தகைய திருமணத்தைப் பாதிக்கப்பட்ட தரப்பினர் தவிர்க்கலாம்.

ஒப்புதலொன்று மோசடியாகப் பெறப்பட்டதெனும்போது. அந்த மோசடியின் முழு விவரத்தையும் மனுதாரர் தம் மனுவில் தருவது அவசியமாகும். வெறுமையாக 'மோசடி' என்று குறிப் பிடுவது மட்டும் போதாது.[71]

## கூறு (ஈ): எதிர்வாதி மனைவி திருமணக்காலத்தில் சூலுண்டிருப்பது (Respondent wife pregnant at the time of Marriage)

எதிர்வாதியான மனைவி, திருமணக்காலத்தில் வாதியான கணவனல்லா அயலானொருவனுடன்காமுறுபுணர்ச்சியிலீடுபட்டுக் கருவுற்றிருக்கும்போது, வாதி கணவன் அத்தகைய திருமணத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மனைவி திருமணத்தின்போது கருவுற்றிருந்தாள் என்று குற்றஞ்சாட்டி, திருமணத்தைத் தவிர்த்துக்கொள்ள மனுச்செய்யும் கணவன்,

(1) மனைவி திருமணத்தின்போது கருவுற்றிருந்தாள் என்ற செய்தி தனக்குத் தெரியாது என்பதையும்,

(2) மனைவி கருவுற்றிருந்த செய்தி தெரியவந்தவுடன் அவளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டி ஓராண்டுக் காலத்திற்குள் மனுச் செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

(3) இச்செய்தி தெரியவந்த பிறகு தானும் அவளும் உடலுறவு வைத்துக்கொள்ளவில்லை என்பதையும் உடன் மெய்ப்பிக்க வேண்டும். அப்போது மட்டுமே அவன் இப்பிரிவின்கீழ் நிவாரணத்தைப் பெறமுடியும்.

**மணமுறிவு**

13. (1) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அல்லது பின்னர் நடைபெற்ற திருமணமொன்றைக் கணவன் அல்லது மனைவி இருவரில் ஒருவர் கீழ்க்காணும் காரணங்களில் ஒன்றைக்கொண்டு கலைத்திட மனுச் செய்யலாம். அவையாவன:

(i) திருமணத்திற்குப்பிறகு கணவன் மனைவியை அல்லது மனைவி கணவனைவிட்டு அயலார் ஒருவருடன் தம்மிச்சையாகக் காமுறுபுணர்ச்சியில் ஈடுபட்டிருக்கும்போது; அல்லது

(i அ) திருமணத்திற்குப் பிறகு மனுதாரரை எதிர்மனுதாரர் கொடுமையாக நடத்தியிருக்கும்போது; அல்லது

(i ஆ) மனு தாக்கல் செய்யப்படுவதற்கு உடன்முன் தொடர்ந்தாற்போல் இரண்டாண்டுகளுக்குக் குறைவில்லாமல் மனுதாரரை எதிர்மனுதாரர் கைவிட்டிருக்கும்போது; அல்லது

(ii) எதிர்மனுதாரர் இந்துச் சமயத்தை விடுத்து வேற்றுச் சமயத்தைத் தழுவியிருக்கும்போது; அல்லது

(iii) எதிர்மனுதாரர் குணப்படுத்த முடியாததும், தொடர்ந்து அல்லது விட்டுவிட்டுத் துன்பத்திற்கு உள்ளாக்குவதுமான பைத்திய நிலைக்கு ஆட்பட்டிருக்கும்போது; இதுபோன்ற சூழ்நிலைகளில் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்தலை எவரும் எதிர் பார்க்க முடியாது.

**விளக்கம்.—** இக்கூறில்,

(அ) 'மனக்கோளாறு' என்பதில் மனநோய், மனப்பிணிப்பு, மனவளர்ச்சியின்மை, உள்ளக்கோளாறு அல்லது உள்ளம் சார்ந்த வேறு கோளாறு, உள்ள ஊனம், மூளைக்கோளாறு முதலானவை அடங்கும்.

(ஆ) 'உள்ளக்கோளாறு' என்பது உள்ளம் தொடர்ந்து கோளாறாக இருப்பது அல்லது இயலாதிருப்பது; அல்லது

(iv) எதிர்மனுதாரர் கொடியதும், குணப்படுத்தவியலாதது மான தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கும்போது; அல்லது

(v) எதிர்மனுதாரர் எளிதில் தொற்றிப் பரவக்கூடிய பால் வினை நோயால் துன்புற்றிருக்கும்போது; அல்லது

(vi) எதிர் மனுதாரர் துறவறம் மேற்கொண்டிருக்கும்போது; அல்லது

(vii) எதிர்மனுதாரரைப் பற்றி அறிந்திருக்க வேண்டிய நபர் எவரும் கடந்த ஏழு ஆண்டுகளாக அவர் உயிரோடு இருப்பதாகக் கேள்விப்படாதிருக்கும்போது.

**விளக்கம்.—**

இவ்வுட்பிரிவில் 'கைவிடுப்பு' என்பது, மனுதாரரை மனு தரப்பார் எவ்விதக் காரணமோ ஒப்புதலோ இன்றி விருப்பத்திற்கு மாறாகப் புறக்கணித்தலைக் குறிக்கும்.

(1 அ) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அல்லது பின்னர் நடைபெற்ற திருமணத்தில் திருமணத் தரப்பினர் எவரும் அடியிற்கண்ட காரணங்களின்மீது திருமண முறிவு தீர்ப்பாணை ஒன்றன்மூலம் திருமணத்தைக் கலைத்திடுவதற்கு மனுச் செய்யலாம்.

(i) வழக்கொன்றில் தரப்பினர்கள் நீதிவழிப் பிரிந்துறைய தீர்ப்பாணை வழங்கிய பின்னர், அவர்கள் இருவரும் ஓராண்டும், மேலாகவும் கூடி வாழாதிருக்கும்போது; அல்லது

(ii) வழக்கொன்றில் தரப்பினர்கள் இணைந்துவாழ மண வாழ்வுரிமை மீட்டளிப்புத் தீர்ப்பாணை வழங்கிய பின்னரும் அவர்கள் ஓராண்டும், மேலாகவும் கூடி வாழாதிருக்கும்போது.

(2) அடியிற்கண்ட காரணங்களின்மீது மனைவி திருமண முறிவு தீர்ப்பாணை ஒன்றால் திருமண முறிவு பெற்றிட மனுச் செய்யலாம்.

(i) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்குமுன்னர்த்திருமணமொன்று நிகழ்ந்திருக்க, கணவன் மீண்டுமொரு திருமணத்தைச் செய்துகொண்டிருக்கிறார் அல்லது அவர் மனுதாரரைத் திருமணம் செய்துகொள்வதற்கு முன் உயிருடன் வேறொரு மனைவியைப் பெற்றிருக்கிறார்;

ஆனால், மனுச் செய்யுங்காலத்தில் இவ்விரு வழக்குகளிலும் மனைவியர் உயிருடன் இருத்தல் வேண்டும்; அல்லது

(ii) திருமணத்திற்குப் பிறகு கணவர் வன்புணர்ச்சி, ஓரினப் புணர்ச்சி, விலங்குப் புணர்ச்சி போன்றவற்றில் ஈடுபட்டிருக்கிறார்; அல்லது

(iii) இந்து மகவேற்பு மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம், 1956, பிரிவு 18-இன்படி அல்லது குற்றவியல் நடை

முறைச் சட்டம், 1973, பிரிவு 125 (அல்லது அதனை ஒத்த குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1898, பிரிவு 488) இன்படி மனைவிக்கு வாழ்க்கைப் பொருளுதவி அளிக்க வேண்டுமென்று கணவனுக்கு எதிராகத் தீர்ப்பாணை அல்லது கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டிருக்குமிடத்து அவள் தனியாக வாழ்ந்து வருவது அல்லது தரப்பினர்கள் இருவரும் ஓராண்டும், மேலாகவும் கூடி வாழாதிருப்பது; அல்லது

(iv) அவளுக்குப் பதினைந்து வயது நிறைவடைவதற்கு முன்னதாகவே திருமணம் (அது நிறைவடைந்திருப்பினும், நிறைவடையாதிருப்பினும்) நடந்திருந்து அவள் அதைப் பதினெட்டு வயதை எய்துவதற்குள் மறுத்திருப்பது.

**விளக்கம்.—**

இக்கூறு, திருமண விதிகள் (திருத்தம்) சட்டம், 1976 நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் நடந்த திருமணத்திற்கும், பின்னர் நடந்த திருமணத்திற்கும் பொருந்தும்.

**திருத்தம்**

இப்பிரிவு, 1976-ஆம் ஆண்டுத் திருமண விதிகள் (திருத்தம்) சட்டம் (Marriage Laws (Amendment) Act 68 of 1976) மூலம் திருத்தியமைக்கப்பட்டது.

## கூறு (1): அயல்புணர்ச்சி (Adultery)

திருமணத்திற்குப் பிறகு கணவனோ மனைவியோ தத்தம் துணையை விடுத்து அயலவரொருவருடன் காமுறுபுணர்ச்சியில் ஈடுபடுவது அயல்புணர்ச்சியாகும்.

அயல்புணர்ச்சி,

1) ஓரயல்புணர்ச்சி (Single Adultery)

2) ஈரயல்புணர்ச்சி (Double Adultery)

என இருவகைப்படும்.

அயல்புணர்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்களில் இருவரும் திருமணமாகியவராய் இருந்தால் அஃது ஈரயல் புணர்ச்சி என்றும்,

திருமணமாகிய ஒருவரும், திருமணமாகாத ஒருவரும் ஈடுபட்டிருந்தால் அஃது ஓரயல்புணர்ச்சி என்றும் பெயர்பெறும்.[72]

அயல்புணர்ச்சியை மணமுறிவு வழக்குகளுக்குக் காரணமாகக் காட்டும்போது, அதனை நேரடிச் சான்றுகளைக்கொண்டு மெய்ப்பிப்பது சற்றுக்கடினமாகும்.[73] ஆகையால். சூழ்நிலைச் சான்றுகளைக் (குழந்தை பிறப்பு, சம்பந்தப்பட்ட தரப்பினர்களது நடத்தை, ஒப்புதல் வாக்குமூலம் போன்றவை) கொண்டு மட்டுமே அதை உறுதிப்படுத்த முடியும்.[74] அப்படியே நேரடிச் சான்றுகளைக் கொண்டு மெய்ப்பித்தாலும் அஃது ஐயத்திற்கு உரியதாகவே அமையும்.

அயல்புணர்ச்சியை வழக்கொன்றில் மெய்ப்பிக்க அது நிகழ்ந்த இடம், காலம் போன்றவற்றை உறுதிப்படுத்த வேண்டிய அவசியமில்லை.[75]

அயல்புணர்ச்சியைத் தீர்மானிப்பதற்குப் புணர்ச்சி பூர்த்தியாகியிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை; நுழைதலே போதுமானது. நுழைதலின்மை அயல்புணர்ச்சியாகாது.[76]

வழக்கொன்றில் மாற்றான் மனைவியொருத்தி, கள்ளக்காதலனோடு புணர்ச்சி ஏதுமின்றி அவனுக்குச் சுயதிருப்தியை மட்டும் ஏற்படுத்தியது செயற்கை முறையினதாகும்; அயல்புணர்ச்சியாகாதென்று தீர்ப்புரைக்கப்பட்டது.[77]

## நீதிமன்றக் கடமை

அயல்புணர்ச்சியைக் காரணமாகக் கொண்டெழும் மணமுறிவு வழக்குகளில் நீதிமன்றம் முடிந்த அளவுக்குச் சான்றுகளின் உறுதிப்பாட்டை உடன்கொண்டு பார்ப்பது அவசியமாகும். இவ்வழக்குகளில் நீதிமன்றம் ஒரே ஒரு சாட்சியைக்கொண்டு மட்டும் இவ்வழக்கை முடிவு செய்யாது, சாட்சியத்தை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் பல சாட்சிகளை உடன்கொண்டு விசாரிப்பது அவசியமாகும்.[78]

## கூறு (ஆ): கொடுமையிழைப்பு (Cruelty)

'கொடுமையிழைப்பு' என்பதற்கு யாது பொருளென்பதை இந்துத் திருமணச்சட்டம் யாண்டும் உரைத்திலது. எனினும்

கணவன், மனைவி இருவரில் ஒருவர், ஒருவருக்கெதிராக உள்ளத்தளவிலோ உடலளவிலோ தீங்கிழைப்பதை அல்லது அத்தகைய அச்சவுணர்வைத் தோற்றுவிப்பதை நாம் கொடுமையிழைப்புகள் என்று கொள்ளலாம்.[79]

## வழக்குத் தீர்வுகள்:—

கணவனும் மனைவியும் ஒருவர் வாழ்வில் ஒருவர் வேண்டுமென்றே தலையிடுவது;[80]

மனைவி முழு ஊதியத்தையும் தன்னிடம் அளிக்கவில்லை என்பதற்காகக் கணவன் அவளைவிட்டு நீங்கி வேறொருத்தியோடு இணைவது;[81]

கணவனை மனைவி பிரிவுத்துயரால் வாடவிட்டு நீங்குவது;[82]

கணவன் மனைவியோடு உடலின்பந் துய்ப்பதை மனைவி மறுப்பது;[83]

கணவன் மனைவியை அடித்தும், மோசமாக நடத்தியும், போதாதற்குக் காவல்நிலையத்தில் புகார்கொடுத்தும் அவமதிப்பது;[84]

மனைவி அடிக்கடி கணவனையும் அவனது பெற்றோரையும் வாயில் வந்தபடி வசைமொழி புகன்றுசச்சரவிட்டுமனவமைதியைக் குலைப்பது;[85]

கணவனை வசப்படுத்த மருந்திட்டு அவனது உடல் நலனை அழிப்பது;[86]

மனைவி எந்தவித முன்னறிவிப்புமின்றி கணவனைவிட்டு நீங்கிக் காணாமல் போய்விடுவது; தற்கொலை செய்துகொள்ளப் போவதாக அவனை மிரட்டுவது;[87]

எந்தவித ஆதாரமுமின்றி மனைவி கணவனை ஒழுங்கற்றவன் என்று குற்றஞ்சாட்டுவது; கணவனுக்கெதிராகக் காவல் நிலையத்தில் பொய்ப்புகார் கொடுப்பது அல்லது அவனுக்கெதிராக மொட்டைக் கடிதங்கள் தீட்டுவது;[88]

மட்டுமீறிய காம உணர்வால் கணவன், மனைவி இருவரும் ஒருவர்க்கொருவர் தீங்கிழைத்துக் கொள்வது;[89]

மனைவியை விருப்பத்திற்கு மாறாகக் கணவன் கூட்டி வந்து குடும்பம் நடத்துவது;[90]

மனைவியைக் கணவன் கற்பிழந்தவள் என்று குற்றம் சாட்டுவது;[91]

முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே, கணவன் இரண்டாவதாக ஒருத்தியை மணம்செய்துகொள்வது;[92]

மனைவி அயல்புணர்ச்சியில் ஈடுபடுவது;[93]

கணவன் மனைவியை விட்டுவிட்டு மாற்றாளொருத்தியோடு தொடர்பு கொண்டிருக்கும்போது மாமனார் அவளைப் புணர்ச்சிக்கு அழைப்பது;[94]

கணவன் முதல்மனைவி உயிருடன் இருக்கும்போதே மற்றொருத்தியை மணக்க ஒப்புதலளிப்பது;[95]

பொய்ப்புகார் மூலம் கணவன் உட்பட அவனது குடும்பத்தார் அனைவரையும் மனைவி காவலில் வைப்பது;[96]

இவையெல்லாம் கொடுமையிழைப்புக் குற்றங்களாகும் என்று நீதிமன்றத் தீர்ப்புகள் பகர்கின்றன.

## கூறு (iஆ): கைவிடுப்பு (Desertion)

கணவனோ மனைவியோ ஒருவர் கூட்டுறவினின்று ஒருவர் எவ்வித ஒப்புதலோ காரணமோ இன்றிப் பிரிதல் 'கைவிடுப்பு' எனும் குற்றமாகும்.[97]

இதன்கண் கணவன் அல்லது மனைவி ஒருவர் கூட்டுறவினின்று ஒருவர் பிரிவதென்பது தொலைதூரத்தில் பிரிந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை; ஒரே வீட்டில் தனித்தனியாகப் பிரிந்திருந்தால்கூட அதுவும் கைவிடுதலேயாகும்.[98]

## 'கைவிடுப்பு' — வழக்குத் தீர்வுகள்:—

கணவன் செவிடாகிவிட்டதைக் காரணங்காட்டிப் பிரிந்து சென்ற மனைவியைக் கணவன் மீண்டும் கூட்டிவந்து குடும்பம் நடத்த முயற்சித்தபோது மனைவி அதை மறுத்தது;[99]

மனைவி தன்னைக் கூட்டிச்சென்று குடும்பம் நடத்த கணவனைப் பலமுறை வேண்டியும் அவன் அதை மறுத்தது;[100]

நோய் காரணமாகப் பெற்றோர் இல்லத்திற்கு மருத்துவம் பார்த்துக்கொள்ளச் சென்ற மனைவியைக் கணவன் ஏழெட்டு ஆண்டுகளுக்கு மேலாக ஏறெடுத்தும் பார்க்காதிருந்தது;[101]

கணவன் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளலாமென்ற அச்ச உணர்வால் மனைவி அவனினின்றும் பிரிந்தது;[102]

கணவன் வீட்டில் இடநெருக்கடியைக் காரணங்காட்டி மனைவி அவனினின்றும் பிரிந்தது;[103]

மனைவி தான் ஓர் எம்.ஏ. பட்டதாரி என்ற உயர்வு மனப் பான்மையால் படிப்பறிவு குறைந்த கணவனை விட்டு நீங்கியது;[104]

ஆகியவை 'கைவிடுப்பு'க் குற்றங்களாகுமெனப் பல்வேறு காலக் கட்டங்களில் வழங்கப்பட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் பகர்கின்றன.

## கைவிடுப்பு குற்றமாகாமை — வழக்குத் தீர்வுகள்:—

கோபம் அல்லது அஃதொக்கும் காரணங்களின் பேரில் கணவனோ மனைவியோ தற்காலிகமாக ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருப்பது;[105]

கணவன் மனைவியைக் கோபதாபத்தால் கற்பிழந்தவள் என்று உரைக்க, அதன் காரணமாக அவள் அவனினின்றும் பிரிந்திருப்பது;[106]

கணவனே மனைவியை அவளது தாய் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டுவர, அவள் அதன் காரணமாகப் பிரிந்திருப்பது;[107]

கணவன் மனைவியை வீட்டைவிட்டு விரட்ட, அதன் காரண மாக அவள் அவளது பெற்றோர் இல்லத்திலேயே தங்கி விடுவது;[108]

கணவனது கொடுமையிழைப்பு மற்றும் வைப்பு நங்கை ஒருத்தியைத் தனது இல்லத்தில் வைத்துக்கொண்டு குடும்பம் நடத்துவதைப் பிடிக்காத மனைவி,கணவனை விட்டு நீங்குவது;109

உடன்பாட்டின்பேரில் கணவனும் மனைவியும் பிரிவது;110 முதலானவை கைவிடுப்புக் குற்றங்கள் ஆகாவெனப் பல்வேறு காலக் கட்டங்களில் வழங்கப்பட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் பகர்கின்றன.

## கூறு (ii): மதமாற்றம் (Conversion)

கணவன் அல்லது மனைவி மதம் மாறிய சூழ்நிலையில் மண முறிவு வேண்டி மனுச் செய்யலாம்.

மதம் மாறிய சூழ்நிலையில் தரப்பினர் இருவரும் கணவன், மனைவியாக வாழக் கூடாதென்பதில்லை; விருப்பப்பட்டால் இருவரும் வெவ்வேறு மதத்தில் இருந்துகொண்டுகூட கணவன், மனைவியாக வாழலாம். எனினும், மதம் மாறிய சூழ்நிலையில் இருவரும் கணவன், மனைவியாக வாழ்வது கடினம் என்பதால் இச்சட்டம் மதம் மாறிய சூழ்நிலையில் கணவன், மனைவி இருவரும் மணமுறிவு பெற மனுச் செய்வதை ஆதரிக்கிறது.

## கூறு (iii): பித்துநிலை

பித்துநிலை என்பதற்கு யாது பொருளென்பதை இந்துத் திருமணச் சட்டம் யாண்டும் விளக்கிற்றிலது. எனினும், நல்லது எது கெட்டது எது என்பதைப் பகுத்துணரா மனநிலையைப் பித்துநிலை என்றும், அத்தன்மையில் இருப்போரைப் பித்து நிலையர் என்றும் குறிப்பிடலாம்.

பித்துநிலையைத் தரப்பினர் எவரும் மணமுறிவுக்குக் காரண மாகக் காட்டும்போது அதைக் கோவையாகவும், தெளிவாகவும்,

நீதிமன்றம் உளநிறைவடையுமளவிற்கு ஐயந்திரிபற மெய்ப்பிப்பது அவசியமாகும்.[111]

பித்துநிலையை நீதிவழிப் பிரிந்துறைதல் வழக்குகளுள் மெய்ப்பிக்கும் அளவைவிட மணமுறிவு வழக்குகளுக்குச் சற்று மிகையாகவே மெய்ப்பிப்பது அவசியமாகும்; பித்துநிலையை நீதிவழிப் பிரிந்துறைதலுக்குச் 'சித்தப்பிரமை' அளவுக்கு மெய்ப்பித்தால் போதுமானது. ஆனால், மணமுறிவு வழக்குகளைப் பொறுத்தவரை, அதைக் குணப்படுத்தவியலா அளவினுக்கு உறுதிப்படுத்துதல் வேண்டும்.[112] இதனைத் தரப்பினர் தம் வாய்மொழிச் சான்றுகளோடு மருத்துவச் சாட்சியங்களையும் உடன்கொண்டு உறுதிப்படுத்தினால் அது சிறப்புடைத்தாயிருக்கும்.[113]

## மருத்துவ ஆய்வுக்கு அனுப்புதல்

ஒருவருக்குப் பித்துநிலை இருக்கிறதா, இல்லையா என்பதைக் கண்டறிவதற்கு நீதிமன்றம் விரும்பினால், அவ்வாறு பாதிக்கப்பட்டவரை மருத்துவ ஆய்வுக்கு அனுப்பி வைக்கலாம்; நீதிமன்றம் அவ்வாறு அனுப்ப எத்தனிக்கும்போது சம்பந்தப்பட்ட நபரும் அதற்கு உடன்படுதல் வேண்டும். நபர் எவரும் அவ்வாணைக்கு உடன்பட மறுப்பாரேல், நீதிமன்றம் அவருக்கு எதிராகப் பித்துநிலையை அனுமானித்துக்கொள்ளும்.[114]

## கூறு (iv) : தொழுநோய் (Leprosy)

கணவன் அல்லது மனைவி தொழுநோயால் பீடிக்கப்பட்டருக்கும்போது அவர்களில் ஒருவர் மற்றொருவரிடமிருந்து மணமுறிவு பெற மனுச்செய்யலாம்.

இப்பிரிவின்கீழ் தொழுநோயைத் தவிர மற்றும் ஏதேனும் ஒரு நோய் (பால்வினை நோயைத் தவிர) கணவன், மனைவி இருபாலரில் ஒருவருக்கு இருக்கும்போது அவரிடமிருந்து தரப்பினர் எவரும் மணமுறிவுப்பெற முடியாது.

வழக்கொன்றில் மணமகளின் காசநோயைக் காரணங்காட்டி மணமுறிவு கோரியது புறக்கணிக்கப்பட்டது.[115]

## கூறு (v) : பால்வினை நோய் (Venereal Disease)

ஒருவரிடத்திலிருந்து மற்றொருவருக்கு எளிதல் தொற்றிக் கொள்ளும் பால்வினை நோய், கணவன், மனைவி இருவரில் எவருக்கிருந்தாலும், அவர்களில் ஒருவர் மற்றவரிடமிருந்து மண முறிவு பெற மனுச்செய்யலாம். இஃது அறியாமைத் தொடர்பால் ஏற்பட்டது; குணப்படுத்தக்கூடியது என்று எதிர்வாதம் செய்வதன் மூலம் இவ்வுட்பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தள்ளுபடி செய்ய வைக்கமுடியாது.

## கூறு (vi) : துறவறம் பூணுதல்

கணவன், மனைவி இருவரில் ஒருவர் சொந்த பந்த பாசம் மற்றும் குடும்ப உறவுகளைக் கடந்து துறவறம் மேற்கொண்டிருக்கும்போது அவர்களில் ஒருவர் மற்றவரிடமிருந்து மணமுறிவு பெற மனுச் செய்யலாம்.

ஈண்டுத் துறவறம் பூணுதல் என்பது, வீணுக்கு ஒருவர் துறவறம் பூண்டுவிட்டதாக அறிவிப்பதன் மூலமோ மழித்தல், நீட்டல், காவியுடை தரித்தல் போன்ற கோலங்களைப் புனைவதன் மூலமோ வெளிப்படுத்தினால் மட்டும் போதாது; அவ்வவற்றிற்கும் உரிய சடங்குகளை நிகழ்த்தித் துறவறம் பூண்டிருத்தல் வேண்டும். அப்போது மட்டுமே அவர் துறவறம் பூண்டிருப்பதாக இந்துத் திருமணச் சட்டம் ஏற்கும்.

## கூறு (vii): ஏழாண்டுகளுக்கு மேலாகத் தரப்பினர் யாண்டுள்ளார் என்பதை அறியாதிருப்பது

ஏழாண்டுகளுக்கு மேலாக எதிர் மனுதாரர் உயிருடன் இருக்கிறாரா, இல்லையா என்பதை மனுதாரர் உட்பட சாதாரணமாக எதிர்மனுதாரரை அறிந்திருக்கக் கூடிய நபர் எவரும் அறியாதிருக்கும்போது மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக மணமுறிவு வேண்டி மனுச் செய்யலாம்.

## உட்பிரிவு: (1அ) (i):

நீதிவழிப் பிரிந்துறைதல் தீர்ப்பாணைக்கேற்ப கணவன், மனைவி ஓராண்டுக் காலத்திற்கு மேலாகப் பிரிந்திருக்கும்போது இப்பிரிவின் கீழ் மணமுறிவு கோரி மனுச் செய்யலாம்.

## உட்பிரிவு (1அ): (ii):

மணவாழ்வுரிமை மீட்டளிப்புத் தீர்ப்பாணைக்குப் பிறகும் கணவன், மனைவி கலந்து வாழவியலாதபோது, அவர்கள் மணமுறிவு கோரி மனுச் செய்வதற்கான வகையங்களை இப்பிரிவு உரைக்கின்றது.

## உட்பிரிவு (2) : மனைவிக்கு மணமுறிவுக்கான கூடுதல் காரணங்கள் (Additional grounds for wife)

இவ்வுட்பிரிவுப்படி மனைவியொருத்தி, பிரிவு 3 (1), (i) (iஅ), (iஆ), (ii), (iii), (iv), (v), (vi), (vii) மற்றும் (iஅ), (i), (ii) ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள காரணங்களைத் தவிர, உட்பிரிவு (2)இன் (i), (ii)இல் கூறப்பட்டுள்ள காரணங்களைக் கொண்டும் மணமுறிவு பெற மனுச் செய்யலாம்.

## உட்பிரிவு (2) (iii):

இக்கூறு, 1976-ஆம் ஆண்டுச் சட்டத் திருத்தத்தின் மூலம் இணைக்கப்பட்டது.

இதன்படி, **இந்து மகவேற்பு மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம்**, 1956 (Hindu Adoptions and Maintenance Act, 1956) அல்லது **குற்றவியல் நடைமுறைச் சட்டம்**, 1973 (Criminal Procedure Code,1973)இன் கீழ் மனைவியொருத்திக்கு வாழ்க்கைப் பொருளுதவி வழங்க நீதிமன்றம் இட்ட தீர்ப்பாணையை அல்லது கட்டளையை உரிய நபர் எவரும் ஓராண்டுக் காலத்திற்கு மேலாக நிறைவேற்றாதபோது, பாதிக்கப்பட்ட தரப்பினர் மணமுறிவு வேண்டி மனுச்செய்யலாம்.

## உட்பிரிவு (2) (iv):

இக்கூறு, 1976-ஆம் ஆண்டுச் சட்டத்திருத்தத்தின் மூலம் இணைக்கப்பட்டது. இஃது, பெண்ணொருத்திக்குப் பதினைந்து வயதிற்குள் திருமணம் நடந்திருந்து அவள் அதைப் பதினெட்டு வயதை அடைவதற்குள் மறுத்திருக்கும்போது, மணமுறிவு பெற உரிமையுண்டு என்பதைப் பற்றி உரைக்கின்றது.

13அ. பிரிவு 13, உட்பிரிவு (i), கூறுகள் (ii), (vi), (vii) ஆகிய வற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களைக் கொண்டல்லாது இச்சட்டத்தின் இதர நடைமுறைகளின் கீழ் திருமண முறிவு தீர்ப்பாணை மூலம், திருமணமொன்றைக் கலைப்பதற்காக மனுச் செய்திருக்கும்போது, நீதிமன்றம் திருமணத்தைக் கலைத்துத் தீர்ப்பு வழங்குவதற்குப் பதிலாக நீதிவழிப் பிரிந்துறைவதற்குத் தீர்ப்பாணை வழங்கும்.

**மணமுறிவுக்கு மாற்று**

இப்பிரிவு, இந்துத் திருமணச் சட்டம், பிரிவு 10-க்கு மாற்றாக அமைந்தது. இஃது, 1976-ஆம் ஆண்டுச் சட்டத் திருத்தத்தின் மூலம் இணைக்கப்பட்டது.

இப்பிரிவுப்படி, கணவன் அல்லது மனைவி இந்துத் திருமணச் சட்டம், பிரிவு 13, உட்பிரிவு (1), கூறுகள் (ii), (vi) மற்றும் (vii) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களில் ஒன்றைக் கொண்டல்லாது இச்சட்டத்தின் இதர நடைமுறைகளின்கீழ் மண முறிவு வேண்டுபோது, நீதிமன்றம் அத்தகைய வேண்டுதலைப் புறக்கணித்து அதற்குப் பதிலாக நீதிவழிப் பிரிந்துறைவதற்கான தீர்ப்பாணையை வழங்கும்.

13ஆ. 1) இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள வகையங்களுக்கு உட்பட்டுத் திருமணமொன்றைத் திருமணத் தரப்பினர் இருவரும் ஒத்திசைந்து கலைக்கக் கோரி மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம். மனுச் செய்வதற்குரிய காரணங்களாக அவர்கள் இருவரும் தனித்தனியே பிரிந்துறைவதையும், இனி இணைந்து வாழ வழியில்லையென்பதையும், இருவரும் மனம் ஒத்து மணக் கலைப்புக்கு உடன்படுகிறோம் என்பதையும் காட்டலாம். திருமணம், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன் நிகழ்ந்திருப்பினும் அல்லது பின் நிகழ்ந்திருப்பினும் அவர்கள் மனுச் செய்ய உரிமையுண்டு.

**ஒத்திசைவால் மணமுறிவு**

2) உட்பிரிவு (1)இன்படி தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தரப்பினர் ஆறு திங்களுக்குப் பிறகு, ஆனால் பதினெட்டுத் திங்களுக்கு முன்னர்த் திரும்பப் பெற்றுக்கொள்ளாதிருக்கும் போது, நீதிமன்றம் சம்பந்தப்பட்ட தரப்பினர் இருவரையும் உசாவி, தக்கதெனக் கருதும் விசாரணை ஒன்றை நடத்தித் திருமணம் நடைபெற்றதையும் அம்மனுவில் கூறப்பட்டவைகளையும் உண்மையென்று கருதி உளநிறைவடைகின்றபோது திருமணத் தேதியிலிருந்து திருமணத்தைக் கலைத்துத் தீர்ப்பாணை வழங்கும்.

இப்பிரிவு, 1976-ஆம் ஆண்டுச் சட்டத் திருத்தத்தின் மூலம் இணைக்கப்பட்டது.

இப்பிரிவின்கீழ் நிவாரணமொன்றைப் பெற —

(i) தரப்பினர் இருவரும் இணையாக மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும்.

(ii) திருமணமுறிவு தீர்ப்பாணை ஒன்றால் மணக்கலைப்புப் பெறுவதற்கான காரணங்களான,

(அ) மனுவைத் தாக்கல் செய்வதற்கு ஓராண்டுக்கு முன்பிருந்தே கணவன், மனைவி பிரிந்திருந்ததையும்,

(ஆ) இனி இருவரும் இணைந்துவாழ வாய்ப்பில்லை என்பதையும்,

(இ) அவர்கள் இருவரும் திருமணக் கலைப்பிற்கு மனமொத்து உடன்படுகிறார்கள் என்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## கணவன், மனைவி தனித்தனியே பிரிந்து வாழ்வது

இப்பிரிவுப்படி கணவன், மனைவி தனித்தனியே பிரிந்து வாழ்வதென்பது, ஒருவரைவிட்டு ஒருவர் தொலைதூரத்தில் பிரிந்திருக்கவேண்டும் என்பதில்லை. ஒரே இல்லத்தில் கணவன், மனைவி என்ற தொடர்பில்லாமல் இருப்பதுகூடத் தனித்தனியே பிரிந்து வாழ்வதையே குறிக்கும்.

## கணவன், மனைவி இணைந்துவாழ வாய்ப்பிலாமை

இப்பிரிவின் கீழ் கணவன், மனைவி இணைந்து வாழவியலாத் தன்மையை அவர்தம் தற்போக்கான எண்ணத்தையோ விருப்ப மின்மையையோ கொண்டு அளவிடாது, அவர்தம் வழக்கின் தன்மை நிகழ்வுகளைக் கொண்டு அளவிடுவது சாலச் சிறந்த தாகும்.

## ஒத்திசைவு

இப்பிரிவின் கீழ் கணவன், மனைவி இருவரும் மனமொத்து மணமுறிவுக்கு உடன்படுதல் வேண்டும். கணவன் அல்லது மனைவியின் இசைவு மறுதரப்பினர்தம் மோசடி, திரித்துக்காட்டுதல் அல்லது ஏமாற்றுதல் அடிப்படையில் பெறப்பட்டிருப்பின், அத் தகைய இசைவுவழிப் பெறப்பட்ட மணமுறிவு செல்லாததாகும்.

## நீதிமன்றத்தின் கடமை

இவ்வழக்குகளில் நீதிமன்றம் முடிந்த அளவுக்குக் கணவன், மனைவிக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்தி வைக்க முயல்வது மிகவும் அவசியமாகும்.

**திருமணம் முடிந்த ஓராண்டிற்குள்ளாக மணமுறிவுபெற மனுச் செய்ய முடியாது.**

14. 1) இச்சட்டத்தில் யாது கண்டிருந்தபோதிலும் திருமணத் தேதியிலிருந்து மனுச் செய்யப்படும் தேதிவரை ஓராண்டுக்கால இடைவெளியிருந் தாலன்றித் திருமண முறிவு கோரிச் செய்யப்படும் மனு ஏதொன்றையும் எந்நீதிமன்றமும் ஏற்று விசாரித் தல் கூடாது. ஆனால், இதன்பொருட்டு உயர்நீதிமன்றம் வகுக்கும் விதிகளுக்கேற்ப மனுதாரர் அல்லது எதிர்மனுதாரரை நீதிமன்றம் சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் திருமணத் தேதி யிலிருந்து ஓராண்டுக் காலத்திற்குள்ளும் மணமுறிவுக்காக மனுச் செய்ய அனுமதிக்கலாம். ஆனால், இவ்வனுமதியைத் தரப்பினர் திரித்துக்காட்டுதல் அல்லது உண்மைத் தன்மையை மறைப்பதன் மூலம் பெறுதல் கூடாது. அப்படித் திரித்துக்காட்டுதல் அல்லது உண்மையை மறைப்பதன் மூலம் அனுமதியைத் தரப்பினர்

எவரும் பெற்றிருப்பின், நீதிமன்றம் திருமணத் தேதியிலிருந்து ஓராண்டுக்கால முடிவிற்குள் விளைவு ஏதொன்றையும் விளைவிக்காது என்று தீர்ப்பாணையொன்றைப் பிறப்பிக்கவும் அல்லது ஓராண்டு கழிந்த பிறகு அதனைத் தாக்கல் செய்ய வேண்டும் என்ற குறிப்புடன் அதனைத் தள்ளவும் செய்யலாம்.

2) திருமணத் தேதியிலிருந்து ஓராண்டுக்கால முடிவிற்குள் திருமணக் கலைப்பிற்காக இப்பிரிவின்கீழ் மனுச்செய்ய அனுமதி வழங்கப்பட்டிருக்கும்போது, நீதிமன்றம் தீர்ப்பெதையும் வழங்குவதற்கு முன்னர், அத்திருமணத்தின் வழித் தோன்றிய குழந்தைகள் எவரேனுமிருப்பின் அவர்கள் நலனில் அக்கரை கொண்டு கணவன், மனைவி இருவரும் ஓராண்டுக்காலத்திற்குள் சமாதானம் அடைய வாய்ப்பிருக்கிறதாவென்பதைக் கவனித்தல் வேண்டும்.

## உட்பிரிவு (1) : விதிவிலக்கான சூழ்நிலைகள்

இப்பிரிவின்கீழ் கணவன், மனைவி திருமணம் முடிந்த ஓராண்டுக்குள் மணமுறிவு கோரி மனுச் செய்யமுடியாதெனினும், திருமணம் முடிந்த ஓராண்டிற்குள் கணவனோ மனைவியோ,

1) அயல்புணர்ச்சி (Adultery)

2) கைவிடுப்பு (Desertion)

3) கொடுமையிழைப்பு (Cruelty)

போன்ற குற்றங்களை இழைத்திருக்கும்போது அதில் பாதிக்கப்பட்ட தரப்பினர் திருமணம் முடிந்த ஓராண்டிற்குள்ளும் மணமுறிவு கோரி மனுச்செய்யலாம்.[116]

**மணமுறிவு செய்து கொண்டவர்கள் மறுமணம் பெறுவதெப்போது**

**15.** திருமண முறிவுத் தீர்ப்பாணை ஒன்றால் மணமுறிவு ஏற்பட்டிருக்கும் போதும், தரப்பினர்கள் இருவரும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய உரிமை இல்லாதிருக்கும் போதும், மேல் முறையீடு செய்ய உரிமை இருந்தும் மேல்முறையீட்டுக்குரிய காலவரையறை

முடிவதற்குள் மேல்முறையீடு செய்யாதிருக்கும்போதும், மேல் முறையீடு செய்யப்பெற்று அது தள்ளுபடியாகியிருக்கும்போதும் தரப்பினர்கள் மீண்டும் திருமணம் செய்து கொள்வது சட்டபூர்வ மானதாகும்.

16. 1) பிரிவு 11இன் கீழ் திருமணமொன்று செல்லாநிலையதாக இருப்பினும் அத்திருமணத்தின்வழி தோன்றிய குழந்தை அத்திருமணம் செல்லும் நிலையதாக இருந்தால் எங்ஙனம் அது முறை மணப்பிறப்புக் குழந்தையாகக் கருதப்படுமோ அவ்வாறே கருதப்படுதல் வேண்டும். அக்குழந்தை திருமண விதிகள் (திருத்தம்) சட்டம், 1976 நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அல்லது பின்னர்த் தோன்றியிருப்பினும், அத் திருமணம் செல்லாதென்று இச்சட்டப்படி தீர்ப்பிடப்பட்டிருப்பினும் அல்லது தீர்ப்பிடப்படாதிருப்பினும் அல்லது இச்சட்டப்படி மனுச் செய்வதன் மூலம் அல்லது மனுச் செய்யாததன் மூலம் திருமண மொன்று செல்லத்தக்கதல்லவென்று அறிவித்திருப்பினும் அல்லது அறிவிக்காதிருப்பினும் அக்குழந்தை சட்டபூர்வக் குழந்தையாகவே கருதப்படும்.

**இல்லாநிலை மற்றும் தவிர்தகுநிலைத் திருமணங்கள் வழித் தோன்றிய குழந்தைகளின் சட்டங்குறித்த நிலை**

2) பிரிவு 12-இன் கீழ் திருமணமொன்று இல்லாநிலையதென்று அறிவித்துத் தீர்ப்பாணை வழங்கப்பட்டிருக்குமிடத்தும், அத்தீர்ப்பாணைக்கு முன் பிறந்த அல்லது கருவிலிருந்த குழந்தை சட்டபூர்வக் குழந்தையாகவே கருதப்படும். திருமணம் கலைக்கப் பட்டிருக்கும்போதும் அது சட்டபூர்வக் குழந்தையாகவே கருதப் படும்.

3) உட்பிரிவு (1) அல்லது (2) - இவற்றிலுள்ளவை எதுவும், பிரிவு 12-இன் கீழ் தீர்ப்பாணை ஒன்றால் செல்லாததும், இல்லாததும் அல்லது நீக்கஞ் செய்யக்கூடியதுமான திருமணத்தின்மூலம் தோன்றிய குழந்தைக்குத் தனது பெற்றோரது உடைமையில்

அல்லது வேறு நபர்களது உடைமையில் யாதொரு உரிமையும் இருப்பதாகக் கொள்ளக்கூடாது. இச்சட்டம் பிறப்பிக்கப்படா திருக்குமிடத்து அக்குழந்தை பெற்றோரது முறைமணப்பிறப்புக் குழந்தையாக இல்லாதிருக்குங்கால் எவ்வாறு அவர்களது இதர உடைமைகளைப் பெறமுடியாதோ அத்தகைய உரிமைகளை இப் பிரிவு அளிப்பதாகக் கொள்ளக்கூடாது.

**இருதாரமணத்திற்குத் தண்டனை**

17. இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததற்குப் பின்னர்த் திருமணம் செய்துகொள்ளும் தரப்பினர் எவரும் திருமணத்தின்போது உயிருடன் வேறு கணவனையோ மனைவியையோ பெற்றிருக்கும் நிலையில்அத்திருமணம் செல்லாது; சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்தியத் தண்டனைச் சட்டம் (XLV/ 1860) பிரிவுகள் 494, 495-இன்படி தண்டிக்கப்படுவர்.

**இந்துத் திருமணமொன்றில் வேறுசில நிபந்தனைகளை மீறுவதற்கான தண்டனை**

18. சட்டப்பிரிவு 5, கூறுகள் (iii), (iv), மற்றும் (v)இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு முரண்பட்ட வகையில் திருமணம் புரிந்து கொள்ளும் ஆணோ பெண்ணோ தண்டனைக்கு உரியவர்களாவார்கள்.

(அ) பிரிவு 5, கூறு (iii)இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு முரண்படும்போது, 15 நாள்கள்வரை சாதாரண சிறைத் தண்டனை அல்லது ஆயிரம் உருவாக்கள் வரை அபராதம் அல்லது அவை இரண்டையும் தண்டனையாகப் பெறுவர்.

(ஆ) 5, கூறு (iv). கூறு (v) ஆகியவற்றில் குறிப்பிடப் பட்டுள்ள நிபந்தனைகளுக்கு முரண்படும்போது ஒரு திங்கள் வரை சாதாரண சிறைத்தண்டனை அல்லது ஆயிரம் உருவாக்கள் வரை அபராதம் அல்லது அவை இரண்டையும் தண்டனையாகப் பெறுவர்.

# இயல் 5

# ஆள்வரையும் நடைமுறையும்

**மனு தாக்கல்செய்யப்படுவதற்குரிய நீதிமன்றம்**

19. இச்சட்டத்தின்கீழ் மனு ஒவ்வொன்றையும் சாதாரணமாக, (i) திருமணம் நிகழ்ந்த இடம்; அல்லது (ii) மனுதாக்கல் செய்யும் காலத்தில் எதிர் மனு தாரர் குடியிருப்பைக் கொண்டிருக்குமிடம்; அல்லது

(iii) திருமணத் தரப்பினர்கள் இருவரும் கடைசியாக ஒன்று சேர்ந்து உறைந்தவிடம்; அல்லது

(iv) இச்சட்டம் அளாவும் பகுதிக்கு அப்பால் எதிர்மனுதாரர் வசித்து வரும்போதும், ஏழாண்டுகளுக்கு மேல் எதிர்மனுதாரர் யாண்டுள்ளார் என்பதைக் கேள்விப்படாதிருக்கும்போதும், மனு தாரர் உறைவிடம் இவற்றிற்குரிய ஒரு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

## மனு (Petition)

ஈண்டு 'மனு' என்பது குற்றவியல் முறையீடுகளைக் குறிக் காது; மனையற வழக்குகளில் (Matrimonial suit) தாக்கல் செய்யப்படும் வழக்குரைகளை (Plaints) மட்டுமே குறிக்கும்.[117]

## உரிய நீதிமன்றம்

இச்சட்டத்தின்கீழ் நிவாரணங்கோரித் தாக்கல் செய்யப்படும் மனு ஒவ்வொன்றையும் மாவட்ட நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்ய வேண்டும்.

(விளக்கம், பிரிவு 3 (ஆ) காண்க)

## உறைவிடம் (Residence)

இப்பிரிவின் கீழ் நிவாரணமொன்றைப் பெற கணவன், மனைவிக்கு நிரந்தர இருப்பிடம் இருக்க வேண்டும் என்ற அவசிய மில்லை; தற்காலிக இருப்பிடம்கூடப் போதுமானதே.[118]

## எ—டு

திருமணமொன்று 'ச' எனுமிடத்தில் நிகழ,கணவன், மனைவி முதலில் 'பி' எனும் இடத்திலும், பிறகு 'சி' எனும் இடத்திலும் கலந்துறைந்து தனித்தனியே பிரிந்திருக்கும்போது, அவர்கள் 'சி' எனும் இடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்திலும் மனுச் செய்ய உரிமையுண்டு.[119]

**மனுவில் காணப்படவேண்டிய பொருள்களும் உறுதிமொழியும்**

20. (1) இச் சட்டத்தின்கீழ் தரப்பினர்கள் நிகழ்வுகள் அனுமதிக்கின்றவகையில் தமது தரப்பினைத் தெளிவாக எடுத்துரைத்தும், பிரிவு 11-இன் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுவைத் தவிர மற்றைய மனுக்களில் எத்தகைய நிவாரணம் தேவை என்பதைக் குறிப்பிட்டும், அதோடுகூட கணவன், மனைவி ஆகிய இருவரது வஞ்சகக் கூட்டால் இம்மனு தாக்கல்செய்யப்படவில்லை என்பதை விளக்கியும் மனுவைத் தாக்கல் செய்வது அவசியமாகும்.

(2) இச்சட்டப்படி செய்யப்பட்ட மனு ஒவ்வொன்றிலும் கூறப்பட்ட செய்திகள் அனைத்தும் உண்மையானவையே என்று மனுதாரர் அல்லது மனுதாரருக்காகக் கையெழுத்திட சட்டபூர்வ

மான தகுதியுள்ள நபர் கையெழுத்திடுதல் வேண்டும். இது விசாரணையின்போது சான்றாகவும் பயன்படுத்தப்படும்.

**21.** இச்சட்டத்தின் மற்றைய வகையங்களுக்கும், உயர்நீதி மன்றம் இதற்கென வகுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு,

**சட்டம் v/1908 பொருந்துகை**

இச்சட்டப்படி நிகழும் நடைமுறைகள் அனைத்தும் உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908(சட்டம் v/1908)இன்படி நடைபெறுதல் வேண்டும்.

**21அ.** (1)

அ) திருமணத் தரப்பினர்களில் ஒருவர், பிரிவு 10இன் கீழ் நீதி வழிப் பிரிந்துறைய அல்லது பிரிவு 13இன் கீழ் திருமண

**மனுக்கள் சிலவற்றை மாற்றுவதற்கான அதிகாரம்**

முறிவுத் தீர்ப்பாணை வேண்டி ஆள்வரையுள்ள மாவட்ட நீதி மன்றம் ஒன்றில் இச்சட்டத்தின்கீழ் மனுச் செய்திருக்குமிடத்தும்,

(ஆ) திருமணத் தரப்பினர்களில் எதிர் தரப்பினர், பிரிவு 10இன் கீழ் நீதிவழிப் பிரிந்துறைய அல்லது பிரிவு 13இன் கீழ் திருமணமுறிவுத் தீர்ப்பாணை வேண்டி இச்சட்டத்தின்கீழ் அதே மாநிலம் அல்லது வேறொரு மாநிலம், அதே மாவட்ட நீதிமன்றம் அல்லது வேறொரு மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்திருக்குமிடத்தும் அவற்றை உட்பிரிவு (2)இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி முடிவு செய்ய வேண்டும்.

(2) உட்பிரிவு (1) பொருந்துமிடத்து—

(அ) அம்மனுக்கள் ஒரே மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும்போது, அவற்றை அம்மாவட்ட நீதிமன்றமே விசாரிக்கும்.

(ஆ) அம்மனுக்கள் வெவ்வேறு மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல்செய்யப்பட்டிருக்கும்போது, அவற்றைப் பிந்தைய நீதி மன்றம் முந்தைய நீதிமன்றத்திற்கு மாற்றிக் கொடுப்பதன்மூலம் முந்தைய நீதிமன்றம் விசாரிக்கும்.

(3) உட்பிரிவு (2), கூறு (ஆ) பொருந்துமிடத்து, உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908இன் கீழ் சூழ்நிலைக்கேற்ப வழக்கொன்றை ஆள்வரையுள்ள நீதிமன்றம் அல்லது அரசாங்கம் பின்னதாகத் தாக்கல்செய்யப்பட்ட நீதிமன்றத்திடமிருந்து முன்னதாகத் தாக்கல்செய்யபட்ட நீதிமன்றத்திற்கு மாற்றிக் கொடுக்கும்.

**இச்சட்டத்தின்கீழ் வழக்குத் தீர்விற்கும் விசாரணைக்கும் தொடர்புடைய சிறப்பு வகையம்**

21ஆ. 1) இச்சட்டப்படி மனுவொன்றன் மீதான விசாரணையைக் கூடுமானவரையில் நீதியின் நன்னோக்கத்திற்கு ஏற்புடைத்தாகும் வகையில் தொடர்ந்து நடத்துதல் வேண்டும். அவ்வாறல்லாது விசாரணையைத் தள்ளிவைப்பது அவசியமென்று நீதிமன்றத்திற்குத் தோன்றினால், அது அதற்குரிய காரணங்களை எழுத்தில் பதிந்துகொண்டு விசாரணையைத் தள்ளிவைக்கலாம்.

(2) இச்சட்டப்படி தாக்கல் செய்யப்படும் மனு ஒவ்வொன்றையும் எவ்வளவு விரைவாக விசாரித்து முடிக்கவியலுமோ அவ்வளவு விரைவாக விசாரித்து முடித்தல் வேண்டும்; எதிர் மனுதாரருக்கு மனு பற்றிய அறிவிப்பு, சார்வு செய்த தேதியிலிருந்து ஆறு . திங்களுக்குள்ளாக இம்மனுவை விசாரித்து முடிப்பது அவசியம்.

(3) இச்சட்டப்படி தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடு ஒவ்வொன்றையும் எவ்வளவு விரைவாக விசாரித்து முடிக்கவியலுமோ அவ்வளவு விரைவாக விசாரித்து முடிக்க வேண்டும்; எதிர் மனுதாரருக்கு மேல்முறையீடு பற்றிய அறிவிப்பு, சார்வு செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள்ளாக அம் மேல்முறையீட்டு மனுவை விசாரித்து முடிப்பது அவசியம்.

**ஆவணச் சான்று**

21இ. மற்ற சட்டங்களில் முரணாக யாது கூறப்பட்டிருப்பினும் இச்சட்டப்படி ஒரு மனுவின் மீது நடைபெறும் விசாரணையில், ஆவணமொன்றில் போதுமான

முத்திரைவில்லை ஒட்டப்படவில்லை அல்லது ஆவணமொன்று பதிவு செய்யப்படவில்லை என்பதைக் காரணங்காட்டி அதன் சாட்சியத்தை ஏற்காதிருக்கக் கூடாது.

**நடைமுறைகள் உள்ளார்ந்தன வாக நடத்தப்பெறுவதோடு, அவை அச்சிடப்படவோ வெளியிடப்படவோ கூடாது**

22. (1) இச்சட்டப்படி நடைபெறும் நடைமுறைகள் ஒவ்வொன்றையும் நீதிமன்றம் உள்ளார்ந்ததாகவே நடத்துதல் வேண்டும். உச்ச நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத் தீர்ப்புகளை முன்னனுமதியுடன் அச்சேற்றி வெளியிடுவதைத் தவிர, மற்றைய வகையில் இந்நடைமுறைகள் எதையும் எவரும் அச்சிடவோ வெளியிடவோ கூடாது.

(2) உட்பிரிவு (1)இன் வகையங்களுக்கு முரணாக அந்நடைமுறைகள் தொடர்புடைய விவரங்களை நபர் எவரும் அச்சிடவோ வெளியிடவோ செய்யின், அவர் ஆயிரம் உருவாக்கள் வரை அபராதம் விதித்துத் தண்டிக்கப்படுவர்.

## உட்பிரிவு (1) : உள்ளார்ந்த நடைமுறை (In-camera Proceeding)

1976ஆம் ஆண்டுச் சட்டத் திருத்தத்திற்கு முன்னர் இச்சட்டத்தின் கீழ் எழும் வழக்குகளை நீதிமன்றம் நீதிமன்றத்தில் கூடியிருப்போர் அனைவரும் அறிகின்ற வகையிலோ வாதி அல்லது எதிர்வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் உள்ளார்ந்ததாகவோ (நீதிபதி, தரப்பினர்கள், தரப்பினர்களது வழக்கறிஞர்கள், நீதிமன்றப் பணியாட்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்) நடத்தி வந்தது. ஆனால், 1976-ஆம் ஆண்டுச் சட்டத் திருத்தத்திற்குப் பிறகு இந்நடைமுறைகள் அனைத்தையும் உள்ளார்ந்ததாகவே நடத்தவேண்டுமென்று சட்டம் கட்டாயப்படுத்தியுள்ளது.

23. (1) இச்சட்டப்படி தாக்கல் செய்யப்படும் நடைமுறைகளில் எதிர்மனுதாரர் தம் தரப்பு வாதத்தை எடுத்துரைப்

பினும், எடுத்துரையாதிருப்பினும் நீதிமன்றம் -

**நடைமுறைகளில் தீர்ப்பாணை**

(அ) மனுவில் கேட்டிருக்கும் நிவாரணத்திற்குப் போது மான காரணங்கள் இருக்கின்றன என்றும், மனுதாரர் பிரிவு 5, கூறு (ii), உட்கூறு (அ), உட்கூறு (ஆ) அல்லது (இ) இல் குறிப்பிடப்பட்டிருக்கும் காரணங்களின்மீது நிவாரணம் கோரி இட்ட வழக்குகளைத் தவிர, மற்றபடி அவர் தம்முடைய தவறையோ இயலாமையையோ பயன்படுத்திக்கொண்டு நிவாரணம் கேட்கவில்லை என்றும்;

(ஆ) பிரிவு 13, உட்பிரிவு (1), கூறு (i) இல் உள்ள காரணங்கள் மனுவில் கூறப்பட்டிருக்குமிடத்து, மனுதாரர் அம்மனுவில் குறித்த செயல் அல்லது செயல்களுக்கு எதிர்மனுதாரருக்கு உதவியாகவோ மறைமுக ஆதரவளிக்கும் பாங்கிலோ இல்லை; அல்லது அத்தகைய செயலை மன்னிக்கவில்லை; அல்லது அம் மனுவில் கொடுமையிழைப்பைக் காரணமாகக் காட்டியிருக்கும் போது அஃது எவ்விகையிலும் மன்னிக்கப்படவில்லை என்றும்;

(ஆ.ஆ) மணமுறிவொன்று ஒத்திசைவைக் காரணமாகக் கொண்டு கோரப்பட்டிருக்கும் போது, அதற்கான ஒப்புதல் வன் முறையால் அல்லது மோசடியால் அல்லது தகாத் தூண்டுதலால் பெறப்படவில்லை என்றும்;

(இ) பிரிவு 11இன்கீழ் தாக்கல்செய்யப்படாத அம்மனு எதிர் மனுதாரர்தம் வஞ்சகக்கூட்டால் தாக்கல் செய்யப்படவோ தொடுக்கப்படவோ இல்லை என்றும்;

(ஈ) இந்நடைமுறையைத் தொடங்குவதில் எந்தவிதக் கால தாமதமும் ஏற்படவில்லை என்றும்;

(உ) நிவாரணத்தை அளிக்க, சட்டபூர்வத் தடை எதுவுங் கிடையாதென்றும் உள்நிறைவடைகின்றபோது தக்க தீர்ப்பாணையை வழங்கும்.

2. இச்சட்டப்படி நீதிமன்றம் நிவாரணத்தை அளிக்கு முன்னர் வழக்கின் இயல்புகளையும், சூழ்நிலைகளையும் அனுசரித்துக்

கூடுமானவரையில் தரப்பினர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்தி வைப்பது அவசியமாகும்.

ஆனால். இது பிரிவு 13, உட்பிரிவு (1), கூறு (ii) கூறு (iii), கூறு (iv), கூறு (v), கூறு (vi). கூறு (vii) ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள காரணங்களைக்கொண்டு நிவாரணம் கோருவதற்குப் பொருந்தாது.

(3) நீதிமன்றத்திற்கு உதவும் வகையில் தரப்பினர்கள் சமாதானமாகப் போகவிரும்பினால் அல்லது அவர்கள் சமாதானமடைவதை நீதிமன்றம் விரும்பினால், அந்நடைமுறைகளைப் பதினைந்து நாள்களுக்கு மேல் நீடிக்காத வகையில் தள்ளிவைத்து, தரப்பினர்கள் குறிப்பிடும் நபர் அல்லது அவர்கள் அவ்வாறு குறிப்பிடத் தவறும்போது நீதிமன்றம் நியமிக்கும் நபரிடத்தில் நீதிமன்றம் வழக்குப் பற்றிய விவரங்களை அறிவித்துக் கணவன், மனைவியிடத்து உடன்பாடு ஏற்பட்டதா, இல்லையா, விளைவு என்னவென்பதை அறிவிக்கக்கோரி வழக்கை முடிவு செய்யும்.

(4) திருமணத்தைக் கலைத்துத் தீர்ப்பாணை வழங்கும் வழக்கு ஒவ்வொன்றிலும் நீதிமன்றம் அவ்வழக்குத் தொடர்புடைய நகலைத் திருமணத் தரப்பினருக்கு வழங்குதல் வேண்டும்,

## உட்கூறு (ஆ) : மன்னிப்பு அல்லது மறைமுக ஆதரவு

கணவனோ மனைவியோ அயல்புணர்ச்சி, கைவிடுப்பு, கொடுமை இழைப்புப் போன்ற மனையறத் தொடர்புடைய குற்றங்களை இழைத்திருக்கும்போது, அவர்களில் பாதிக்கப் பட்ட நபர் எவரும் அத்தகைய குற்றங்களை மன்னிக்கவோ மறைமுகமாக ஆதரிக்கவோ செய்யின் அவர்கள் இப்பிரிவின்கீழ் நிவாரணத்தைப் பெறுதல் இயலாது.[120]

## எ-டு

மனைவியின் நடத்தையை ஐயுறும் கணவன் குழந்தைகளது பிறப்பை ஏற்பதும், அதை நகராட்சி அதிகாரிகளுக்கு அறிவித்துப் பதிவு செய்வதும், மாமனார், மாமியாரை வரவழைத்து இனிப்பு வழங்குவதும், எந்த உதவியாளனுக்கும் தனது மனைவிக்

கும் கள்ளத் தொடர்பு இருக்கலாம் என்று ஐயுற்றானோ அவனைவிட்டே தன் மனைவிக்குப் பணிவிடை செய்ய வைப்பதும் கணவன் ஒருவன் மனைவியின் அயல்புணர்ச்சிக் குற்றத்தை மன்னிப்பதாகும்.[121]

## உட்கூறு (இ): வஞ்சகக்கூட்டு (Collusion)

இப்பிரிவின் கீழ் நிவாரணமொன்றைப் பெற உண்மையான காரணமொன்று தேவையானதாக இருக்கும்போது கணவன், மனைவி இருவரும் இல்லாததும் பொய்யானதுமான காரணங்களைக் கொண்டு நிவாரணம் பெற உடன்படுவது வஞ்சகக்கூட்டு எனப்படும்.[122]

## உட்கூறு (ஈ): காலதாமதம் (Delay)

இச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் மனு ஒவ்வொன்றையும் உரிய காலத்தில் தாக்கல் செய்ய வேண்டும். காலங் கடந்து தாக்கல் செய்யப்படும் மனுவை உரிய காரணத்துடன் விளக்கித் தாக்கல் செய்யின் மனு ஏற்கப்படும்;[123] இல்லையெனில் மனு தள்ளுபடி செய்யப்படும்.

## உட்பிரிவு (2): உடன்பாடு (Reconciliation)

இவ்வுட்பிரிவுப்படி நீதிமன்றம் வழக்கு ஒவ்வொன்றிலும் கணவன், மனைவிக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்தி வைக்க முயல்வது மிகவும் அவசியமாகும். நீதிமன்றம் இப்பணியினின்று தவறும்போது, அது அதன் உண்மையான கடமையிலிருந்து தவறுவதாகக் கருதப்படும்.[124] ஆனால், நீதிமன்றமொன்று இப்பணியைச் செய்ய மறுத்ததால், அது வழங்கிய தீர்ப்பாணை செல்லுபடியற்றதாய் ஆகிவிடாது.

**மணமுறிவு மற்றும் இதர நடைமுறைகளில் எதிர்மனு-தாரருக்கான நிவாரணம்**

23அ. திருமண முறிவு, நீதிவழிப் பிரிந்துறைதல், மணவாழ்வுரிமை மீட்டளிப்பு போன்றவற்றிற்கு மனுச் செய்யப்பட்டிருக்கும் போது எதிர்மனுதாரர் அம்மனுவை எதிர்ப்பதுடன் அதற்கு எதிராக மனுதாரரின் அயல்

புணர்ச்சி, கொடுமையிழைப்பு, கைவிடுப்பு போன்றவற்றைக் காரணங்காட்டி அவற்றிற்காகத் தனக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று எதிர்கோரிக்கை விடுக்கலாம். மனுதாரரின் அயல் புணர்ச்சி, கொடுமையிழைப்பு, கைவிடுப்பு போன்றவை மெய்ப் பிக்கப்பட்டால், எதிர்மனுதாரரான கணவன் அல்லது மனைவி இச்சட்டப்படி மனுச் செய்திருந்தால் எத்தகைய நிவாரணத்தை அளிக்கக்கூடுமோ அத்தகைய நிவாரணத்தை அளிக்க வேண்டும்.

**24.** இச்சட்டப்படி அதிகாரம் செலுத்தும் நீதிமன்றம் கணவன் அல்லது மனைவிக்குச் சூழ்நிலைக்கேற்ப அவர்தம் பராமரிப்பு

**வழக்கிடை வாழ்க்கைப் பொருளுதவியும் வழக்குச் செலவினங்களும்**

அல்லது வழக்கிற்குத் தேவையான செலவினங்களுக்கு அவர்தம் தனிப் பட்ட வருமானம் போதியதாக இல்லாதிருக்கும்போது அவர்களில் கணவனோ மனைவியோ விண்ணப் பம் செய்வதன்மூலம் வழக்குச் செலவினங்களையும், வழக்கு முடியும்வரை திங்கள்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையையும் அளித்துவர எதிர்மனுதாரருக்குக் கட்டளையிடும்;அத்தொகையை நீதிமன்றம் மனுதாரர், எதிர்மனுதாரர்தம் தனிப்பட்ட வருமானங் களைக் கணக்கிடுவதன்மூலமே நிருணயம் செய்யும்.

## நோக்கம்

இப்பிரிவு வறுமைத் துயரால் தங்களைத் தாங்களே பரா மரித்துக் கொள்ளவியலாது வாடும் கணவன், மனைவியைப் பாது காக்கும்பொருட்டு ஏற்படுத்தப்பட்டதாகும்.[125]

## தனிப்பட்ட வருமானம்

தனிப்பட்ட வருமானம் என்பது ஒருவருக்கு அவரது சொத்தின் மூலமோ பணியின் மூலமோ வரும் ஊதியமாகும்; நண்பர்கள் அல்லது உறவினர்கள் கொடுத்துதவும் தொகையோ நிலை வைப்புத் தொகையோ (Fixed Deposit) மனைவியொருத்திக்குத் 'தாலி' போன்ற மங்கலவணிகலன்கள் மூலம் கிடைத்த வருமா னமோ தனிப்பட்ட வருமானங்களாகா.

## மேல்முறையீட்டுக் காலத்தில் இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவி

இப்பிரிவின்கீழ் வழக்கொன்றில் கீழமை நீதிமன்றம் கணவன் அல்லது மனைவிக்கு இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவியை அளித்துவரக் கட்டளையிட்டிருக்கும்போது எதிர்மனுதாரர் வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யும்போதும், அவர் இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவியை அளித்துவரவே வேண்டும்.[126]

## இந்துத் திருமணச் சட்டம், பிரிவு 24-உம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 125-உம்

மனைவியொருத்திக்கு வாழ்க்கைப் பொருளுதவி வழங்குவது தொடர்பாகக் குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 125-இன் கீழ் குற்றவியல் நீதித்துறை நடுவரொருவர் பிறப்பிக்கும் கட்டளையை இந்துத்திருமணச்சட்டம், பிரிவு 24-இன்கீழ் உரிமையியல் நீதிபதி ஒருவரால் வழங்கப்படும் தீர்ப்பாணை இடையிட்டுத் தடை செய்யாது.

அதேபோன்று மனைவியொருத்திக்கு இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவி வழங்குவது தொடர்பாக இந்துத் திருமணச் சட்டம், பிரிவு 24-இன் கீழ் உரிமையியல் நீதிபதி ஒருவர் பிறப்பிக்கும் தீர்ப்பாணையைக் குற்றவியல் நடை முறைச் சட்டம் பிரிவு 125-இன் கீழ், குற்றவியல் நீதித்துறை நடுவர் வழங்கும் கட்டளையும் இடையிட்டுத் தடை செய்யாது.[127]

## மதமாற்றமும் இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவியும்

கணவன், மனைவி இருவரில் ஒருவர் இந்து மதத்தை விடுத்து வேறு மதத்திற்கு மாறிவிடுவதால், இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவி வழங்கும் கடப்பாட்டினின்றும் தப்பிவிட முடியாது; மதம் மாறியபோதும் திருமண உறவு நீடிக்கவே செய்யும். ஆகையால், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவியை அளித்து வரவே வேண்டும்.[128]

### வாழ்க்கைப் பொருளுதவியுடன் கல்விச் செலவையும், வழக்குச் செலவினங்களுடன் பயணச்செலவையும் உடன் சேர்த்தல் கூடாது

இப்பிரிவின் கீழ், தரப்பினர் ஒருவர் வாழ்க்கைப் பொருளுதவியும், வழக்குச் செலவினமும் கோரும்போது அவர் வாழ்க்கைப் பொருளுதவியுடன் கல்விக்காகும் செலவையும்,வழக்குச் செலவினங்களுடன் நீதிமன்றத்திற்கு வந்துபோன செலவையும் உடன் சேர்த்துக் கோருதல் கூடாது.[129]

**நிலையான வாழ்க்கைப் பொருளுதவியும் பராமரிப்பும்**

25. 1) இச்சட்டப்படி அதிகாரம் செலுத்தும் நீதிமன்றத்தில் தீர்ப்பாணை வழங்கும்போதோ அதற்குப் பின்னரோ வாழ்க்கைப் பொருளுதவி கோரி கணவன் அல்லது மனைவி மனுச் செய்யலாம்; நீதிமன்றமும் அம்மனுவின் பேரில் மனுதாரரின் பராமரிப்புக்காகவும், உதவிக்காகவும் ஒரு தொகையை மொத்தமாகவோ மனுதாரரின் ஆயுள் வரை மாதாமாதமோ அல்லது பருவந்தோறுமோ செலுத்திவர எதிர்மனுதாரருக்குக் கட்டளையிடும். நீதிமன்றம் அவ்வாறு கட்டளையிடும்போது எதிர்மனுதாரரின் தனிப்பட்ட வருமானம், அவருக்குள்ள வேறு உடைமைகள்; மனுதாரரின் தனிப்பட்ட வருமானம், அவருக்குள்ள வேறு உடைமைகள்; மனுதாரர், எதிர்மனுதாரர் தம் நடத்தை,இதர சூழ்நிலைகள் ஆகியவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளும். நீதிமன்றம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டிய தொகைக்காக அவரது அசையாநிலைச் சொத்து மீது பிணையை ஏற்படுத்தலாம்.

2) உட்பிரிவு (1)இன்படி கட்டளை பிறப்பிக்கப்பட்ட பிறகு தரப்பினர்கள் நிலையில் மாறுதல் இருந்தால் அவர்கள் நீதிமன்றத்தில் மனுச்செய்வதன்மூலம், நீதிமன்றம் தாம் ஏற்கனவே பிறப்பித்த ஆணையை மாற்றவோ திருத்தவோ நீக்கவோ செய்யலாம்.

3) இப்பிரிவின்கீழ் தீர்ப்பாணை பெற்றவர் மறுமணம் செய்து கொண்டிருக்கும் போதும் அல்லது அவர் மனைவியாக இருக்கும்

நிலையில் கற்பை இழந்திருக்கும்போதும் அல்லது அவர் கணவ ராக இருக்கும் நிலையில் வேறொரு பெண்ணோடிணைந்து காமுறு புணர்ச்சியிலீடுபட்டிருக்கும்போதும் நீதிமன்றம் தாம் ஏற்கனவே பிறப்பித்த ஆணையை மாற்றவோ திருத்தவோ நீக்கவோ செய்யலாம்.

**குழந்தைகளின் பாதுகாப்பு**

26. இச்சட்டப்படி நடக்கும் நீதிமன்ற நடைமுறைகளில் நீதி மன்றம் அவ்வப்போது இளங்குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் படிப்புத் தொடர்பாக நியாயமாகத் தோன்றும் வகையில் இடைக் காலக் கட்டளைகளை வழங்க வும், தீர்ப்பாணையில் அத்தகைய வகையங்களை ஏற்படுத்தவும் செய்யலாம். தீர்ப்பாணை ஏற்பட்ட பிறகும் இளங்குழந்தைகளது பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் படிப்புத் தொடர்பாக நியாயமான கட்டளைகளை வழங்க மனுச் செய்யலாம்; இது தொடர்பாக நீதி மன்றம் தாம் முன்னர்ப் பிறப்பித்த கட்டளைகளையும், தீர்ப்பாணை களையும் அவ்வப்போது தள்ளுபடி செய்யவும் நீக்கவும் மாற்ற வும் செய்யலாம்.

## குழந்தைகள்

இப்பிரிவின்கீழ் குழந்தைகள் என்பதில் முறைமணப் பிறப்புக் குழந்தையும் (Legitimate Child), முறையற்றமணப் பிறப்புக் குழந்தையும் (Illegitimate Child) அடங்கும்.

## முன்தீர்ப்புத் தடை (Res Judicata)

இந்து இளவர் மற்றும் காப்பாளர் சட்டம் (Hindu Minority and Guardianship Act) பிரிவு 10, உடன் பிரிவுகள் 7 மற்றும் 11இன்படி தமது வயதுவராத குழந்தைக்குத் தம்மைக் காப்பாள ராக நியமிக்கவேண்டி, பெண்ணொருத்தி மனுச்செய்தது தள்ளுபடி யாகியிருக்கும்போது, அவள் இந்துத் திருமணச் சட்டம், பிரிவு 13, உடன்பிரிவு 26இன் கீழ் மீண்டும் மனுச் செய்யலாம். அதற்கு முன்தீர்ப்பு தடையாக இராது.[130]

## குழந்தையின் பாதுகாப்பு

குழந்தையொன்றை யாரிடம் ஒப்படைத்தால் அது தக்க பாதுகாப்போடு இருந்துவரும் என்பதை நீதிமன்றம் ஆழ்ந்து ஆய்ந்தபிறகே அதைத் தக்கவரிடம் ஒப்படைக்கும்.

குழந்தையொன்றைத் தாயின் பாதுகாப்பிலோ தந்தையின் பாதுகாப்பிலோ ஒப்படைப்பது நீதிமன்றத்தின் உளத்தேர்வைப் பொறுத்ததாகும்.[131]

குழந்தையொன்றின் பாதுகாப்பைத் தம்மிடம் விட்டுவிட வேண்டுவோர், உண்மையிலேயே அதன் நலனில் அக்கறை கொண்டவராக இருத்தல் வேண்டும். அஃதல்லாது சில சட்டக் கடப்பாடுகளினின்றும் தப்புவதற்காகத் தரப்பினர் எவரும் அவ்வாறு குழந்தையின் பாதுகாப்புப் பொறுப்பை வேண்டின், நீதிமன்றம் அதை ஏற்காது.[132]

## மேல் முறையீடு

இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் இடைக்காலக் கட்டளைகளைத் தவிர, இதர கட்டளைகளை எதிர்த்து மேல்முறையீடு செய்ய லாம்.[133] உயர்நீதிமன்றம் விரும்பினால் இடைக்காலக் கட்டளை களையும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் (Civil Procedure Code), பிரிவு 115இன்கீழ் இதை ஒரு சீராய்வாக எடுத்துக் கொண்டு விசாரிக்கலாம்.[134]

27. **உடைமைப் பகிர்மானம்** — இச்சட்டப்படி ஏற்படும் நடைமுறைகளில் தீர்ப்பாணை ஏற்படும்போது கணவன், மனைவிக்குத் திருமணத்தில் அல்லது திருமணக் காலங்களில் அன்பளிப்பாக அளிக்கப்பட்டு அவர்கள் இருவருக்கும் பொதுவாக இருந்துவரும் உடைமை களைப் பொறுத்து நீதிமன்றம் நியாயமாகத் தோன்றும் ஏற்பாடு களைச் செய்யலாம்.

இப்பிரிவு மணமுறிவுக்குப் பிறகு தனித்தனியே பிரிந்துறையும் கணவன், மனைவி திருமணக்காலங்களில் அளிக்கப்பட்ட

அன்பளிப்புகளை எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்பது பற்றிய செய்திகளை உரைக்கின்றது.[135]

இதன்படி மனைவி ஒருத்திக்கு மணமுறிவுக்குப் பிறகு அவளது உடைமைகளை அளிக்கின்றபோது, அவளுக்குத் திருமணத்தின் போது வரதட்சணையாக வழங்கப்பட்ட உடைமைகளையும் உடன் சேர்த்தே அளித்தல் வேண்டும்.[136]

## நீதிமன்றக் கடமை

இப்பிரிவின் கீழ் வழக்கை விசாரிக்கும் நீதிமன்றம், மண மக்களுக்குத் திருமணத்தின்போதோ திருமணக் காலங்களிலோ வழங்கப்பட்ட உடைமைகளைப் பற்றியன்றி இதர உடைமைகள் பற்றிய நடைமுறைகளை விசாரிக்கலாகாது. அதை வேறு சாதாரண நீதிமன்றங்களே விசாரிக்கும்.

**தீர்ப்பாணைகள் மற்றும் கட்டளைகளினின்று மேல்—முறையீடுகள்**

28. 1) இச்சட்ட நடைமுறைகளின்கீழ் பிறப்பிக்கப்படும் தீர்ப் பாணைகள் யாவும் உட்பிரிவு (3)-இற்கு உட்பட்டு மற்றைய முதலேற்பு உரிமையியல் ஆள்வரை நீதிமன்றத்தால் பிறப் பிக்கப்படும் தீர்ப்பாணையைப் போன்றே மேல் முறையீட்டிற்கு உரியதாக இருக்கும்; முதலேற்பு உரிமையியல் ஆள்வரை நீதி மன்றத்தின் தீர்ப்பினின்றெழும் மேல்முறையீடு, சாதாரணமாக எந் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுமோ அந்நீதிமன்றத்திலேயே இம் மேல்முறையீடும் தாக்கல் செய்யப்படும்.

2) இச்சட்ட நடைமுறைகளின் கீழ் பிரிவு 25 அல்லது பிரிவு 26இன்கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள் இடைக்காலக் கட்டளை களாக இருக்கும்போது அஃதும் உட்பிரிவு (3)-இற்கு உட்பட்டு மேல்முறையீட்டிற்கு உரியதாக இருக்கும். மற்றைய முதலேற்பு உரிமையியல் ஆள்வரை நீதிமன்றத்தின் தீர்ப்பினின்றெழும் மேல் முறையீடு சாதாரணமாக எந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் படுமோ அந்நீதிமன்றத்திலேயே இம்மேல்முறையீடும் தாக்கல் செய்யப்படும்.

3) இப்பிரிவின்கீழ் செலவினங்களைப் பொறுத்து மட்டும் மேல்முறையீடு செய்ய முடியாது.

4) இப்பிரிவின்கீழ் மேல்முறையீடு ஒவ்வொன்றையும் தீர்ப்பாணை அல்லது கட்டளை வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாள்களுக்குள்ளாகத் தாக்கல் செய்ய வேண்டும்.

## மேல்முறையீடுகள்

இப்பிரிவுப்படி,

(i) இச்சட்ட நடைமுறைகளில் வழங்கப்படும் தீர்ப்பாணைகளும்,

(ii) பிரிவுகள் 25, 26 ஆகியவற்றின்கீழ் வழங்கப்படும் கட்டளைகளும் மேல்முறையீட்டுக்கு உரியவையாகும்.

(iii) இடைக்காலக் கட்டளைகளும்,

(iv) செலவினங்களுக்கு மட்டிலுமான கட்டளைகளும் மேல் முறையீட்டுக்கு உரியனவாகா.

(v) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் தீர்ப்பாணை அல்லது கட்டளையை எதிர்த்து மேல்முறையீடு செய்யும்போது, அத்தீர்ப்பாணை அல்லது கட்டளை வழங்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாள்களுக்குள்ளாக மேல்முறையீட்டைத் தாக்கல் செய்திடுதல் வேண்டும்.

## பொதுமுகத் தீர்ப்புரை (Judgment in rem)

இந்நடைமுறைகளின் கீழ் வழங்கப்படும் தீர்ப்பு, வழக்கின் தரப்பினர்களை மட்டுமல்லாது மற்றையோரையும் கட்டுப்படுத்தும்.[137]

## உட்பிரிவு (1) :

இவ்வுட்பிரிவு கீழமை நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்படுகின்ற தீர்ப்பாணைகள் மற்றும் கட்டளைகளை எதிர்த்து மேற்கொள்ளப் படுகின்ற மேல் முறையீடுகளைப் பற்றி உரைக்கின்றது.

## உட்பிரிவு (2) :

இவ்வுட்பிரிவு, 1976-ஆம் ஆண்டுச் சட்டத் திருத்தத்தின் மூலம் இணைக்கப்பட்டது.

இப்பிரிவை இணைத்ததன் மூலம் நிலையான வாழ்க்கைப் பொருளுதவி (Permanent alimony), இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவி (Maintenance pendente lite), வழக்குச் செலவினங்கள் (Expenses of the Proceeding), குழந்தைகளது பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்த நடைமுறைகளில் உயர்நீதி மன்றங்களுக்கிடையே நிலவிவந்த கருத்து வேறுபாடு அகன்றது.[138]

## உட்பிரிவு (4) : காலவரையறை (Limitation)

இவ்வுட்பிரிவுப்படி தீர்ப்பாணை அல்லது கட்டளையை எதிர்த்து மேல்முறையீடு செய்யும்போது அத்தீர்ப்பாணை அல்லது கட்டளை வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாள்களுக்குள்ளாக மேல்முறையீடு செய்தல் வேண்டும். காலங்கடந்து மேல்முறையீடு செய்யும்போது அதற்குரிய காரணத்தை விளக்கியுரைக்க வேண்டும்.[139] இல்லையெனில் காலதாமதம் காரணமாக மேல்முறையீடு ஏற்கப்படமாட்டாது.

**28அ. தீர்ப்பாணைகள் மற்றும் கட்டளைகளின் செயற்பாடுகள்**

இச்சட்ட நடைமுறைகளின்கீழ் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணைகளையும் கட்டளைகளையும் மற்றைய முதலேற்பு உரிமையியல் ஆள்வரை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பாணைகளையும் கட்டளைகளையும் போன்றே செயற்படுத்தல் வேண்டும்.

# இயல் 6

# விலக்கங்களும் நீக்கங்களும்

**விலக்கங்கள்**

29. 1) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் இந்துக்களிடையே நடந்தேறிய திருமணமொன்று மற்றைய வகையில் செல்லுந்தன்மையதாக இருக்கின்றபோது தரப்பினர்கள் ஒரே கோத்திரம் அல்லது ஒரே பிரவரம் அல்லது வெவ்வேறு மதங்கள் அல்லது ஒரே சாதியின் வெவ்வேறு உட்பிரிவுகளைச் சார்ந்தவர்களாக இருக்கின்ற காரணம் ஒன்றால் மட்டும் செல்லாததாகிவிடாது.

2) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அல்லது பின்னர் நடந்த திருமணமொன்றை அங்கீகரிக்கப்பட்ட வழக்க நெறியால் கலைத்துக்கொள்வதை இச்சட்டம் தடை செய்யாது.

3) இச்சட்டம் நடைமுறைக்கு வரும்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்து முடிவடையாதிருக்கும் திருமணம் செல்லாமை, திருமண நீக்கம், திருமணக்கலைப்பு மற்றும் நீதிவழிப் பிரிந்துறைதல் முதலியவற்றின் நடைமுறைகளை இச்சட்டம் பாதிப்புறச் செய்யாது.

4) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அல்லது பின்னர்ச் சிறப்புத் திருமணச் சட்டம், 1954 (43/1954) இன்படி இந்துக்களிடையே நடத்தப்பட்ட திருமணங்களை இச்சட்டம் எவ்விதத்திலும் பாதிக்காது.

30. நீக்கப்பட்டது.

# மேற்கோள் பட்டியல்


1. இந்துச்சட்டம், செந்தில்நாதன் (ச). மு. ப. திச. 1973, சென்னை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

2. களவியல் என்ற இறையனார் அகப்பொருள், நக்கீரனார், ம.ப. அக். 1976, சென்னை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிமிடெட்.

3. நகரத்தார் திருமண நடைமுறை, அண்ணாமலை (பழ), மு. ப. 1984, சென்னை, ராமர் கார்ப்பரேஷன்.

